# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■ சுடர்: 29 ■ கதிர்: 013 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 23, திங்கள் 09.12.2013

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




இடியுடன் கூடிய மழை

28C 24C




பக்கம் 06

பா.ஜ.க. ஏறுமுகம்



பக்கம் 07

இராணுவத்துக்குள் மோதல்



பக்கம் 09

மாற்றுத் திறனாளிகளுக்கென அலுவலகம் அமைக்க கோரிக்கை



பக்கம் 23

வெற்றியை நெருங்கும் ஆஸி


# இலங்கை மீது விசாரணை ரோமில் சனியன்று ஆரம்பம்

## இறுதிப்போரில் அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் நாடுகளின் பங்களிப்புக் குறித்தும் ஆராய்வு

ரோம்.டிசெம்பர் 9

இத்தாலி தலைநகர் ரோமைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'நிரந்தர மக்கள் சபை' இலங்கைப் போரில் நடைபெற்ற மனிதப் படுகொலைகள், உலக நாடுகளின் பங்களிப்புகள், சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்ட தோல்விகளுக்கான காரணம் என்பன குறித்து தனது இரண்டாவது விசாரணையை ஆரம்பித்துள்ளது.

உலகின் புகழ்வாய்ந்த யூரர் குழுவினரும், சர்வதேச மனித உரிமைகள் குழுவினரும் இன்னும் சில தன்னார்வத் தொண்டு அமைப்புகளும் இணைந்து இந்த விசாரணையை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்துள்ளன.



குறித்த சபையின் இலங்கை மீதான விசாரணைகளின் முதல் அமர்வு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்றிருந்தது. இதன் இரண்டாவது அமர்வே தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த அமர்வின் போரின் போது பாதிக்கப்பட்டவர்களின் நேரடிச் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. அத்துடன் சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமைக் குழுக்களால் நிரந்தர மக்கள் சபைக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், அறிக்கைகள், ஆதாரங்கள் என்பனவும் ஆராயப்படவுள்ளன.

இந்த அமர்வில் 2002 ஆம்

21 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுமி சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ். அச்சுவேலி வடக்குப் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமி ஒருத்தி உயிரிழுந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவானந்தன் தர்மினி (வயது-3) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## பல்கலைக்கு 2 கட்டங்களாக மாணவர் இணைப்பு

கொழும்பு, டிசெ. 9

இம்முறை பல்கலைக் கழகத்துக்கு தெரிவான மாணவர்களை 2 கட்டங்களாக அடுத்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு இணைத் துக்கொள்ளவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களே பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று உயர் கல்வி அமைச்சின் மாணவர்கள் தொடர்

21 ஆம் பக்கம் பார்க்க

## அனைத்துலக விசாரணைக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பு

### உடனடி உள்ளக விசாரணைக்கு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 9

'இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுப்பொறுப்பு. இதைத் தவிர்க்க வேண்டுமாயின் சர்வதேசம் கூறுவதைப்போல் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்ளக விசாரணையை உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டும்" என் றும் ஐ.தே.க. வலியுறுத்தியது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளரான சலோகா பெயானி முதல் இலங்கைக்கு பயணம் செய்த அமெரிக்க உயர் குழுவினர் வரை போர்க்குற்றம் தொடர்பில் அரசு உள்ளக விசாரணையைமேற்கொள்ள வேண்டும் என்றே வலியுறுத்தியுள்ளனர்.

கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளும் "2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சுயாதீனமாக உள்ளக விசார ணையை இலங்கை நடத்த வேண்டும் என்றும் இல்லையேல் சர்வதேச விசாரணை உறுதி " என்றும் காலக்கெடு விதித்து, எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதுபோன்ற அழுத்தங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்ததாவது:

"சர்வதேசம் நாட்டுக்கு அழுத்தங்கள் கொடுக்கும் வகையி

21 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில் இன்னும் 34 நலன்புரி நிலையங்கள்

### ஒருங்கிணைப்புக் குழு அறிக்கையால் அரசின் பொய் அம்பலம்

யாழ்ப்பாணம்.டிசெ.9

இலங்கையில் நலன்புரி நிலையங்களே இல்லை என்று இலங்கை அரசு உலகுக்கு கூறி வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் மட்டும் இன்னும் 34 நலன்புரி நிலையங்கள் உள்ளன என்று யாழ்.மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

34 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 232 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 430பேர் வசித்து வருகின்றனர் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி 'மனிக்பாம்' நலன்புரி நிலையம் மூடப்பட்ட பின்னர் இலங்கையில் நலன்புரி நிலையங்களே இல்லையென் றும், அகதிகள் என்று எவருமில்லை எனவும் சர்வதேசத்துக்கு இலங்கை அரசு அறிவித்திருந்தது.

ஆனால் யாழ். மாவட்ட செயலகத்தின் இந்த வருடத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் 34 நலன்புரி நிலையங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 65 நலன்புரி நிலையங்களும், 2010 ஆம் ஆண்டு 61 நலன்புரி நிலையங்களும், 2011 ஆம் ஆண்டு 54 நலன்புரி நிலையங்களும், 2012 ஆம்

21 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு கால அவகாசம் வழங்காதது தவறே

### வடமாகாண சுகாதார அமைச்சு அறிக்கை

யாழ்ப்பாணம்.டிசெ.9

குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிட்ட கால அவகாசத்தை அந்த மக்களுக்கு வழங்கியிருக்க வேண்டும் சிறிய கிராமம் ஒன்றுக்குள் பெருந்தொகையான சுகாதார உத்தியோகத்தர்கள் ஒரே நாளில் சென்று குடும்பக் கட்டுப்பாடு முறைகளை அறிமுகப்படுத்துவது முற்றாக தவிர்க்க வேண்டிய விடயம். ஒரேநாளில் ஒரே இடத்தில் பெருந்தொகையான உத்தியோகத்தர்கள் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தச் சென்றதாலேயே அது குறித்து தவறான அபிப்பிராயம் மக்கள் மத்தியில் உருவானது. - இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய மூன்று கிராமங்களில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி குடும்பக் கட்டுப்பாடு முறை ஒன்று அங்குள்ள தாய்மாருக்கு செய்யப்பட்டது.

இந்தத் திட்டம் கட்டாயத்தின் பேரிலேயே பலருக்குச் செய்யப்பட்டதாகப் பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கென வட மாகாண சுகாதார அமைச்சு விசாரணைக் குழுவொன்றை அமைத்திருந்தது. அந்தக் குழுவின் விசாரணையின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றை நேற்று வவுனியாவில் அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஊடகங்களுக்கு வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் மேலும்

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் தொடர்பில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

திருகோணமலை.டிசெ.9

சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை செவ்வாய்க் கிழமை திருகோணமலை நகரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் நாளை செவ்வாய்க் கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு காணாமற்போனோர் தொடர்பான விடயங்களை வலியுறுத்தி, அவர்களுக்கு நீதி கோரியும் நாளைய தினம் ஜனநாயக ரீதியில் மாபெரும் கவனவீர்ப்

21 ஆம் பக்கம் பார்க்க

# விசாரணையைத் துரிதப்படுத்த வழக்குகள் கணினி மயமாகும்

## *நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு*

கொழும்பு,டிசெ.9

நீதிமன்றங்களில் குவிந்துள்ள வழக்குகளை துரிதப்படுத்த கணினி தொழில்நுட்பத்தூடாக நீதிமன்றங்களிடையே வழக்குகளை பரிமாறிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறுவர்கள் மற்றும் இளம் குற்றவாளிகள் தொடர்பில் அடுத்த வருடத்தில் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலிஸார் குரூரமாக சந்தேக நபர்களை தாக்கி அது தொடர்



பான மனித உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் அந்த வழக்குக்கு முன்னிலையாகாமல் இருக்க சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது. சர்வதேச விஞ்ஞாபனத்தில் கைச்சாத்திட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

பகுப்பாய்வுத் திணைக்களம் நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து டி. என். ஏ. சாட்சிகளை பெறும் நடவடிக்கையில் கால்பதித்துள்ளது.

பல குற்றங்களுடன் தொடர்புடைய சாட்சிகளை பெற டி. என். ஏ. பரிசோதனை பிரதானமாகும். 1390 மில்லியன் ரூபா செலவில் புதிய பகுப்பாய்வுத்திணைக்கள ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டி னார்.

2014 ஜனவரி முதல் நீதிமன்றங்களில் இருந்து வரும் டி. என். ஏ. பரிசோதனை தொடர்பான ஆய்வுகளை ஏற்று பரிசோதிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளோம்.

அதனூடாக குற்றவாளிகளை மிகச் சரியாக அடையாளம் காணமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 632 முஸ்லிம் குடும்பங்களுக்கு முல்லையில் நிரந்தரக் காணிகள்

### *கிராம அலுவலகங்களில் அறிவித்தல்கள்*

முல்லைத்தீவு மாவட்டத்தில் 632 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்கான அறிவித்தல்கள், அங்குள்ள கிராம சேவையாளர் அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே காணி பகிர்ந்தளிப்பின்போது தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தமக்கு காணிகள் வழங்காது முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படக் கூடாது என்று தமிழ் மக்கள் போராட்டம் நடத்திய நிலையிலும் அதிகாரிகள் சிலரின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். முல்லைத்தீவு முள்ளிய வளையில் காடுகளை அழித்து முஸ்லிம் மக்களை குடியேற்றும் நடவடிக்கைகள் கடந்த ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது முல்லைத் தீவு மாவட்டத்தில் காணியற்ற தமிழ் மக்கள் இதனை எதிர்த் தனர்.

இதனால் காணிகள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

இதன் பின்னர் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்காக காணிக் கச்சேரி நடத்தப்பட்டது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட 632 குடும்பங்களுக்கே தற்போது காணி வழங்கப்படுவதற்கான அறிவித்தல் கிராம சேவையாளர் அலுவலகங்களில் காட் சிப்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக இந்த முஸ்லிம் மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரியவருகிறது. (ஐ-5)

## மார்கழித் திருவெம்பாவை இன்று ஆரம்பம்

சைவ ஆலயங்களில் மார்கழித் திருவெம்பாவை பூசை வழிபாடுகள் இன்று ஆரம்பமாகின்றன.

உதயத்தின் போது திருப்பள்ளிஎழுச்சி,திருவெம்பாவை பாடி இறைவனைதொழும் இந்த வழிபாடு தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

சிவன் கோவில்களில் மிகவும் சிறப்பாக நடைபெறும் இந்த பூசைகள் இந்தியாவின் சிதம்பரத்திலும், ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன் கோவிலிலும் பெருந் திருவிழாக்களாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மருதனார் மடத்தில் வெடிபொருள்கள் மீட்பு

வலி.வடக்கு, டிசெ. 09

மருதனார்மடம் ஆச்சிரமத்துக்கு அருகில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் இருந்து நேற்று மாலை ஒரு தொகுதி வெடிபொருட்களை படையினர் மீட்டுள்ளனர்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் வரம்பு கட்டுவதற்காக மண் வெட்டியபோது குறித்த ஆயுதங்கள் வெளிப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டு படையினருக்கு தகவல் கொடுத்தனர். அங்கு வந்த படையினரும் குண்டு செயலிழக்கவைக்கும் பிரிவினரும் வெடிபொருள்களை மீட்டனர்.

20 கைக்குண்டுகள், 40 டெட்டனேட்டர்கள், வெடி குண்டுகளை வெடிக்க வைக் கப் பயன்படுத்தப்படும் பற்றறி என்பன குறித்த குழியில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-86)

## சித்திரவதைகள் குறித்த விசாரணைகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 09

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உதவியுடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இந்த மாத முற்பகுதியில் சித்திரவதைகள் தொடர்பான தேசிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தபோதும் குறித்த காலப்பகுதியில் அவை நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. மீள ஆரம்பிக்கும் திகதி குறித்து அறிவிக்கப்படவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உதவியுடன். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்என்று,இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் ஈ.ஆனந்தராஜா யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த விசாரணைகள் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் முன்னெடுக்கப்படும் என்றும், இதற்குரிய வகையில் இந்த மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்படும் என்றும் அறிவிக் கப்பட்டது. எனினும் குறித்த திகதியில் அவை நடத்தப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த விசாரணை பிற் போடப்பட்டுள்ளதாகவும் எப்போது அது நடைபெறும் என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-5)

## பால்மா விளம்பரங்கள் காட்சிப்படுத்தத் தடை

### *வைத்தியசாலைப் பிரதேசத்தில்*

கொழும்பு.டிசெ.9

பால்மாவை மேம்படுத்தும் எந்தவொரு விளம்பரப் பலகைகளையும் வைத்தியசாலை வளவுகளில் காட்சிப்படுத்தக் கூடாது என்று சுகாதார அமைச்சு வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

சில பால்மா நிறுவனங்கள் வைத்தியசாலைகளுக்கு உதவிகளைச் செய்து விட்டு பால்மாவின் பெயரை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்துகின்றன.

அதன் மூலம் பால்மாவைப் பிள்ளைகளுக்கு வழங்க பெற்றோர் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

குழந்தை பால் உணவு, சோயா பால் பால்மா, மோல்டட் அடங்கிய பால், பாலூட்டும் போத்தல்கள் போன்றவை வைத்தியசாலை சுற்றாடலில் தடை செய்யப்பட வேண்டும் என்று வைத்தியசாலை அதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் தாய்ப்பால் வழங்கும் சிறந்த நாடாக இலங்கை சாதனை படைத்துள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## சடலம் மீட்பு

காரைநகர் கிழக்குக் கடற்கரையிலிருந்து மீனவர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

காரைநகர் மாப்பாணவுரியைச் சேர்ந்த க.நாகசற்பராசா (வயது 55) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் சனிக்கிழமை தொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றபோதே அவரது சடலம் கடற்கரையில் காணப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸாரிடமும் கிராமசேவையாளரிடமும் முறைப்பாடு செய்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தினை யாழ் போதனா வைத்தியசா லைக்கு எடுத்துச்சென்றனர். (ஐ-250)

## பொது நிகழ்வுகளின் போது மாகாணக் கொடியை ஏற்றுக

### *வடமாகாண அமைச்சர் ஐங்கரநேசன் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 09

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட நிகழ்வுகளில் மாகாணக் கொடி ஏற்றப்படுவதில்லை. இனி வரும் காலங்களிலாவது மாகாணசபையின் கொடியை ஏற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அதற்கென தனியான கம்பம் ஒன்றை ஒதுக்குமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை, மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.



அவரைத் தேசியக் கொடியை ஏற்றி வைக்குமாறு ஒலிபெருக்கியில் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பை மாகாண அமைச்சர் நிராகரித்திருந்தார்.

இதன் பின்னர் தேசியக்கொடியை மடு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.அன்ரனியும், பாடசாலைக் கொடியை, பாடசாலை அதிபரும் ஏற்றினர். மாகாணக் கொடி ஏற்றுவதற்குரிய கம்பம் அங்கு நடப்பட்டிருக்கவில்லை.

இதன் பின்னர் தனது பிரதம விருந்தினர் உரையில் மாகாண அமைச்சர், இனிவரும் நிகழ்வுகளில் மாகாணக் கொடி ஏற்றுவதற்கு தனியானதொரு கம்பம் நடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கைப்பற்றியுள்ள நிலையில் இனியாவது சகல நிகழ்வுகளிலும் மாகாணக் கொடி ஏற்றப்படுவதை ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## ரயிலில் மோதுண்டு காட்டு யானை உயிரிழப்பு

திருகோணமலை,டிசெ.9

திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த இரவு நேர ரயிலில் அகப்பட்டு காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் கித்து ஊற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று உயிரிழந்த யானையை அந்த இடத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்



டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டனர். (ச)

## முதியவர் சடலமாக மீட்பு சந்தேகத்தில் ஐவர் கைது

விசுவமடு, டிசெ. 09

விசுவமடு, கண்ணகி நகரிலுள்ள மரக்காலையொன்றில் தொழில்புரிந்துவந்த ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, பிரமந்தனாறு, 16 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த சந்திரன் சின்னச்சாமி (வயது - 50) என்பவரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது சந்தேகத்தின் பேரில் கண்ணகி நகரைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

## 1,179 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாகக் கடமையாற்றி வந்த 1,179 பட்டதாரிகளுக்கு நேற்றுமுன்தினம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட் டன.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸின் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா, மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர்



விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## 'கூலரில்' எடுத்துவரப்படும் மரக்கறிகள் அழுகும் நிலை

வலி.தென்மேற்கு.டிசெ.9
கொழும்பிலிருந்து குடாநாட்டுக்கு கூலர் வாகனங்களில் பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு போன்ற மரக்கறிகள் எடுத்து வரப்படுவதால், அவை விரைவாக அழுகிச் சேதமடைகின்றன. இதனால் வியாபாரிகள் மட்டுமல்ல பாவனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.



குடாநாட்டிலுள்ள கடலுணவை எடுத்துச்செல்வதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் கூலர் வாகனங்களில் வருமானத்தைக் கருத்தில் கொண்டு பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய மரக்கறிகளை ஏற்றிவருவதால் அவை விரைவாகப் பழுதடைந்து துர்நாற்றம் வீசுகின்றது.
அழுகிய நிலையிலுள்ள மரக்கறிகளை அகற்ற வேண்டியிருப்பதால் சிறு சிறு வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்து கின்றது.
கொழும்பிலிருந்து குடாநாட்டுக்கு இப் பொருள்களை எடுத்து வரும் மொத்த வியாபாரிகள், சிறு சிறு வியாபாரிகளினதும், பாவனையாளர்களினதும் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள் ளனர். (வ-115)

"_"
சிறு சிறு வியாபாரிகளினதும், பாவனையாளர்களினதும் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும்

# மக்களுக்காகப் போராடியோரை நினைவுகூரவும் அனுமதி இல்லை

*கல்வி அமைச்சர் குருகுலராஜா ஆதங்கம்*



யாழ்ப்பாணம், டிசெ.9
எமது மக்களுக்காகப் போராடியவர்களை நாம் நினைவுகூர முடியாத நிலை. அதேவேளை சிங்களச் சிப்பாய்கள் புலித்தாக்குதலில் இருந்து மக்களைக் காப்பாற்றியிருக்கின்றனராம். அதற்கென ஒரு சிலை வைக்கப்பட்டு மிகவும் விரைவில் திறப்பு விழாவும் இடம் பெறவுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கூறினார்.
நல்லூர் பிரதேச கலாசார பேரவையின் 'கோவில் நகரம்' இறுவட்டு வெளியீட்டுவிழா நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாகாண கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது:
அரசு எம்மைத் தாக்க பல சூழ்ச்சிகளை மேற்கொள்கிறது. இராணுவத்தை வைத்து சொத்துக்களை அழிக்கின்றனர். அரச ஊழியர்கள் மாகாண சபைக்குப் பணிந்து நடப்பதா? ஆளுநருடன் பறப்பதா என்ற நிலையில் இருக்கின்றனர்.

"_"
அரசு எம்மைத் தாக்க பல சூழ்ச்சிகளை மேற்கொள்கிறது. இராணுவத்தை வைத்து சொத்துக்களை அழிக்கின்ற னர்.

எமக்காக எம்மைப் பாதுகாக்கப் போராடியவர்களை நாம் நினைவு கூர முடியாத நிலை அவர்களுக்காக ஒரு சுட்டியைத்தானும் ஏற்ற முடியாதிருக்கின்றது.
பொங்கல் தினத்திலாவது ஒரு சுட்டியை ஏற்றுங்கள். அப்போது இராணுவத்தினர் உங்களை எதுவும் செய்து விட முடியாது.
என்ன செய்தால் மக்களுக்கு சிறப்பான வாழ்க்கையைக் கொடுக்கலாம். சீரான கல்வியை வழங்கலாம் - எவ்வாறு இராணுவத்தை வெளியேற்றலாம் என்ற வகையில் மாகாண சபை முயற்சிக்கின்றது.
முன்பெல்லாம் எமது கலைகள் பற்றி அறியக்கூடியதாக இருந்தது. இன்று கோவில்களில் காணப்படும் கலைகள் குறித்து இந்து நாகரிகத்துறை மாணவர்களுக்கே தெரியாதுள்ளது. கோயில் நகரம் இறுவட்டு எமது கலைகள் குறித்து அறிந்துகொள்ள உதவுகின்றது. நல்லூர் பிரதேச செயலகம் கலாசாரப் பேரவையூடாக மேற்கொண்ட இந்தப் பணி எமது பூர்வீக வரலாறுகளில் முக்கியமானவற்றை அறிந்து கொள்ள உதவும் - என்று தெரிவித்தார். (வ-7)

## கண்காட்சியும் விற்பனையும் இன்று

வலி.தென்மேற்கு.டிசெ.9
வலி.தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் கண்காட்சியும் விற்ப னையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.
சமாசத் தலைவர் எஸ்.செல்வரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளி தரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கிராம அபிவி ருத்தித் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் கலந்துகொள்வார்.
கிராம மட்டங்களிலுள்ள மாதர் முன்னேற்றச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகிய அமைப்புக்களில் அங்கத்தவர்களாக இருப்பவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் நோக்குடன் இக்கண் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (வ-115-100)



நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த கோப்பாய் கந்தன்காடு இந்து மயானம் கனடாவில் உள்ள கோப்பாய் அபிவிருத்திச் சங்கத்தின்நிதியுதவியுடன் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (வ)

# இரசாயனப் பாவனை அதிகரிப்பே சிறுநீரக பாதிப்புக்குக் காரணம்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுகிறது*

யாழ்ப்பாணம், டிசெ.9
வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மிகப் பெரியளவில் அதிகரித்து வருகிறது. இரசாயனப் பாவனையின் அதிகரிப்பே இதற்குக் காரணம் என்று கூறியுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், விவசாயிகள் அதிகரித்த உரப் பாவனையை கட்டாயம் தவிர்த்தல் வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.
இது தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. அதில் மருத்துவ சங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
வெளிநாடுகள் பலவற்றில் இரசாயன பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரசாயனம் பயன்படுத்தும் தாய்லாந்து நாட்டில் ஒரு ஹெக்ரெயருக்கு 8 யுனிற் அளவு இரசாயனப் பதார்த்தமே தீவிரமாகப் பயன் படுத்தப்படுகிறது.
ஆனால் இலங்கையில் அதன் அளவு 35 மடங்கு அதிகரித்து 285 யுனிற் வரை பயன்படுத்தப்படுகிறது. இதனால் சிறுநீரக நோய் மட்டுமன்றி பல நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதிகரித்த உரம் , இரசாயனப் பயன்பாடு காரணமாக தண்ணீரிலும் நச்சுப் பதார்த்தம் கலந்து மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கிறது. இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் ஏராளமானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அத னால் அவற்றின் தரவுகள் அமைச்சால் இதுவரை கோவைப் படுத்தப்படவில்லை. அவற்றை அமைச்சு கோவைப்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் இந்த நோயின் தாக்கம் தீவிரமாகக் காணப்படுகிறது.
எனவே இரசாயன உரப் பாவனையை விவசாயிகள் கட்டாயம் மட்டுப்படுத்தி தமக்கும் ஏனையோருக்கும் இந்த நோய் வராமல் இருக்க செயற்பட வேண்டும்- என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.(வ-4)

"_"
இரசாயனம் பயன்படுத்தும் தாய்லாந்து நாட்டில் ஒரு ஹெக்ரெயருக்கு 8 யுனிற் அளவு இரசாயனப் பதார்த்தமே தீவிரமாகப் பயன் படுத்தப்படுகிறது.

# கோழிக் குஞ்சு விநியோகம் வலி.கிழக்கில் பாரபட்சம்

அச்சுவேலி, டிசெ.9
வாழ்வெழுச்சித் திட்டத்தில் கோழிக்குஞ்சு விநியோகத்தில் வலி.கிழக்கு பிரதேச பயனாளிகளுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. 50 பயனாளிகளுக்கு கொல்லைப்புற வளர்ப்புக்கான கோழிக் குஞ்சும் 50 பயனாளிகளுக்கு உயர்தர பண்ணை வளர்ப்பு கோழிக் குஞ்சும் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு முழுவதும் உயர்தர பண்ணை வளர்ப்பு கோழிக் குஞ்சு வழங்கப்பட்டதாகவும் பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு ஒரு மாதத்துக்கு மேல் வளர்ச்சி அடைந்த பண்ணை வளர்ப்பு உயர்தர இனத்தைச் சேர்ந்த மண்ணிற முட்டை இடும் குஞ்சுகள் கடந்த மாதம் வழங்கப்பட்டன.
இந்த வகையில் 1120 குடும்பங்களுக்கு தலா பத்துக் குஞ்சுகள் வீதம் 11 ஆயிரத்து 200 குஞ்சுகள் வழங்கப்பட்டன. இதில் 500 குஞ்சுகள் கொல்லைப் புற வளர்ப்பு குஞ்சுகள்.
தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலகத்தால் பிரதேச கால்நடை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகளால் கால்நடை வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் வைத்து அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.
இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குஞ்சுகள் வழங்கப்பட்டன.
கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இரண்டு தடவைகள் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. முதற் தடவை 50 பயனாளிகளுக்கும் அடுத்த வாரம் 50 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டதாம். முதற் தடவை 50 பயனாளிகளுக்கும் (500 குஞ்சுகளும்) கொல்லைப்புற கோழி வளர்ப்புக்குரிய நாட்டுப் புறகோழிக் குஞ்சுகளும் இரண்டாம் தடவை 50 பயனாளிகளுக்கு (500 குஞ்சுகள்) உயர்தர இன பண்ணை வளர்ப்பு கோழிக்குஞ்சுகளும் வழங்கப்பட்டன.
ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பயனாளிகள் எல்லோருக்கும் உயர்தர பண்ணை வளர்ப்புக்கான கோழிக்குஞ்சுகளே வழங்கப்பட்டுள்ளன. தமக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம் என்று வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவு பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)





யாழ்.இந்துக் கல்லூரியின் ஆஸ்திரேலியா சிட்னி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் " கல்வி எங்கள் மூலதனம்" என்ற செயற்திட்டம் தொடர்பான புத்தக அன்பளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலர்

## தங்கம் கடத்திய இருவர் கைது

இலங்கையிலிருந்து மலவாயிலில் மறைத்து வைத்து தங்கம் கடத்திய இருவர் சென்னை விமான நிலை யத்தில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கொழும்பில் இருந்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 3:00 மணிக்கு சென்னை சென்ற 30 வயதான முகமது கபீர் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இராமநாத புரத்தைச் சேர்ந்த குறித்த நபர் 300 கிராம் தங்கத்தைக் கடத்திச் சென்றுள்ளார்.

இதேவேளை வெள்ளிக்கிழமை நள்ளிரவு, கொழும்பில் இருந்து வந்த, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் திருச்சியைச் சேர்ந்த 34 வயதான குமார் என்பவரும் தங்கம் கடத்தியுள்ளார். அவரிடம்இருந்து 500 கிராம் தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டன. (வ)

## நூலக வசதிகள் இல்லாத கிராமங்கள்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் நூலக வசதி இல்லாத நிலை தொடர்ந்து காணப்படுகிறது. சுமார் 469 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் வன்னேரிக்குளம், ஐயனார்புரம் ஆகிய இடங்களில் இரண்டு பாடசாலைகள் உள்ளன. இந்த இரண்டு பாடசாலைகளி லும் கல்வி பயிலும் மாணவர்களே பத்திரிகை மற்றும் நூல்களை வாசிக்க முடியாத நிலையில் உள்ளனர். பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சியில் நூலகங்களே பெரும்பங்குவகிக்கின்றன.எனவே வன்னேரிக்குளம் கிராமத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பன இங்குநூலகம்ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையும் வன்னேரிக்குளம் கிராமத்தில் நூலகம் ஒன்றை அமைப் பதற்கு உதவ வேண்டுமென வும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# தமிழ் மொழி நடைமுறை குறித்த அறிக்கை வெளியீடு

அச்சுவேலி, டிசெ.9

மாற்றுக் கருத்தாடலுக்கான அமையம் "தமிழ் மொழி நடைமுறையை அர்த்தமுள்ள தாக்குவோம்" என்ற நோக்கில் கல்வி, பொதுநிர்வாகம், நீதி மூன்று அமைச்சுகளிலும் தமிழ்மொழி நடைமுறையில் நிலவும் பிரச்சினை மற்றும் தமிழ்மொழிநடைமுறை யாக் கலில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை அறிக்கை செய்து "மக்கள் விஞ்ஞாபனம்" என்ற தலைப்பில் மூன்று மொழிகளிலும் புத்தக வடிவில் பொது மக்களின் பார் வைக்கு வெளியிட்டுள்ளது.

கல்வி, பொதுநிர்வாகம், நீதி மூன்று அமைச்சுகளையும் நேரில் சந்தித்து "தமிழ் மொழிநடைமுறையை அர்த்த முள்ள தாக்குவோம்" அறிக்கையை கையளிப்பதோடுஅது தொடர்பாக கலந்துரையாடவுமுள்ளது.

இன, மொழி வேறு பாடு இன்றி தமிழ், முஸ்லிம், சிங்கள புத்திஜீவிகள், கல்வியாளர்களை உள்ளடக்கிய திறந்த நிலைக் கலந்துரையாடல்களை கட்டம் கட்டமாக நடத்தி அங்கு கலந் துரையாடப்பட்ட விடயங் களை கடந்த மாதம் 30ஆம்திகதிநடைபெற்றமொழியுரிமை மாநாட்டில் சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை அறிக் கைப் படுத்தியுள்ளது. மொழியுரிமை மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்ட விடயங்க ளுள் "மக்கள் விஞ்ஞாபனம்" புத்தக வடிவில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழிகளி லும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழி நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகள் அதனால் மக்கள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் மற்றும் தமிழ் மொழியை அர்த்தமுள்ள முறையில் நடைமுறைப் படுத்தும் நடைமுறைகள் அறிக் கையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முன் வைக்கப் பட்டுள்ளன.

தமிழ் மொழி நடைமுறையை அர்த்தமுள்ளதாக்குவோம் அறிக்கை கல்வி அமைச்சர், பொது நிர்வாக அமைச்சர், நீதி அமைச்சர் மூன்று பேரையும் தனித் தனியாகச் சந்தித்து கையளிக்கப்படுவதோடு அமைச்சர்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்துவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

"முதற்கட்டமாக கல்வி, பொது நிர்வாகம், நீதி அமைச்சுகளால் தமிழ்மொழிநடைமுறை தொடர்பான நடைமுறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து ஏனைய அமைச்சுக்களுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்படும்" என்று அமையத்தின் அழைப்பாளர் எஸ்.சரவணப வானந்தன் தெரிவித்தார். (வ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா செல்லத்துரை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா செல்லத்துரை நேற்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புமனைவியும் பத்மாசயனியின் அன்புத்தாயும் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி மற்றும் தங்கம்மா, சந்தானலட்சுமி பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் சீவரத்தினத்தின் அன்பு மாமியும் சர்மிளா, ரவிச்சந்திரன், மஞ்சுளா, ரமணதேவன் (நோர்வே), உஷாமிளா, சுகிர்தன் பிரமிளா, தனஞ்செயன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் டமித்தா, கிசோர், சஞ்சய், சூர்யா, அஸ்வின், கவிஸ்னா மற்றும் ரக்சிகா, அபினுசா (நோர்வே) ஆகியோரின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோட்டைக்காடு ஏழாலை மேற்கில் அமைந்துள்ள சி.விமலேஸ்வரன் இல்லத்தில் இன்று (09.12.2013) திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். ஏழாலை மேற்கு. தகவல். சீவரத்தினம் பத்மாசயனி (மகள்)

## மரண அறிவித்தல்

### வேதகுட்டிக்குருக்கள் நடராஜக்குருக்கள்

(பிரதம குரு ஆவரங்கால் சிவன்கோயில்)



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேதகுட்டிக்குருக்கள் நடராஜக்குருக்கள் நேற்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால்

தகவல்:
ந. யோகானந்தேஸ்வரக் குருக்கள்
(மகன்)

# இசை இறுவட்டு வெளியீட்டு விழா

மன்னார் பா.சிந்துஜா இயற்றிய 'உருகிடவா' பாடல் இசை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் நகர சபை மண்ட பத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநர் தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் குறித்த இசை வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.

விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்க ளான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது கலை நிகழ்வுகளும் சிறப்புரைகளும் இடம் பெற்றன. இசை இறுவட்டை அமைச்சர் டெனீஸ்வரன் வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார். (க-12)

## மரண அறிவித்தல்

### பர்ணபாஸ் யோசப் இம்மானுவேல் (விஜயன்)



மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பர்ணபாஸ் யோசப் இம்மானுவேல் (விஜயன்) நேற்று (08.12.2013) கட்டாறில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சுகிர்தாவின் அன்புக்கணவரும் பிறிஸ்ரன், டல்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பர்ணபாஸ் - றஞ்சிதம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும் இ. பொன்ராசா காலஞ்சென்ற றீற்றம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சொர்ணா, குமார் மற்றும் றூபா (இந்தியா), நிஷாந்தன் (கட்டார்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் யோகராசா (இந்தியா), கெல்மன் காலஞ்சென்ற பிறீமன் றேமன், சைமன் (பிரான்ஸ்), அமுதா (பிரான்ஸ்), றஜிதா, விஜிதா (லண்டன்), வினோதா ஆகியோரின் பாசமிகு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனால் வீதி,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
05.10.1928

மறைவு
24.11.2013

### அமரர் புவனேஸ்வரி செல்வரத்தினம்

கடந்த 24.11.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று அணைந்தகுடும்ப ஜோதியின் செய்தி கேட்டு உடன்வந்து உதவியளித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் உள்ளூர், வெளியூரில் இருந்து தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் (email) மூலமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டவர்களுக்கும் அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் ஆவிக்குரிய சபை போதகர்கள், விசுவாசிகள் யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

K.K.S. வீதி, பூநாரிமடம்

குடும்பத்தினர்

## கடமைக்கு இடையூறு விளைவித்தவர் கைது

தென்மராட்சி, டிசெ.9
டெங்கு நுளம்புக் கட்டுப்பாடு தொடர்பாக வீடுகளுக்கு பரிசோதனைக்காகச் சென்ற பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினரை கடமை செய்ய விடாமல் தடுத்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை கைதடிப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது ஐந்து வீட்டுத் திட்ட வீடுகளைப் பார்வையிடச் சென்ற வேளை யிலேயே கடமை செய்ய விடாமல் தடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வீட்டுடன் சேர்ந்த பகுதி துப்புரவு இன்றிக் காணப்பட்டதால் அதற்கான ஆலோசனைகள் வழங்கியபோது அவற்றைச் செவிசாய்க்காமல் அலட்சியமாகச் செயற்பட்டு கடமையை செய்ய விடாமல் தடுத்துள்ளார். கடமை செய்ய விடாமல் தடுத்த இளைஞரை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். மாலையில் தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டதையடுத்து அவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# 2014 இற்கான வருமானம் மாநகர சபைக்கு 595 மில்.

*வரவு – செலவுத் திட்டக் கூட்டத்தில் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்.மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானம் ரூபா 595 மில்லியனாகவும் மொத்த செலவினம் ரூபா 520 மில்லியனாகவும் இருக்கும் என்று யாழ்.மாநகர சபைக் கணக்காளர் தெரிவித்தார்.
வியாழக்கிழமை மாநகர சபையின் வரவு- செலவுத் திட்டக் கூட்டம் நடைபெற்றது.
இதில் முக்கிய தேவைகளான வீதி அபிவிருத்திக்கு ரூபா 8 மில்லியனும், நீர் விநியோகத்துக்கு ரூபா 6.5 மில்லியனும், சந்தைகள் புனரமைப்புக்கு ரூபா 2.5 மில்லியனும், வடிகால்கள் அமைப்புக்கு ரூபா 7 மில்லியனும் , இயந்திர உபகரணங்கள் பராமரிப்புக்கு ரூபா 16 மில்லியனும் முக்கிய தேவைகள் எனக் குறிப்பிட்டு அவற்றுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.
இதேவேளை யாழ்.மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத். திட்டத்தில் சனசமூக நிலையங்களுக்கென நிதி ஒதுக்கீடு எதுவும் வழங்கப்படாததுடன் சபை உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடுகளும் இடம்பெறவில்லை என்றும் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிரணி உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தில் தெரிவித்தனர்.
கடந்த காலங்களில் இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருந்ததாக முதல்வரிடம் சுட்டிக்காட்டி உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால் தமது பகுதிகளுக்கான தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளனர்.
ஏற்கெனவே மாநகரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடும் வழங்கப்படாததால் சில முக்கிய தேவைகளைக் கூட நிறைவேற்ற வாய்ப்பில்லை என்றும் உறுப்பினர்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவித்தனர். (வ-7)

## வெள்ளத்தில் மூழ்கியது மீசாலை- அல்லாரை வீதி

தென்மராட்சி, டிசெ.9
பெரும் எண்ணிக்கையான மக்களின் பாவனையில் உள்ள மீசாலை- அல்லாரை வீதியின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் வீதியைப் பயன்படுத்துவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
குறித்த வீதி 25 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உள்ளதால் வாகனங்களின் பாவனையால் பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படும் பள்ளங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நடந்து செல்லும் மாணவர்கள் உட்பட பாதசாரிகள் வெள்ளத்தில் நனைய வேண்டியுள்ளது.
மீசாலை கிழக்கு அல்லாரை, கச்சாய், வெள்ளாம்போக்கட்டி, பாலாவி, கெற்பேலி, உசன் போன்ற தென்மராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதற்கு குறுகிய பாதை என்பதால் பெருமளவு மக்களும், வாகனங்களும் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.
வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பாராமரிப்பில் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் வரையான வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் அறிவித்த போதிலும் பயன்கிடைக்கவில்லை என்றும் குறித்த வீதியுடன் இணையும் பல வீதிகள் சாவகச்சேரி நகர சபையினால் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## கிளாலித் தடுப்பணைக்கு துருசுப்பலகை எப்போது?

வலி.தென்மேற்கு, டிசெ.9
விவசாயிகளின் நலன்கருதி மழை வெள்ளத்தைக் கடலுக்குச் செல்லவிடாமல் தடுக்கும் வகையில் கிளாலிப் பகுதியிலுள்ள தடுப்பணையில் அமைக்கப்பட்டுள்ள துருசில் பலகை பொருத்தப்படாததால் வயல் நிலங்களில் நிற்க வேண்டிய மழை வெள்ளம் கடலுக்குச் செல்கின்றது.
இதனால் 50 ஏக்கருக்கு அதிகமான நெல் வயல்களில் நீர்மட்டம் குறைந்துள்ளது. இந்த நிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியைநாடியுள்ளனர்.
மழைவெள்ளம் கடலுக்குச் செல்லாதவாறு கிளாலிப் பகுதியில் தேவாலயத்துக்கு அருகில் தும்புவெளியிலும் யு.எஸ். எயிட் நிறுவனத்தால் இரு துருசுகள் அமைக்கப்பட்டுள்ளன.
காலபோக நெற்செய்கையாளர்களின் நலன்கருதி மழை வெள்ளம் கடலுக்குச் செல்லாதவாறு கட்டப்பட்ட இரு துருசுகளிலும் தடுப்புப் பலகைகள் இணைக்கப்படாமையால் வயல் நிலங்களில் நிற்க வேண்டிய மழை வெள்ளம் கடலுக்குச் செல்கின்றது. இதனால் வயல் நிலங்களில் நீர்மட்டம் குறைந்துள்ளது.
இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகள், விரைவாகத் தடுப்பு பலகைகளை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (வ-115)

## தென்மராட்சியில் நெற்பயிரைத் தாக்கும் மடிச்சுக்கட்டி

தென்மராட்சி, டிசெ.9
தென்மராட்சி பிரதேச நெல் வயல்களில் நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் காணப்படுவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.
கடந்த வாரம் பெய்த மழையின் பின்னர் நோய் பயிர்களைத் தாக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.
இதேவேளை மழைவீழ்ச்சி போதாததால் நெற் பயிர்களுடன் பெருமளவு நெற்சப்பி, கிடைச்சி, கோழிச்சூடன் போன்ற களைகள் காணப்படுகின்றன.
மழை பெய்யாத காலத்தில் களைகள் அழிப்பதற்கு களைநாசினிகள் விசிறிய போதிலும் கடந்த வருடங்களை விட களைகள் அதிகம் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.
களைகள் பிடுங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் கூலியாள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் உர வகைகளைப் போட முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## ஆதன வரிச் செயற்பாடுகள் கணினிமயம்

*முதன்முறையாக வலி.தெற்கு பிரதேச சபையில்*

வலி.வடக்கு, டிசெ.9
இலங்கையிலுள்ள பிரதேச சபைகளுள் முதன்முறையாக ஆதனவரிச் செயற்பாடுகள் கணினிமயப்படுத்தப்பட்ட பிரதேச சபை என்ற பெருமையை பெற்றுக் கொள்கின்றது வலிகாமம் தெற்குப் பிரதேச சபை. ஏசியா பவுன்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோரின் வழிகாட்டுதலில் துரித கதியில் கணினி மயப்படுத்தல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி.பிரகாஸ். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏழாலை, சுன்னாகம், உடுவில் ஆகிய உப அலுவலகங்களையும் எமது பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் இணைய வலையமைப்பில் ஒன்றிணைக்கப்பட்டு ஆதன வரி தொடர்பான தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2014 தைத்திங்களிலிருந்து கணினி வலையமைப்பினூடாக பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பொதுமக்கள் மற்றும் வரி செலுத்துவோர் இலகுவாகவும் விரைவாகவும் தங்கள் பணிகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு குறித்த வேலைத்திட்டம் சபையின் முழுமையான அரச அனுமதியுடன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அத்துடன் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உத்தியோகபூர்வ இணையத்தள வடிவமைப்பு வேலைகளும் முடிவுறும் தறுவாயில் உள்ளன. வெகுவிரைவில் குறித்த இணையத்தளமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாக உலகெங்கும் வசிக்கின்ற எமது உறவுகள் எமது சபையின் தொழிற்பாடுகளை அறிந்து கொள்வதுடன்சபையுடனானதொடர்புகளையும்இலகுவாகப் பேண முடியும்- என்றார். (வ-86)



சங்கானை, வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் சமூக சேவையாளர் ஒருவரால் நிழல்தரும் மரங்கள் நடப்பட்டன. சங்கானை முதியோர் சங்கத் தலைவர் சி.சுந்தரலிங்கம், அங்கத்தவரான செ.கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் பாடசாலை சிறார்களும் இணைந்து மரம் நடுகின்றனர். (வ-29)

## கிளாலி இறங்குதுறையை புனரமைக்க அனுமதி

வலி.தென்மேற்கு, டிசெ.9
மீனவர்களின் நலன்கருதி கிளாலியிலுள்ள இறங்கு துறையைப் புனரமைக்க அனுமதி கிடைத்துள்ளதால் ஐ.ஓ.எம். நிறுவனம் புனரமைப்புக்கான சகல ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
கடந்த 20 வருடங்களுக்கு மேலாகக் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த கிளாலியிலுள்ள இறங்கு துறை. அரசியல் வாதிகள் எடுத்துக் கொண்ட முயற்சியில் மீனவர்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டது. இதையடுத்து மீனவர்களின் நலன்கருதி இறங்கு துறையைப் புனரமைப்பதற்கு முன்வந்த குறித்த நிறுவனம் பணிகளை ஆரம்பிக்க முற்பட்ட போது கடற்படையினர் தடை செய்ததால் பணிகள் நிறுத்தப்பட்டன.
போர்க்காலச் சூழ்நிலையால் பயன்படுத்தப்படாமல் சேதமடைந்த நிலையிலிருந்த இறங்கு துறையைப் புனரமைப்பதற்கு அனுமதிக்குமாறு மீனவர்கள் கடற்படையினரைக் கோரியதை அடுத்து இறங்குதுறையைப் புனரமைப்பதற்கு கடற் படையினர் அனுமதி வழங்கி யுள்ளனர். (வ-115)

## 156 பேருக்கு வருடத்துக்கான உதவிக் கொடுப்பனவு



கிளிநொச்சி, டிசெ.9
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தோரில் 156 பேருக்கு இந்த மாதம் தொடக்கம் ஒரு வருட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.
சமூக சேவைகள் திணைக்களத்தால் பிரதே செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எஞ்சிய தொகையில் புதிதாகத் தெரிவு செசய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ள தாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்தார். (வ-9)

# கட்டுப் பணத்தை இழந்தார் 'கப்டன்'



புதுடில்லி, டிசெ.9

புதுடில்லி சட்ட சபைத் தேர்தலில் களமிறங்கிய விஜயகாந்தின் கட்சியான தே.மு.தி.க. கட்டுப்பணத்தை இழந்துள்ளது. புதுடில்லி சட்ட சபைத் தேர்தலில் தே.மு.தி.க. 10 தொகுதிகளில் போட்டியிட்டது. அந்தத் தேர்தலுக்காக கட்சித் தலைவர் விஜயகாந்த், அவரது மனைவி பிரேமலதா, மைத்துனர் சுதீஷ் ஆகியோர் தீவிர பரப்புரை செய்தனர்.

பரப்புரைகளை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய விஜயகாந்த், "தேர்தலில் தே.மு.தி.க.வுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது. எனினும் வெற்றி, தோல்வி குறித்துக் கவலையில்லை" என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் தற்போது புதுடில்லி சட்ட சபைத் தேர்தல் வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெளியாகியுள்ள முடிவுகளின்படி விஜயகாந்த்தின் தே.மு.தி.க. வேட்பாளர்கள் 10 பேரும் கட்டுப் பணத்தை இழந்துள்ளனர். (ற)

# பா.ஜ.க. ஏறுமுகம்

## புதுடில்லி, ராஜஸ்தானில் ஆட்சியை இழக்கின்றது காங்கிரஸ்



புதுடில்லி, டிசெ.9

இந்தியாவில் புதுடில்லி, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 4 மாநிலங்களில் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளின்படி ஆளும் காங்கிரஸ் கட்சியைப் பின்தள்ளி பாரதிய ஜனதாக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது.

ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் பா.ஜ.க. தொடர்ந்து முன்னிலை பெற்றுள்ளது. அதனையடுத்து அந்த இரு மாநிலங்களிலும் பா.ஜ.க. ஆட்சி அமைப்பது உறுதியாகியுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. 125 இடங்களிலும், காங்கிரஸ் 28 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளன. மத்திய பிரதேச மாநிலத்தில் பா.ஜ.க. 129 இடங்களிலும், காங்கிரஸ் 55 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளன.

அதேவேளை புதுடில்லியிலும் பா.ஜ.க. முன்னிலை பெற்றுள்ளது. அங்கு ஆளும் காங்கிரஸ் கட்சி 14 இடங்களில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. பா.ஜ.க. 31 இடங்களிலும், கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி 24 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளது.

புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் கட்சியை விரட்டுவேன் என்ற கோஷத்துடன் களம் இறங்கிய ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால், ஷீலா தீட்சித்தைத் பின் தள்ளி முன்னிலை பெற்றுள்ளார். மூன்று முறை முதலமைச்சராக பதவி வகித்த ஷீலா தீட்சித் இந்த முறை தொகுதியில் தோல்வி அடைந்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் இடையே தொடர் இழுபறி நிலவிவருகிறது. அடுத்த ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சட்ட மன்றத் தேர்தல் முக்கியம் பெறுகின்றன. 5 மாநிலங்களில் நடைபெற்றுள்ள சட்டமன்றத் தேர்தல்களில் தற்போது வெளியாகி வரும் முடிவுகளின்படி காங்கிரஸ் கட்சி மோசமான பின்னடைவைச் சந்தித்துள்ளது. அது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சியின் வெற்றியில் பலத்த தாக்கத்தைச் செலுத்தும் என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். (ற)

# ஊடுருவலை முறியடிக்க இராணுவத்தினர் தயார்

*இந்திய உயர் இராணுவ அதிகாரி குர்மீத் சிங் கூறுகின்றார்*

ஸ்ரீநகர், டிசெ.9

பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்குள் ஊடுருவும் தீவிரவாதிகளின் முயற்சிகளை முறியடிப்பதற்கு இந்திய இராணுவம் தயார் நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார் இந்திய உயர் அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் குர்மீத் சிங்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "எல்லைக்கு அப்பால் உள்ள பயங்கரவாத முகாம்களில் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாத முக்கிய தலைவர் ஒருவர் அண்மையில் அந்தப் பகுதிக்கு வந்திருந்ததாகவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே, இனி வரும் மாதங்கள் இராணுவத்துக்கு மிகவும் சோதனை மிகுந்த காலகட்டமாக இருக்கும். ஊடுருவலைத் தடுப்பதற்கு இராணுவம் தயார் நிலையில் உள்ளது. அண்மைய ஊடுருவல் முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப் பட்டதைப் போலவே, இந்த முயற்சிகளும் முறியடிக்கப்படுவது உறுதி" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஏற்காடு இடைத் தேர்தல் அ.தி.மு.க. முன்னிலை

ஏற்காடு, டிசெ.9



ஏற்காடு இடைத்தேர்தலில் வாக்களிப்புகள் முடிவடைந்துள்ள நிலையில் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளின்படி அ.தி.மு.க. முன்னிலை பெற்றுள்ளது.

முதல் சுற்றில் அதிமுக 2433 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை பெற்றுள்ளது. முதல் சுற்றில் அ.தி.மு.க. 5118, தி.மு.க. 2685 வாக்குகளை பெற்றுள்ளது. முதல் சுற்றில் 228 வாக்குகள் யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை எனப் பதிவாகியுள்ளது. இரண்டாவது சுற்றில் அ.தி.மு.க. 4854 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை பெற்றது. இரண்டாவது சுற்றில் அ.தி.மு.க. 9866, தி.மு.க. 5012 வாக்குகளை பெற்றுள்ளன.

# ஹெலிகொப்டர் ஊழல் வழக்கில் தரகரை விசாரிக்காத அதிகாரிகள்

புதுடில்லி, டிசெ.9

ஹெலிகொப்டர் பேர ஊழல் தொடர்பாக விசாரிப்பதற்காக இத்தாலி சென்ற இந்திய அதிகாரிகள் நீதிமன்றம் அனுமதி அளித்தும் அந்த ஒப்பந்தத்தில் தொடர்புடைய இடைத்தரகரை விசாரிக்க மறுத்துவிட்டமை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இத்தாலியின் பின்மெக்கானிக்கா நிறுவனத்திடம் இருந்து அதி முக்கிய பிரமுகர்கள் (வி.வி.ஐ.பி.) பயணம் செய்யும் ஹெலிகாப்டர்கள் வாங்குவதற்கு இந்தியா ஒப்பந்தம் செய்திருந்தது. அந்த ஒப்பந்தத்தை பெறுவதற்கு பின்மெக்கானிக்கா நிறுவனம் இந்திய அதிகாரிகளுக்கு ரூபா 362 கோடி லஞ்சம் கொடுத்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட நிலையில், விமானப்படை முன்னாள் தளபதி எஸ்.பி. தியாகி மற்றும் அவரது உறவினர்கள் 3 பேர் லஞ்சம் பெற்றதாக சி.பி.ஐ. குற்றஞ்சாட்டப் பட்டது. அதனை தியாகி மறுத்து வந்த நிலையில், அவரது வங்கிக் கணக்குகளையும், மற்ற குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகளையும் சி.பி.ஐ. முடக்கி வைத்துள்ளது.

இந்த நிலையில், ஹெலிகொப்டர் ஒப்பந்த ஊழல் தொடர்பாக அண்மையில் கைது செய்யப்பட்ட இடைத்தரகர் குய்டோ ரல்ப் ஹஸ்ச்கேவிடம் இத்தாலி நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. அவர்தான் தியாகி மற்றும் அவரது உறவினர்களுக்கு பணம் அனுப்பியவர் என்பதால் அவரிடம் இந்திய அதிகாரிகள் விசாரணை நடத்த நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி அளித்திருந்தது.

ஆனால் இடைத்தரகர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துக் கொண்டிருக்கும்போது அங்கு வந்திருந்த இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகளோ, நீதிமன்றம் அனுமதி அளித்தும் அந்த இடைத்தரகரிடம் விசாரணை நடத்த மறுத்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# தமிழக காங்கிரஸில் மாற்றம்

சென்னை, டிசெ.9

தமிழக காங்கிஸ் கட்சியின் நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது காங்கிரஸ் தலைமைப் பீடம். இந்த மாற்றம் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஞானதேசிகனே தொடர்ந்து பதவி வகிப்பார். எனினும் புதிதாக 12 துணைத் தலைவர்கள், 27 பொதுச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல்களை முன்னிட்டே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

# தெலுங்கானா விவகாரம்: பதவி விலகினார் சீரஞ்சீவி

தெலுங்கானா விவகாரத்தால் அதிருப்தி அடைந்த சிரஞ்சீவி தனது மத்திய அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பதற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததை அடுத்தே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் ,

"ஆந்திர மாநில பிரிவினை விவகாரத்தில், தொடர்ந்து நடந்து வரும் சம்பவங்களால் நான் வேதனை அடைந்துள்ளேன். சீமாந்திரா பகுதி மக்களின் கருத்துகளோ அல்லது உணர்வுகளோ அண்மைய மத்திய அமைச்சரவைத் தீர்மானத்தில் கவனத்தில் கொள்ளப் படவில்லை. இந்தச் சூழ்நிலையில் கனத்த இதயத்துடனும், மனச்சாட்சி உறுத்தலுடனும் பணியாற்றுவது கடினம். நான் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஏற்க னவே கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி பதவி விலகல் கடிதம் கொடுத்துள்ளேன். அந்தக் கடிதத்தை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோருகின்றேன். என் மீது தாங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கும், கொடுத்த பொறுப்புக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைக் கொண்டு என்னால் இயன்ற அளவு பணியாற்றி இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

மக்கள் வங்கியின்

சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிலையம்

(Small and Medium Enterprise Centre)

திறப்பு விழா

தொழில் முயற்சியாளர்களுக்கு பிரத்தியேகமான நிதிசார் துணைச் சேவைகளினை வழங்கும் நிலையம்

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்

T.A. ஆரியபால

(கூட்டுறவு அபிவிருத்தி வங்கியியல்)

அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது

காலம் : இன்று (2013.12.09) திங்கட்கிழமை

நேரம் : முற்பகல் 10.05 மணி

இடம் : பிராந்திய தலைமைக் காரியாலயம் மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்:
SME நிலையம்
மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# இராணுவத்துக்குள் மோதல்

## மத்திய ஆபிரிக்காவில் 281 பேர் சாவு

லண்டன், டிசெ.9
மத்திய ஆபிரிக்க குடியரசில் இராணுவத்துக்குள் ஏற்பட்ட மோதல் சம்பவங்களின் கடந்த இருதினங்களில் 281 பேர் உயிரிழந்துள்ளனர்.



தற்போதைய ஜனாதிபதி மைக்கேல் ஜொடோடியாவின் ஆதரவாளர்களுக்கும், அவரால் பதவி கவிழ்க்கப்பட்ட பிரன்காயிஸ் பொசைசின் ஆதரவாளர்களுக்கும் இடையேயே மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதல்களால் இதுவரை அந்த நாட்டின் 50 லட்சம் பொதுமக்களில் 10 சதவீதத்தினர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இரவு ஆயுதம் ஏந்திய நபர்கள் கிராமம் ஒன்றில் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்த மோதல்களில் உயிரிழந்த 281 பேரின் உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த மோதல்கள் மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து நடைபெறும் இவ்வாறான தாக்குதல்களால் அந்த நாட்டின் இயல்பு நிலை முற்றாகச் சீர் குலைந்துள்ளது. (ற)

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் இணைந்தது ஜோர்தான்

ஜெனிவா, டிசெ.9
ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளது ஜோர்தான்.

ஐ.நா.பாதுகாப்புச் சபை உறுப்பினர் பதவிக்கு சவூதி அரேபியா கடந்த ஒக்ரோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாகவே தனது பதவியை நிராகரிப்பதாக அறிவித்தது சவூதி அரேபியா.

சிரியாவின் உள்நாட்டுப் போர், இஸ்ரேல்-பலஸ்தீன மோதல் மற்றும் பேரழிவு ஆயுதங்கள் இல்லாத மத்திய கிழக்கு மண்டலத்தை உருவாக்க இயலாமை போன்ற விடயங்களை ஆட்சேபித்தே உறுப்பினர் பதவியை நிராகரிப்பதாக சவூதி அரேபியா அறிவித்தது.

இந்தநிலையில் சவூதி அரேபியாவின் இடத்திற்கு ஜோர்தான் ஏனைய அரேபிய நாடுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தத் தேர்வுக்கு 193 உறுப்பினர் நாடுகளில் 178 நாடுகள் வாக்க ளித்ததன் மூலம் ஆசிய நாடுக ளும் இந்தத் தெரிவுக்கு ஒப்புதல் அளித்தன. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜோர்தானின் வெளியுறவுத்துறை அமைச்சரான நாசர் ஜுடே,

"ஐ.நா பாதுகாப்புச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளான பாதுகாப்பு மற்றும் அமைதி போன்றவை குறித்த ஜோர்தானின் இடைவிடாத முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகள் கொடுத்த ஆதரவினால் மிகவும் பெருமை அடைகின்றோம். சர்வதேச அமைதி காக்கும் படைகளில் ஜோர்தானின் பங்களிப்பு உலகளவில் கணிசமானதும் மற்றும் திறமையானதும் ஆகும்" என்று குறிப்பிட்டார். (ற)

## பொலிஸாருக்கு 15,000 தொலைபேசி அழைப்புக்கள்: பெண் கைது

ரோக்கியோ, டிசெ.9
15 ஆயிரம் தடவைகள் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட பெண் ஒருவர் ஜப்பானில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பானை சேர்ந்த 44 வயதான பெண் ஒருவர் பொலிஸ் நிலைய தொலைபேசியை தொடர்பு கொண்டு, "என்னை யாரோ கொலை செய்ய முயற்சிக்கின்றனர். எனது வீட்டுக்குத் திருடர்கள் வருகின்றார்கள்" என்று அடிக்கடி முறைப்பாடு செய்து வந்தார்.

பொலிஸாரும் அவரின் வீட்டிற்குச் சென்று சோதனையிட்டுவது வழக்கமான ஒன்றாக மாறியது. எனினும் பெண் கூறிய படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை.

ஆறு மாதங்களில், 15 ஆயிரம் முறை பொலிஸாருடன் அந்தப் பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டதால் பொலிஸார் எரிச்சல் அடைந்தனர். பெண்ணின் வீட்டுக்கு சென்ற பொலிஸார், தகுந்த காரணங்கள் இல்லாமல் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தினர்.

ஆனாலும் அந்தப் பெண் தொடர்ந்தும் அழைப்பை மேற்கொண்டார்.

பொறுமை இழந்த பொலிஸார் தற்போது அந்தப் பெண்ணைக் கைது செய்துள்ளனர். தகுந்த காரணங்கள் இன்றி அந்தப் பெண் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதால் தங்களின் கடமை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தங்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டது என்றும் பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

அதையடுத்து கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு, மூன்று ஆண்டுகள்சிறைதண்டனையும், அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது நீதிமன்றம். (ற)

## 'மிஸ் ஏர்த்' பட்டம் வெனிசுலா அழகிக்கு

நியூயோர்க், டிசெ.9
'2013 மிஸ் ஏர்த்' உலக அழகிப் பட்டத்தை வெனிசுலா அழகி ஆலிஷ் ஹென்ரிச் தட்டிச் சென்றுள்ளார்.



'மிஸ் ஏர்த் 2013' உலக அழகிப் போட்டி பிலிப்பைன்ஸ் நாட்டின் லாஸ் பினாஸ் நகரில் உள்ள வெர்சைல்ஸ் அலாபாங்கில் நடந்தது.

அதில் பல நாடுகளை சேர்ந்த 89 அழகிகள் கலந்து கொண்டனர். பலவித சுற்றுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன.

அவர்களில் வெனிசுலாவை சேர்ந்த ஆலிஷ் ஹென்ரிச் என்பவர் 'மிஸ் ஏர்த்' உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 22 வயதான இவர் மொடல் அழகி ஆவார்.

அவர் தவிர 'மிஸ் ஏர்த்' நெருப்பு அழகியாக கொரியாவை சேர்ந்த கத்ரீனா, 'மிஸ் ஏர்த்' நீர் அழகியாக தாய்லாந்தைச் சேர்ந்த புனிகா குல்சூன்டோராட்டும், 'மிஸ் ஏர்த்' காற்று அழகியாக ஆஸ்திரியாவை சேர்ந்த காதியா வாக்னரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ற)

## ஐரோப்பாவில் சூறாவளி

### 10 பேர் சாவு: சொத்துக்கள் நாசம்

லண்டன், டிசெ.9
ஐரோப்பா கண்டத்தின் பிரிட்டன், ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளைத் தாக்கிய சூறாவளி மற்றும் கடும் பனிப்பொழிவு காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது.

சூறாவளி காரணமாக ஏராளமானோரின் வீடுகள் சுக்குநூறாகியுள்ளன. சூறாவளியால் போலந்தில் 5 லட்சம் வீடுகளும், சுவீடனில் 50 ஆயிரம் வீடுகளும், ஜெர்மனியில் 4 ஆயிரம் வீடுகளும் சேதமடைந்தன.

கடுமையான தட்பவெப்ப நிலை காரணமாக பல பகுதிகளில் மின்சாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாக ஐரோப்பிய கண்டத்தில் உள்ள முக்கிய நாடுகளுக்குச் செல்லும் சுமார் ஆயிரத்து 900 விமானங்கள் நேற்றுமுன்தினம் மட்டும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ற)



தென்னாபிரிக்காவின் ஜனநாயகப் போராளியும், மறைந்த முதல் கறுப்பின ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலாவின் உடல் அரச மரியாதைடன் அவர் சிறுவயதில் வளர்ந்த கிராமமான க்யூனுவில் டிசெம்பர் 15ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. 95 வயதான மண்டேலா நுரையீரல் பாதிப்பால் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் 10 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று தென்னாபிரிக்க அரசு அறிவித்துள்ளது. மறைந்த முன்னாள் ஜனாதிபதிக்கு தென்னாபிரிக்கா எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. (ற)

## ஆபிரிக்க குடியரசில் குவிக்கப்படும் பிரான்ஸ் படையினர்

பாரிஸ், டிசெ.9
மத்திய ஆபிரிக்க குடியரசுக்கான தமது துருப்பினரை அதிகரிக்க பிரான்ஸ் அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே அங்கு ஆயிரத்து 500 துருப்பினரை அனுப்பத் திட்டமிட்டிருந்த போதும், தற்போது ஆயிரத்து 900 பிரான்ஸ் துருப்பினர் அங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கு சர்வதேச இராணுவ முன்னெடுப்பை மேற்கொள்ள ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றி இருக்கும் நிலையிலேயே பிரான்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளது.

முன்னர் பிரான்ஸின் காலனித்துவத்தின் கீழ் இருந்த மத்திய ஆபிரிக்க குடியரசில் ஏற்பட்டுள்ள வன்முறைகளில் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# 500 கோடி அழைப்புகளை ஒட்டுக் கேட்டது அமெரிக்கா

## 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை அதிர்ச்சித் தகவல்

வொஷிங்டன், டிசெ.9
அமெரிக்காவின்உளவுஅமைப்பு 500 கோடி தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் உளவு அமைப்பான என்.எஸ்.ஏ. பல்வேறு தரப்பு மக்களின் கைத்தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்டது என்ற தகவலை அந்த அமைப்பில் பணியாற்றிய எட்வேர்ட் ஸ்நோடன் பகிரங்கப்படுத்தியிருந்தார். அதனால் அமெரிக்கா அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதையடுத்து நாட்டைவிட்டு வெளியேறிய அவர், தற்போது ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்தநிலையில் ஸ்நோடன் வெளியிட்ட ரகசியத் தகவல்களை அமெரிக்காவிலிருந்து வெளியாகும், 'வொஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

"அமெரிக்காவின்உளவுஅமைப்பான, என்.எஸ்.ஏ. உலகெங்கிலும் உள்ள பல்வேறு கைத்தொலைபேசி அழைப்புகளை பதிவு செய்து ஒட்டுக் கேட்டுள்ளது. அந்த வகையில் 500 கோடி கைத்தொலைபேசி அழைப்புகள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன. அதற்காக நவீன தொழில் நுட்ப வசதிகளை உடைய விசேட உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த உபகரணங்களின் மூலம் உலகின் எந்த ஒரு பகுதியில் இருந்தும் மேற்கொள்ளும் தொலைபேசி அழைப்புகளை பதிவு செய்து ஒட்டுக் கேட்க முடியும்" என்று அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.



இந்தத் தகவலால் உலக நாடுகள் பலவும் அதிர்ச்சி அடைந்துள்ளன. உலகின் எந்த ஒரு பகுதில் இருந்தும் மேற்கொள்ளப்படும் கைத்தொலைபேசி அழைப்புகளை அமெரிக்கா பதிவு செய்யலாம் என்பதால் பல்வேறு நாடுகளின் இரகசியங்கள் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது என்று உலக நாடுகள் பலவும் கண்டனம் வெளியிட்டுள்ளன. (ற)

# கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடு துரிதகதியில்

*மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.9

மாகாண சபை அமைச்சுப் பொறுப்பேற்றுக் கொண்டதும் கல்வி அமைச்சர் கல்வி அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்து வருகிறார். சிறந்த எதிர்காலத்துக்கான பயனுள்ள ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

முன்பள்ளி நிர்வாகம் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து தற்போது சிறந்த முறையில் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது.


வடமாகாண முன்பள்ளி களின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் உரையாற்றிய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்:

எமது சிறாரின் சிறப்பான அளிக்கைகள், நடனம், நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகளூடாக இங்கே இடம்பெற்றுள்ளன. காலையில் இடம்பெற்ற கண்காட்சி மிகவும் நல்ல முறையில் பயனுள்ளதாக அமைந்திருந்தது. மிகச் சிறந்த முறையில் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் அதனைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

> “ ”
> 2010 ஆம் ஆண்டு முன்பள்ளிக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வட மாகாணமே மேற்கொண்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டு முன்பள்ளிக்காகக் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வட மாகாணமே மேற்கொண்டு வருகின்றது. தேசிய ரீதியாக முன்பள்ளிகளுக்கான கொள்கையை தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வருகை தந்து பார்வையிட்டனர். இது ஒரு முன்மாதிரியான விடயம். எதிர் காலத்தில் எமது பிள்ளைகளுக்குச் சிறந்த அடித்தளத்தை இட்டுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் நிரந்தர நியமனங்கள் தொடர்பாக அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். எதிர்காலத்தில் ஆசிரியர்களை எமது திட்டத்தில் உள்வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்கொரியா போரால் பாதிக்கப்பட்டது. ஆனால் அறுபது ஆண்டுகளில் பின் பிரமிப்பூட்டக் கூடிய வகையில் அங்கு கட்டுமானம், கல்வி, தொழில்நுட்பம் என்பன வளர்ச்சியடைந்துள்ளன. அதுபோன்று எமது நாட்டையும் கட்டியெழுப்ப நாம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்- என்றார். (வ-7)



# மன்னாரில் சிறப்பாக ஆறுமுகநாவலர் குருபூசை

மன்னார், டிசெ.9

மன்னாரில் ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

அகில இலங்கை இந்து மாமன்றமும் சிவஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையும் இணைந்து திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணிச் சபை மற்றும் மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆறுமுக நாவலர் குருபூசையை ந[illegible]தியுள்ளன.

இந்தக் குருபூசை நிகழ்வு திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மற்றும் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

நேற்றைய தினம் மன்னாரில் இருந்து ஆறுமுக நாவலரின் திருவுருவம் தாங்கிய ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது. மன்னார் பிரதான பாலம் வரை குறித்த ஊர்வலம் இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கானோர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் நிறைவில் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் கலந்து கொண்டார். (க-12)

## வயலில் பிடிபட்ட மாடுகளால் சர்ச்சை

தென்மராட்சி, டிசெ.9

கமக்கார அமைப்பால் பிடிக்கப்பட்டு ஒருவரின் வளவுக்குள் கட்டப்பட்டிருந்த மாடுகள் அவற்றின் உரிமையாளரால் அவிழ்த்துச் செல்லப்பட்டதுடன் அந்த வளவின் சொந்தக்காரரையும் அவர் தாக்க முயன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தனங்களப்புப் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் வளர்ப்பு மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்பினர் ஒலிபெருக்கிமூலம் அறிவித்தனர்.

எனினும் வளர்ப்பு மாடுகளால் பயிர்கள் அழிக்கப்படுவதாக நெற் செய்கையாளர்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பயிர்களை அழித்த மாடுகளை அமைப்பின் உறுப்பினர்கள் பிடித்து அந்தப் பகுதியில் உள்ள ஒருவரின் வளவில் பாதுகாப்பாகக் கட்டி வைத்தனர்.

எனினும் பிடிக்கப்பட்ட மாடுகளின் சொந்தக்காரர் அத்துமீறி வளவினுள் நுழைந்து அவற்றை அவிழ்த்ததுடன் அந்த வீட்டுக்காரரையும் தாக்க முற்பட்டாரெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கல்வி வலயத்துக்கு இசைக் கருவிகள்

தென்மராட்சி, டிசெ.9

'வேள்ட் விஷன்' நிறுவனத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு ஒரு தொகுதி இசைக் கருவிகளை வழங்கியுள்ளனர்.

தபேலா, ஆர்மோனியம் உறுமி, புல்லாங்குழல் உள்ளிட்ட இசை உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.9

வடக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் திணைக் களத் தலைவரின் பரிந்துரை யுடன் அந்தந்தப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்களில் பணிபுரியும் முகாமைத்துவ உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், படவரைஞர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள், கணினி தரவு பதியுநர், வருமானப் பரிசோதகர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், ஆய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து இடமாற்றல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இடமாற்றத்தை எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள், இடமாற்றல் பெற விரும்பாத உத்தியோகத்தர்கள் தனித்தனிப் படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையில் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றோருக் கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஞாயிற் றுக்கிழமை வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். (வ-9)

# பயணிக்க முடியாத நிலையில் வீதிகள்



சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் குதிரைப்பிட்டிச் சந்தியிலிருந்து சங்குப்பிட்டிக்கும் கீரை வாய்க்காலுக்கும் செல்வதற்கு அமைக்கப்பட்ட இரு வீதிகள் நெற்செய்கையாளர்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள நெல் வயல்களுக்குச்செல்லும்நெற்செய்கையா ளர்களின் நலன்கருதி இந்த வீதிகள் அமைக்கப்பட்டன. சுமார் நான்கு கிலோ மீற்றர், இரண்டு கிலோமீற்றர் தூரங்களுக்கு களிமண் வீதி அமைக்கப்பட்டதால் மழையின் பின்னர் சென்ற வாகனங்கள் புதைந்து சிரமங்களின் மத்தியில் வெளியே எடுக்கப்பட்டதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

# குன்றும் குழியுமாக ஆடியபாதம் வீதி

நல்லூர், வலி.தென்மேற்கு ஆகிய இரு பிரதேசங்களுக்கும் ஊடாக செல்லும் ஆடியபாதம் வீதி இரு வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகச் சேதமடைந்த நிலையிலிருப்பதால் குறித்த வீதியால் பயணிகள் மட்டுமல்ல வாகனங்களும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் மட்டுமல்ல வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பயணிக்கும் மேற்படி வீதியை விரைவாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர்.

காங்கேசன்துறை வீதிக்கு கொக்குவில் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக நோக்கி உயரப்புலம் ஊடாக ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மானிப்பாய் காரைநகர் வீதியை இணைக்கும் சுமார் 3 கி.மீ. நீளமான ஆடிய பாதம் வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாததால் வாகனங்கள் செல்ல முடியாதவாறும் மக்கள் நடமாட முடியாதவாறும் குன்றும் குழியு மாகக் காட்சியளிக்கின்றது.

இந்த வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். தற்போது வீதி அபிவிருத்திப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதால் ஆடியபாதம் வீதியை முன்னுரிமை அடிப்படையில் புனரமைப்பதற்கு சம்பந்தட்டவர்கள் முன்வர வேண்டும் என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (வ-115)

## பெண்கள் மீது வன்முறை: வவுனியாவில் விழிப்புணர்வு

"பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்குரிய நீதியை நோக்கிய பயணம்" என்ற கருப்பொருளில் வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை பெண்களால் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

இடர் முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பு, வடமாகாண பெண்கள் மாற்றத்துக்கான வலையமைப்பு, பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு ஆகியன இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்தின.

பிற்பகல் 1 மணியளவில் வவுனியா பிரதேச செயலகத்தின் முன்பாக ஆரம்பமான இந்த விழிப்புணர்வு ஊர்வலம் ஏ-9 வீதியூடாக வவுனியா பஸ் நிலையம், பிரதான வீதி ஊடாகச் சென்று வவுனியா மாவட்டச் செயலகத்தை அடைந்தது. அங்கு மாவட்டச் செயலகத்தில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

வீட்டில் சமாதானத்தைப் பேணும் போதுதான் உலக சமாதானத்தைப் பேண முடியும் என்ற தொனிப் பொருளிலான பாடல்களைப் பாடியவண்ணம் பெருமளவான பெண்கள் பதாகைகளைத் தாங்கியவாறு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் வடக்கு கிழக்கில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும், 16 நாள்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த ஊர்வலத்தின்போது பின்வரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இலங்கையில் எந்தப் பகுதியாக இருந்தாலும் பாலியல் வன்முறைகள் இடம் பெற்றவுடன் துரிதமாக விசாரணைகள் இடம்பெற்று சாட்சியங்கள் சேகரிக்கப்படல் வேண்டும்.

சந்தேக நபர்களுக்கு 14 நாள்கள் தடுப்புக்காவல் வழங்கப்பட்டு பின்னர் சாட்சிகள் போதவில்லையெனக் காரணம் கூறி வழக்கைத் தள்ளுபடிசெய்வதை நிறுத்தல் கூடாது.

பொறுப்பு மிக்க நீதித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இவ்வாறான வன்முறைகள் அதிகரித்த வண்ணம் இருப்பதற்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பெண்கள், சிறுவர் பிரிவு சிறப்பாகச் செயற்படுவதுடன் அங்கே தமிழ்பேசும் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

சமூகத்திலுள்ள பெண்கள், ஆண்கள் அனைவரும் இணைந்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான செயற்பாடுகளைத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும் என்பனவே அவையாகும். (க-402)

# அபிவிருத்திப் பணிக்கு அதிகாரிகளே தடை

### மாந்தை கிழக்கு மக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, டிசெ.9

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அதிகாரிகள் பங்குபற்றாது தவிர்த்து வருவதால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுவதாக மாந்தை கிழக்கு மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் மாதாந்தம் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்குபற்றாது தவிர்த்து வருகின்றனர். இதனால் அபிவிருத்தி பணிகள் தடைப்படுவதுடன் மக்களின் குறைபாடுகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையும் காணப்படுகின்றது.

> "ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல திணைக் களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்குபற்றாது தவிர்த்து வருகின்றனர்."

இது குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள், எதிர் வரும் கூட்டங்களில் அதிகாரிகள் தவறாது சமூகமளிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு திணைக்களத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதேச செயலகத்தில் இடம்பெறும் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்களினதும், பிரதேசத்தினதும் குறைபாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடி அவற்றுக்குத் தீர்வு காண்பது வழக்கமாகும்.

கடந்த சில மாதங்களாக பிரதேச செயலகத்தில் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் போக்குவரத்து, மின்சாரம், வீதி அபிவிருத்தி ஆகிய திணைக்களங்களைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் சமூகமளிப்பதில்லை. இதனால் குறைபாடுகளுக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கும் தீர்வுகாண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் குறித்து விசனம் தெரிவித்துள்ள பொதுமக்கள் மக்களின் குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் எதிர்வரும் கூட்டங்களில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை அனுப்பி வைக்குமாறு திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-115)

## கால்நடைகளை பாதுகாப்பாக வளர்க்குமாறு அறிவுறுத்தல்

தற்போது மழைகாலம் என்பதால் கால்நடைகளை உரிய முறையில் அடைத்து வளர்க்க வேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால் கால்நடைகளுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படக்கூடிய அபாயநிலை காணப்படுகின்றது. இதனால் அவற்றை பட்டிகளில் அடைத்து வளர்க்க வேண்டும்.

கால்நடைகள் நீண்ட நேரம் தண்ணீர் மற்றும் சேற்றுப் பகுதிகளில் நிற்பதால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படக் கூடியதாக இருக்கும்.

எனவே கால்நடைகளை மேட்டுப் பகுதியான இடங்களில் பராமரிக்க வேண்டும். பல தடவைகள் இது தொடர்பாகத் தெரியப்படுத்திய் போதிலும் கால்நடை வளர்ப்பாளர்கள் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் கால்நடைகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கால்நடைப் போதனாசிரியர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (க-421)

# மாற்றுத் திறனாளிகளுக்கென அலுவலகம் அமைக்க கோரிக்கை



அக்கராயன், டிசெ.9

கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கென அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத் தலைவர் தி.சிவமாறன் தலைமையில் அண்மையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் பல்வேறு தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்ட போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளனத்துக்கு நிலையான கட்டடம் இல்லாத நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை, பளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் 5 ஆயிரம் வரையான மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றனர் என இங்கு தெரி விக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-எ-18)

## வவுனியாவில் மழை: மக்கள் அவதியில்

வவுனியா, டிசெ.9

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் போது மரங்கள் சில வீழ்ந்ததுடன் தற்காலிகக் கொட்டகைகளில் வசித்துவரும் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பாரதிபுரம், ஓமந்தை, பூந்தோட்டம், புளியங்குளம், கனகராயன்குளம், பம்மைமடு, செட்டிகுளம், அரசங்குளம், தாண்டிக்குளம், பூவரசங்குளம் உட்பட பல்வேறு இடங்களில் நீண்டகாலமாகத் தற்காலிகக் குடிசைகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு நிரந்தர வீடுகள் இதுவரை அரசினால் வழங்கப்படவில்லை.

இந்திய வீட்டுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் மற்றும் பாரபட்சம் காரணமாக வீடுகள் வழங்கப்படாது நிராகரிக்கப்பட்ட இந்தக் குடும்பங்கள் தற்போது தற்காலிகக் குடிசைகளில் வசித்து வருகின்றன.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக வெள்ள நீர் குடிசைகளுக்குள் உட்புகுந்து பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இரவு வேளைகளில் உறங்குவதற்குக் கூட இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குடும்பங்கள் முன்னைய வருடங்களிலும் கடும் மழை காரணமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சம் புகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன.

இதேவேளை வீடுகளின் மீது மரங்கள் வீழ்ந்ததாலும் சில குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பதையும் அவதானிக்கமுடிகின்றது. (க-402-421)

# புலம் பெயர்ந்தவர்களின் உதவிகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்

### வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு



புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் வழங்கும் உதவிகளை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்-இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் அறிவுசார் நூல்களின் அன்பளிப்பு நிகழ்வும், கிளிநொச்சி மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் "உய்த்தறி" நூல் வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் ந.சயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்; புலம்பெயர்ந்த எமது உறவுகள், பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் கோடிக்கணக்கான நிதியை பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செலவிட்டு வருகின்றனர். இவ்வாறான உதவிகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பாடசாலைகளுக்குள் இராணுவத்தினர் வரவேண்டிய எந்த தேவையும் இல்லை. அவர்கள் உதவிகள் ஏதாவது செய்ய வேண்டுமாயின், வலயக்கல்வித் திணைக்களத்தினூடாகவே செய்ய வேண்டும். உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் நேரடியாக உதவிகளைவழங்கி வருகின்றனர். அங்கு அதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் இயல்புநிலை பாதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இந்த நிலை மாற வேண்டும். இராணுவத்தினர் பாடசாலைக்கு வரவேண்டிய தேவையில்லை. எமது பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள எமக்குத் தெரியும்.

மீளக்குடியமர்வின் போது இராணுவத்தினர் வீடு வீடாக வந்து உதவி செய்தார்கள். ஆனால் அதே இராணுவத்தினர் மாவீரர் வாரத்திலே வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்தனர்-என்று மேலும் தெரிவித்தார்.

நிகழ்வின் முன்னதாக அறிவுசார் நூல்களைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குரிய நூல்களை யாழ்.இந்துக் கல்லூரி அதிபரும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கான நூல்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் வழங்கினர்.

உயர்தர மாணவர் மன்றத்தின் "உய்த்தறி" நூலின் முதற் பிரதியை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா வெளியிட்டு வைக்க யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து நூலுக்கான அறிமுக உரையை பேராசிரியர் க.தேவராசாவும், ஆய்வுரையை கலாநிதி க.ஸ்ரீகணேசனும் ஆசியுரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும் நிகழ்த்தினர். (க-6)

# அமைய அடிப்படையில் 27 பேருக்கு நியமனம்

## புதன்கிழமை வழங்க ஏற்பாடு

ஏறாவூர்,டிசெ.9

ஏறாவூர் நகரசபையில் முதன் முறையாக 27 ஊழியர்களுக்கு ஒரே தடவையில் அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்படவுள்ளது என்று நகரசபைத் தலைவர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

இந்த நியமனங்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஒப்பந்த அடிப்படை யில் பணியாற்றிய சுகாதாரத் தொழிலாளர்கள், சாரதிகள், நூலக உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் வருமானம் திரட்டும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கே வழங்கப்படவுள்ளன என்று அவர் கூறி னார்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளைமறுதினம் புதன்கிழமை வழங்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

"-"

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளைமறுதினம் புதன் கிழமை வழங்கப்படவுள்ளன.

எதிர் காலத்தில் நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்கும் போது தற்போது அமைய ஊழியர்களாகத் தரமுயர்த்தப்படுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வேகமான அலை வீசுவதால் சிறிய இன மீன்கள் திருகோணமலை, உட்துறைமுகத்துக்கு வருகின்றது. அதனால் சிறிய படகுகளில் மீன் பிடிப்பவர்களின் வலைகளில் அதிகளவான மீன்கள் பிடிபடுகின்றன.

# காணி அபகரிப்பை தடுக்க போராட்டம்

### கால்நடை பண்ணையாளர்கள் வட்டமடுவில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்



திருக்கோவில் பிரதேசத்தில் வட்டமடுமேய்ச்சல் தரைக்கு சொந்தமான நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்கு வனபரிபாலன சபை அனுமதி வழங்கியதற்கு கால்நடை பண்ணையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வட்டமடு பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் இருந்து சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக 1976 ஆம் ஆண்டு அரசால் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள வட்டமடு பிரதேசத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

வட்டமடு மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் உள்ள 1380 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்கு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அனுமதி வழங்குமாறு வனபரிபாலன சபையின் தலைவருக்கு உத்தரவிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியானது ஒரு தலைப்பட்சமானது என்று கண்டித்தே ஆலையடிவேம்பு. திருக்கோவில்,அக்க ரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச கால்நடை வளர்ப்பு சங்கத்தினரும், கால்நடை பண்ணையாளர்கள் அதனை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இல்லாவிட்டால் 40 ஆயிரம் கால்நடைகளை அரசு பெறுப்பேற்று கால்நடையாளர்களுக்கு நட்டஈட்டை வழங்க வேண்டும் என்றும் இதற்கான தீர்வு கிடைக்கும் வரை சாகும் வரை உணவுதவிர்ப்புப் போராட்டத்தை கைவிடோம் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# மீள்குடியேற்றத்துக்கு குறைந்த நிதி ஒதுக்கீடு

## கிழக்கு மாகாண சபை 'பட்ஜெட்'டின் நிலையை விளக்குகிறார் கலையரசன்

மட்டக்களப்பு,டிசெ.9

அடுத்த ஆண்டுக்கான கிழக்கு மாகாண சபை வரவு - செலவுத் திட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்றவற்றுக்கு மிகக் குறைந்தளவு நிதியே ஒதுக் கப்பட்டுள்ளது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தமுறை வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது நகரப் புறங்களை மையப்படுத்திய அபிவிருத்தியையே குறிக் கோளாகக் கொண்டு மேற் கொள்ளப்பட்டதே தவிர பின் தங்கிய கிராமப்புறங்களைக் கருத்தில் கொண்டதாக அமையவில்லை.

வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் எந்த விதத்திலும் உள்வாங்கப்படவில்லை.

ஆனால் கல்முனையில் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு மாத்திரம் சிறுதொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள் ளது.

இந்தச் செயற்பாட்டின் மூலம் குறித்த பிரதேசத்தில் வாழுகின்ற சிறுபான்மைச் சமூகம் என்ற ரீதியில் தமிழர்கள் எவ்வாறு இன் னுமொரு சிறுபான்மைச் சமூகத்தால் ஒதுக்கப்பட்டுச் செல்கின் றார்கள் என்பதை அவதானிக்க முடிகின்றது.



நாவிதன்வெளி பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தால் இந்தப் பிரதேச மக்கள் துன்ப, துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

2011 ஆம் ஆண்டு 150 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்த இந்த வைத்திய சாலையில் 2012 ஆம், 2013 ஆம்ஆண்டுகளில்நிரந்தரவைத்தியர் இல்லாத காரணத்தால் மக்களின் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டு பல மைல்கள் தூரம் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கு அந்தப் பிரதேச மக் கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக நேரடியாக சுகாதார அமைச்சரிடம் தெரிவித்தும் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வைத்தியர் நியமிக்கப்படவும் இல்லை. இதிலிருந்து தமிழ்க் கிராமங்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகின்றது என்பது புலனாகின்றன.

பிராந்திய அபிவிருத்தி என்ற போர்வையில் 10 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் 2 முஸ்லிம் கிராமங்களும், ஒரு சிங்களக் கிராமமுமே தெரிவு செய்யப்பட்டுள்ளதே தவிர, தமிழ்க் கிராமம் எதுவும் தெரிவு செய்யப்படவில்லை.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எத்தனையோ தமிழ்க் கிராமங்கள் இருக்கின்றன. ஆனால் நிதி ஒதுக்கீடுகளை வைத்து ஒப்பீடு செய்யும்போது, அம்பாறை மாவட்டத்தில் தமிழர் கள் இல்லையா என்ற கேள் வியை கேட்க வேண்டிய நிலை உருவாகி இருக்கின்றது.-என்றார். (ச-31)

# மிதந்து வந்த கைக்குண்டு

மட்டக்களப்பு,டிசெ.9

மட்டக்களப்பு,கிரான் விஷ்ணு கோயிலின் பின்புறமாக உள்ள நீரோடை ஒன்றிலிருந்துமிதந்து வந்த கைக்குண்டை படையினர் நேற்றுமுனதினம் சனிக் கிழமை கைப்பற்றியுள்ளனர்.

இந்த கைக்குண்டு சொப்பிங் பை ஒன்றினுள் சுற்றி பொதி செய்யப்பட்ட நிலையில் மிதந்து வந்துள்ளது.

இத்னைப் பொதுமக்கள் கண்டு தமக்குத் தெரிவித்தையடுத்து படையினருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்ததாக அந்தப் பகுதிக் குப் பொறுப்பான கிராம சேவையாளர் என். ரவீந்திரன் தெரிவித்தார்.

புதைக்கப்பட்டிருந்த இந்தக் குண்டு வெள்ளத்தால் நிலத்தி லி ருந்து மேலெழுந்து மிதந்து வந்திருக்கலாம் என்று படையினர் தெரிவித்தனர். (ச)

# இரு பஸ்கள் மோதியதில் ஒருவர் காயம்



மட்டக்களப்பு,டிசெ.9

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோட்டைக்கல்லாறு பாலத்தில் இரண்டு பஸ்கள் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து வந்த தனியார் பஸ் முன்னே சென்று கொண்டிருக்கும்போது திருகோணமலையில் இருந்து வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் முந்திச் செல்வதற்கு முற்பட்ட வேளையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# கட்டுவலையை தடைசெய்தால் மீனவக் குடும்பங்கள் பட்டினி

## புல்மோட்டை மக்கள் கவலை

மட்டக்களப்பு.டிசெ.9

புல்மோட்டை கொக்கிளாய் சிறு கடலில் இறால் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கட்டுவலை சட்டவிரோத தொழில் எனக் கருதி தடை செய்யப்படுமானால் பல் லாயிரக்கணக்கான குடும்பங் கள் பட்டினியால் வாடும் அபாயம் ஏற்படும் என்று புல்மோட்டை பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

புல்மோட்டையில் வாழுகின்ற குடும்பங்களில் குறைவான



குடும்பத்தினரே அரச தொழிலில் சம்பளம் பெற்று வாழ்க்கையை கொண்டு செல்கின்றார்கள். மிகுதியான அனைத்துக் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையில் கொக்கிளாய் சிறு கடலில் இறால் பிடித்தே தங்கள் ஜீவனோ பாயத்தை கொண்டு செல்கின்றார்கள் என்று புல் மோட்டை மீனவர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தொழிலைச் சுமார் நூற்றாண்டுக்கு மேலாக அவர்களின் பாரம்பரிய தொழிலாக செய்துவருகின்றார்கள். ஆனால் கடந்த மாதங்களில் முல்லைத் தீவு மாவட்ட கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளின் திடீர் சோதனையின்போது புல் மோட்டை மீனவர்கள் பலர்பலதடவை கள் கைது செய்யப்பட்டு முல்லைதீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நூற்றாண்டுகாலமாக செய்யப்பட்ட தொழில் ஒரே தடவையில் முற்றாகத் தடை செய்யப்படுமானால் புல்மோட்டை மீனவர்கள் பாதிக்கப்படுவர்.

இந்த விடயம் தொடர்பில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று புல்மோட்டை மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-257)

## ஐவருக்கு சிறை

கொழும்பு.டிசெ.9
ஹிகுரான்கொட பொலிஸ் பிரிவின் பன்சல்கொடெல்ல பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட ஐவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொலநறுவை தொல்பொருள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் ஹிகுரான்கொட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச)



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஊனா மெக்லேவை நாடாளுமன்ற கட்டட வளாகத்தில் சந்தித்தார். இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் சிறுவர் பாதுகாப்பு சிறப்பு அதிகாரி ஹேமால் ஜயவர்த்தனவும் கலந்துகொண்டார். (ச-10)

## தொழில்நுட்ப பல்கலை தியகமவில்

தொழில்நுட்ப கற்கை நெறிக்காக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்காக, ஹோமாகம, தியகம பகுதியில் பல்கலைக்கழகமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
நவீன தொழில்நுட்பப் பிரிவுகளுடன் கூடிய இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஆயிரத்து 800 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் கல்வி நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் கீர்த்தி மாவல்லகே தெரிவித்தார்.

# மண்டேலா கற்றுத்தந்ததை மறந்தனர் அரசியல்வாதிகள்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு.டிசெ.9
மறைந்த நெல்சன் மண்டேலா கற்றுத் தந்த பாடங்களை மறந்து சில கடும் போக்கு சிங்கள அரசியல்வாதிகள் மற்றைய இன மக்களை கொடுமைப்படுத்துகிறார்கள்.
இவ்வாறு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.
தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவையொட்டி பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமது அரசியல் இருப்புக்காக ஏனைய சமூகங்களை எதிர்க்கவும் - எரிக்கவும், கொல்வதற்கும் தற்போதைய சிங்கள அரசுத் தலைவர்கள் - அரசியல்வாதிகள் தயாராக இருக்கின்றனர்.
சொந்த நலன்பற்றி மட்டும் சிந்திக்காத ஓர் அரசியல்வாதியாக, ஒரு தேசமாக எல்லோரும் அமைதியுடனும், அன்புடனும் சேர்ந்து வாழ வேண்டும் என்பவராக நெல்சன் மண்டேலா இருந்தார். அவரிடமிருந்து நாங்கள் நிறைய பாடங்



கள் கற்றுக்கொண்டோம்.
ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஊடாக மீண்டும் ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்திருந்தால் தென்னாபிரிக்கா இன்னொரு சிம்பாப்வேயாக மாறியிருக்கும். அதனைப் புரிந்து கொண்டு செயற்படும் அளவுக்கு பக்குவம் உள்ளவராக அவர் இருந்தார். அதனால் தான் அவர் மன்னிக்கவும் தயாராக இருந்தார்.
இரு தரப்பினர் இடையேயும் நம்பிக்கையை கட்டியெழுப்பி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்திருந்தார். நெல்சன் மண்டேலாவிடம் இருந்து கற்றுக் கொண்டதன் அடிப்படையில் எமது அரசு 1983 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து நாங்களும் உண்மையை அறியும் ஆணைக் குழுவை உருவாக்கியிருந்தோம். சில சிங்கள கடும்போக்குவாதிகளின் செயற்பாடுகளால் ஏற்பட்ட துயரம் தொடர்பில் மன்னிப்பு கோரியிருந்தேன். ஆனால் நாட்டின் தற்போதைய நிலைமை கவலையளிக்கின்றது. மற்றைய இனங்களையும், சமூகங்களையும் ஒடுக்கு வதன் ஊடாக தாங்கள் சிங்கள - பௌத்த தேசத்துக்கு மட்டும் பிரதிநிதிகள் என்பதை காட்ட முயல்கின்றனர். வெறும் வாக்குகளை மட்டும் சேர்த்துக் கொள்வது தான் அவர்களின் தேவை- என்றார். (ச-5)

## பணமோசடி செய்த நபர் மாட்டினார்



கொழும்பு.டிசெ.9
வெளிநாட்டு கப்பல்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தக் குற்றச்சாட்டில் பெபிலியான பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த நபர்களிடம் 12 லட்சம் ரூபா பண மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.
அதனையடுத்து பாதிக்கப்பட்ட மூவருக்கும் பணம் வழங்குவதற்கு அவர் இணக்கம் தெரிவித்தார். (ச)

# மண்டேலா வழியில் பயணிப்பதைத் தடுக்க முடியாது

### மனோகணேசன் தெரிவிப்பு

கொழும்பு.டிசெ.9
நாட்டில் துன்பத்துக்கும், அடக்கு முறைக்கும் உள்ளாகியுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு 'மடிபா' என்று செல்லமாக அழைக்கப்படும் நெல்சன் மண்டேலா வாழ்ந்தும், இறந்தும் வழி காட்டுகின்றார்.
உலகம் இன்று பரந்து விரிந்து விட்டது. இனிமேல் இங்கு இனவாத பூச்சாண்டியெல்லாம் விலை போகாது என்று மண்டேலா எங்களுக்கு வழி காட்டி விட்டார். அவர் வழியில் நாம் பயணிப்பதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தி விட முடியாது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.
தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவையொட்டி மனோகணேசன் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மூன்று கட்டங்




களைக் கொண்டது என்பது இந்த நாட்டு அரசியல் அதிகார தலைவர்கள் மனதில் கொள்ள வேண்டும். முதலாவது அவர் இன வாத அடக்கு முறைக்கு எதிரான ஒரு சாத்வீக போராளி. இரண்டாவது சாத்வீக சமர் இராணுவ அடக்கு முறையால் நசுக் கப்பட்ட போது ஆயுதம் தூக்க நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு ஆயுதப் போராளி.
மூன்றாவது, உலகத் தின் துணையுடன் வெற்றி பெற்று ஆட்சிய திகாரத்தைப் பெற்ற தன் பின்னர், சமரில் தோல்வியடைந்த வெள்ளையர் தரப்பையும் அரவணைத்து உண்மையான நல்லெண்ண தேசிய ஐக்கியத்தை உருவாக்கிய மனிதாபிமானம் மிக்க மகத்தான ஒரு தேசியத் தலைவன்.
இந்த மூன்று கட்டங்களும் சேர்ந்ததுதான் மண்டேலா சிந்தனை. இந்த சிந்தனைதான் இந்த நாட்டுத் தலைவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்- என்றார். (ச-5)

# 100 முன்னரும் தானே ஓடிய ரயில்

### ஒரே நாளில் நிகழ்ந்த அபூர்வ சம்பவங்கள்

கொழும்பு.டிசெ.9
சாரதி எவருமின்றி சில நாள் களுக்கு முன்னர் ரயில் இயந்திரமொன்று தெமட்ட கொடையிலிருந்து ரத்மலானை வரை பயணித்ததைப் போலவே, கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது என்று அதிர்ச் சியூட்டும் தகவலொன்று வெளியாகியுள்ளது.
இந்தச் சம்பவம் நிகழ்ந்த அதே நாளில் 1913ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி அதிகாலை 1.45 மணிக்கு இடம்பெற்றுள்ளது என்று ரயில்வே ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.
ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் இடம் பெற்ற சம்பவம் குறித்து அதிர்ச்சியூட்டும் இந்தத் தகவல் ரயில் சேவையைச் சேர்ந்த மூத்த ஊழியர்களால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.
1913 ஆம் ஆண்டு சம்பவ மானது.



மாளிகாவத்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் எஞ்சின் ஒன்று தானாக இயங்கி களனிவெளி ரயில் பாதையில் மாளிகாவத்தை, மருதானை, நிலையங்களைக் கடந்து கொழும்பு கோட்டை திசை நோக்கி சுமார் மூன்றரை கிலோ மீற்றர் தூரம் பயணித்து கப்பிதாவத்தை இந்து ஆல யம் வரை வந்து தரித்தி ருக்கின்றது. இந்தச் சம்பவத்திலும் எந்த இடர்களும் ஏற்படவில்லை.
முதன்முதலாக சாரதி இல்லாமல் சென்ற ரயில் சுமார் 3.5 மைல் பிரயாணம் செய்திருக்கின்றது. கடந்த வாரம் சாரதி இல்லாமல் பிரயாணித்த ரயில் இயந்திரம் சுமார் 15 கிலோ மீற்றர் வரை பயணித்திருக்கின்றது. ஒரே நாளில் ஒரே நேரத்தில் இந்த ஆச்சரியத்தக்க சம்பவம் நடை பெற்றிருப்பது சகலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)

ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை



முதலாம் திருவிழா

திருச்சிற்றம்பலம்
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎம் தோழி பரிசேலோ ரெம்பாவாய்
திருச்சிற்றம்பலம்

குறிப்பு:
முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களினால் அமைக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையத்தில் திருவெம்பாவை திருவிழா பத்துத் தினங்களும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட உள்ளது.

S.T. PARAMESWARAN & CO. (PVT) LTD.
Customs House Agent, Clearing & Forwarding Agency
TRANSPORT SERVICES
Colombo-Jaffna-Colombo
Head Office: 200 2/1, Central Road, Colombo-12.
Tel: 011 234 7210, Fax: 011 239 5472
Hot Line: 0777 306473, E-mail: stpcargo5@hotmail.com

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழும் நிலைமை ஏற்படக்கூடாது

ஐநூறுக்கும் அதிகமான பாகிஸ்தானைச் சேர்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இலங்கையில் தஞ்சம் கோரியுள்ளனர் என்றும் இவர்களுக்கு உதவிசெய்யுமாறும் இலங்கை கத் தோலிக்க பேரவை அரசிடம் கோரிக்கை விடுத்திருப் பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கை யில் கத்தோலிக்கர்கள் செறிவாக வாழும் நீர் கொழும்பு, கல்கிஸை, மொரட்டுவ ஆகிய பகுதிகளில் இவர்கள் அநாதரவான நிலையில் தங்கியுள்ளனர்.

இலங்கையின் சட்டங்களின்படி அவர்கள் இங்கு தொழில்செய்ய முடியாது. ஆகவே, மூன்றாம் தரப்பு ஒன்றின் உதவியின்றி அவர்கள் வாழ முடியாது. இப்படியான நிலையில்தான் ஜனாதிபதி ராஜபக்ஷவினதும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினதும் உதவியை இலங்கை கத்தோலிக்க பேரவை கோரியுள்ளது. இந்த விவகாரத்தை பரிசுத்த பாப்பரசரினதும் பிரதான திருச்சபைகளினதும் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாக கத்தோலிக்க திருச்சபையின் சமூக திட்டங்களுக்குப் பொறுப்பான வண. குருகுல சூரியா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானைவிட இலங்கை தமக்குப் பாதுகாப்பான நாடு என்[illegible]கின்றனர் பாகிஸ்தானின் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். இவர்களது நிலைமை பரிதாபத்துக்குரியது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் ஆன்மிகத் தலைவரான பரிசுத்த பாப்பரசர் தலைமையிலான உலகளாவிய ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் ரோமன் கத்தோலிக்க திருச்சபை விளங்குகிறது. பாகிஸ்தான் சனத்தொகையில் சுமார் ஒரு சதவீதமான – பத்துலட்சம் – கத்தோலிக்கர்கள் தாம் அடக்குமுறைகளுக்கு உள்ளாகிவருவதாகவும் தமது தேவாலயங்கள் தாக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர். 2009இல் கராச்சியில் 6 கிறிஸ்தவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பாகிஸ்தானின் சுவாட் பள்ளத்தாக்கில் ஆதிக்கம் செலுத்தும் தலிபான்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் மீது வரிவிதிப்பு, கத்தோலிக்கர்கள் கணிசமாக வாழும் பாகிஸ்தானின் வடமேற்கு புரண்டியர் மாகாணத்தில் இஸ்லாமிய ஷரியா சட்ட நடைமுறை போன்றவற்றால் கத்தோலிக்கர்கள் பலர் அப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தனர். கிறிஸ்தவ குடியிருப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். 50 வீடுகள் தாக்கி அழிக்கப்பட்டன. 2011 இல் பிரசித்தி பெற்ற சென். தோமஸ் தேவாலயம் தாக்கப்பட்டது. பாடசாலைகளை நிறுவி கிறி ஸ்தவ மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருப்பதும் மத குரோதம் வளரக் காரணமாக இருக்கமுடியும். சில ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி 534 பாடசாலைகளும் 53 விடுதிகளும் 8 கல்லூரிகளும் 7 தொழில் நுட்பக் கல்லூரிகளும் பாகிஸ்தான் கத்தோலிக்க திருச்சபையின் பராமரிப்பில் இருந்து வந்தன.

பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதோர் ஜனாதிபதி பதவியையோ பிரதமர் பதவியையோ பிரதான பதினொரு பதவிகளையோ வகிக்கமுடியாது என்று சட்டம் கூறுகிறது. இதற்கு முன் சிறுபான்மைச் சமூகத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைச்சரவையில் இடம்பெற்ற கத்தோலிக்க அமைச்சர் ஒருவர் கொலைசெய்யப்பட்டார். ஆகவே பாகிஸ்தானில் கத்தோலிக்கர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

ஆனால் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து வெளியேறி இலங்கையில் புகலிடம் கோரியதுதான் வியப்பை அளிக்கிறது. இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கத்தோலிக்கர்களில் பலர் குடும்பங்களாகவும் வந்துள்ளனர். இவர்களில் பாடசாலை செல்லும் வயதுள்ள சிறுவர் சிறுமியரும் உள்ளனர். இவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. இளம் பெண்கள் பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தில் தம்மைப் பதிவுசெய்துவிட்டு இலங்கையில் தங்கியுள்ளனர். அகதிகளைப் பொறுப்பேற்கும் நிலையில் இலங்கை இல்லையென்றும் இவர்களுக்குப் பொருத்தமான மூன்றாவது நாடு ஒன்றைக் கண்டறியும்வரை இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கமுடியும் என்றும் வண. குருகுலசூரியா கூறுகிறார். அச்சம் காரணமாக பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய இவர்களுக்கு கொதிக்கும் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழும் நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. ஏனெனில் சமீப காலமாக இலங்கையில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் சிறுபான்மை இனங்கள் மற்றும் மதங்களின் பாதுகாப்பைக் கேள்விக் கிட மாக்கிவிட்டுள்ளன.

# தான் கொல்லப்படுவார் என்பதை றெக்ஷயன் முன்பே அறிந்திருந்தாரா?

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
-கோகுலன்

றெக்ஷயன்கொலையுண்ட விவகாரம் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் [illegible]த்தையும் மன வேதனைகளையும் உருவாக்கியிருக்கின்றன. இந்தக் கொலை குறித்த ஆரம்ப குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் ஒரு பங்காளி கட்சியான ஈ.பி.டி.பி யால் இலங்கை கடற்படையின் மீது சுமத் தப்பட்டது. கடற்படைக்கு வெகு தூரத் திலுள்ள நெடுந்தீவிலும் ஒரு படைப் பிரிவு இருக்கிறது. இன்னொரு குற்றச் சாட்டு அமைச்சர் விமல் வீரவன்ச வின் தேசிய சுதந்திர முன்னணி யால் த.தே.கூட்டமைப்பு மீது தெரிவிக்கப்பட்டது. 2009 மே 9 ஆம் திகதி போர் முடிவுற்றதையடுத்து முதலாவது அரசியல் கொலையை நடத்தியிருப்பதாக அந்தக் கட்சி குற்றஞ் சாட்டியிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ குற்றவியல் புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு விசாரணையொன்றை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டார். அதற்கு ஏழு நாள்களுக்கு பின்னர் ஈ.பி.டி.பியின் முக்கிய நபரான கந்தசாமி கமலேந்திரனை (47) புலனாய்வாளர்கள் கைது செய்தார்கள்.

கமலேந்திரன் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். கொலையுண்ட நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயனின் இறுதிச் சடங்கின் போது சவப்பேழையை முன்னின்று காவிச் சென்றவர்களில் ஒருவராகவும் இருந்தவர். பிரதேச சபைத் தலைவரின் மனைவியும் கைதானவர்களில் ஒருவர். இவர் முதலில் தமது கணவர் நஞ்சருந்தி தற்கொலை புரிந்துகொண்டதாகக் கூறியிருந்தார் பின்னர் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு கணவர் ஒரு பல்லை பிடுங்கிக் கொண்டதால் இறப்பு ஏறபட்டிருக்கலாம் என்று தெரிவித்திருந்தார்.

### கொலையுண்டவரின் முக்கிய கடிதம்

இதே சமயம் இறந்தவரின் சகோதரியிடமிருந்து புலனாய்வாளர்களுக்கு கிடைத்த முக்கிய கடிதம் ஒன்றில் சில முக்கிய குற்றச்சாட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. கொலையாவதற்கு மூன்று நாள்களுக்கு முன் அந்தக் கடிதம் சகோதரியிடம் றெக்ஷயனால் கொடுக்கப்பட்டிருந்ததுடன் தமக்கு ஏதும் நடந்தால் கடிதத்தை பகிரங் கப்படுத்துமாறு கேட்டிருந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இந்தக் கடிதத்தில் தமது மனைவிக்கு கமலேந்திரனுடன் கூடா நட்பு இருப்பதாகவும் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் கடிதத்தை வெளிப்படுத்துமாறும் றெக்ஷயன் கேட்டிருந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஈ.பி.டி.பி தலைவ ரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இந்த மாதிரி பிரச்சினைகள் எல்லா கட்சிகளிலுமே காணப்படுகின்றன வென்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி என்ன நடந்திருக்கிறது என்று அமைச் சரிடம் வினவினார். கீழ் நிலை நபர்கள் செய்யும் காரியங்கள் உயர் தலைவர்களை பெரிதும் பாதிக் கிறது என்றும் ஜனா திபதி குறிப்பிட்டார். கமலேந்திரனை பதவி விலகும்படி கேட்டிருப்பதாகவும் ஆனால் அவ்வாறு அவர் இன்னும் செய்யவில்லையென்றும் அமைச்சர் ஜனாதிபதியிடம் கூறினார். அவர் அவ்வாறு செய்யாது போனால் அவர் மீது ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேவானந்தா தெரிவித்தார். பொலிஸ் நடவடிக்கைகளில் தாம் தலையிட மாட்டார் என்றும் முடிவு வரை அது முன்னெடுக்கப்படுவதை தாம் பார்க்கப் போவதாகவும் தெரிவித்தார்.

நெடுந்தீவில் வசம்பா கடற்படை தளத்திலுள்ளவர்களுடன் கருத்து மோதல் ஒன்றில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதாலேயே கடற்படையினர் மீது ஈ.பி.டி.பியினர் முதலில் குற்றஞ்சாட்டியிருந்தனர். நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான படகுச் சேவை பற்றியது இந்த கருத்து மோதல் என்று கூறப்பட்டது. என்றாலும் அந்த விடயம் பெரிதான ஒன்றாக இருக்கவில்லையென்று கொழும்பிலுள்ள கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

றெக்ஷயன் கொலை செய்யப்படுவதற்கு சுமார் ஒரு மாத காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் தேநீ ர் கடையொன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஒருவருக்கும் ஆயுதம் வைத்திருந்த ஒருவருக்குமிடையில் தர்க்கம் ஒன்று இடம் பெற்றுள்ளது. அந்த நபர் தம்மிடமிருந்த 9 மில்லிமீற்றர் பிஸ்டல் துப்பாக்கியை இழுத்தெடுத்து மற்றவரின் தலையின் மீது சுடுவதற்கு வைத்துள்ளார். பொலிஸார் அழைக்கப்பட்டனர். ஜோசப் பட்றிக் அமல்ராஜ் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த பிஸ்டல் பறிமுதலாயிற்று. பொலிஸ் விசாரணைகளில் அமல்ராஜ் என்பவர் கமலேந்திரனின் நம்பிக்கைக்குரிய ஒருவர் என்பது தெரியவந்தது.

### சட்ட வைத்திய அதிகாரிக்கு அச்சுறுத்தல்

மூன்று பிள்ளைகளின் தந்தையான றெக்ஷயனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டது. பரிசோதனை நடைபெறுவதற்கு சற்று முன்னதாக மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி செல்லையா சிவரூபனுக்கு அவரது அதிகார பூர்வ தொலைபேசிக்கு இனம் தெரியாத அழைப்பொன்று வந்தது. சம்பந்தப்பட்டவரின் இறப்புக்கு தற்கொலை தான் காரணம் என்று தீர்ப்பளிக்குமாறு அவரிடம் கூறப்பட்டது. அதிகாரி துணிச்சலுடன் அந்த மிரட்டலுக்கு சம்மதிக்க மறுத்து விட்டார். அதன் பின்னர் ஈ.பி.டி.பி உறுப்பினர் என்று கூறப்பட்ட ஒருவர் டாக்டர் சிவரூபனின் உதவியாளர் ஒருவரைச் சந்தித்து இறப்பு தற்கொலை யென தீர்ப்பளிக்குமாறு டாக்டரிடம் கூறும்படி சொல்லியிருக்கிறார்.

அதுவும் புறக்கணிக்கப்பட்டதையடுத்து சிவரூபனுக்கு இன்னுமொரு தொலைத் தொடர்பு அழைப்பு வந்தது. இப்போது அழைப்பை எடுத்தவர் தான். ஈ.பி.டி.பி உறுப்பினர் என்று கூறிக் கொண்டதுடன் நாங்கள் சொல்கிறபடி நீர் செய்யாவிடில் வேறு மருத்துவர் பிரேத பரிசோதனையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் மிரட்டினார். ஆனால் டாக்டர் சிவரூபன் பிரேத பரிசோதனையை நடத்தினார். இறப்பு துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டிருக்கிறது என்றும் தமது தீர்ப்பில் கூறினார். இறந்தவரின் தலையில் புதைந்திருந்த 9 மில்லிமீற்றர் ரவையொன்றும் அப்புறப்படுத்தப்பட் டதாகவும் அவர் தெரிவித்தார்.

### சகோதரி அளித்த றெக்ஷயனின் கடிதம்

றெக்ஷயனின் மனைவி அனிதா (35)

### சகோதரி வெளியிட்ட கடிதம் தரும் தகவல்

ஆரம்ப விசாரணை நடத்திய நெடுந்தீவு பொலிஸில் பொய் வாக்கு மூலம் கொடுத்திருப்பதை புலனாய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமையன்று புங்குடுதீவில் வைத்து அனிதா கைது செய்யப்பட்டார். கமலேந்திரனுடன் தமக்கு கள்ளத் தொடர்பு இருந்ததாக அவர் ஒப்புக் கொண்டிருந்தார் என்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். அன்றைய தினம் பிற்பகல் கொழும்பு பார்க் வீதியிலுள்ள ஈ.பி.டி.பி காரியாலயத்தில் வைத்து கமலேந்திரன் கைது செய்யப்பட்டார். றெக்ஷயனை அவர் வீதி அமைப்பொன்றுக்கென ஒப்பந்தக்காரருக்கு வழங்குவதற்காக 10 லட்சம் ரூபாய்க்கான செக்கில் கையெழுத்திடும்படி கமலேந்திரன் நெருக்குதல் செய்துள்ளார் என்பதை புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். அவ்வாறு பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். றெக்ஷயனின் மகளையும் க்மலேந்திரன் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார் என்பதையும் புலனாய்வாளர்கள் கேள்வி யுற்றுள்ளார்கள். இறந்தவரின் சகோதரி விசாரணையின் போது இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.


ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கூறுவதற்கு மாறாக அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருக்கிறார்களா என்பதும் வடக்கில் உறுதிப்பாட்டை நிலைநிறுத்த முடியாதபடி தொடர்ந்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்களா என்பதும் றெக்ஷயனின் கொலையைத் தொடர்ந்து கிளம்பியுள்ள கேள்விகளாகும். வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரின் வேறு இரு சகோதரர்களும் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர்களாய் இருந்து வருகின்றனர்.

ஈ.பி.டி.பியின் தலைமையின் அங்கீகாரத்தோடு அல்லது இல்லாமலே அதன் உறுப்பினர்கள் ஆயுதங்களை சுழற்சி முறைகளில் வைத்திருக்கிறார்கள் என்ற விடயம் இப்போது வெளிச்சமாகியுள்ளது. இன்னும் மோசம் என்னவென்றால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னரும் வடக்கில் அரச அதிகாரிகள் மத்தியில் அச்ச பயபீதியை உருவாக்கு வதற்கு இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் தெளிவாகிறது. இதற்கு யாழ். சட்ட வைத்திய அதிகாரிக்கு நேர்ந்ததைக் குறிப்பிடலாம்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கையிலும் ஈ.பி.டி.பி மற்றும் ரி.எம்.வி.பி கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. சட்ட விரோத செயற்பாடுகளில் இனந்தெரியாத குழுக்கள் ஈடுபடுவதான குற்றச்சாட்டுகளில் தங்கள் பெயர்களைப் பயன்படுத்திக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டிருந்ததை ஆணைக்குழு நிராகரித்திருந்தது. இந்தக் கட்சிகளின் மறுப்பின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித பயனும் ஏற்படவில்லையென்று தெரிவித்திருந்த ஆணைக்குழு இது எந்தவித அர்த்தமுள்ள நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கப் போவதுமில்லையென்று தெரிவித்திருந்தது.

2011 ஆம் ஆண்டு நல்லிணக்க ஆணைக் குழவின் அறிக்கை வெளியானவுடன் அதன் மீது வழக்குத் தொடரப் போவதாக தேவானந்தா அச்சுறுத்தியிருந்தார். ஆனால் அதனை அவர் இதுவரை செய்யவில்லை.





# உற்சாகமே வெற்றிக்கான திறவுகோல்

அ.வசந்தா

பயம் அதிகமாகும்பொழுது ஒரு சிலருக்கு உற்சாகம் வரும். ஒரு சிலருக்கு கவலைகளும், பயங்களும் அதிகமாகும். உற்சாகம் உள்ளவர்களுக்கு வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். கவலைகள் அதிகமாக உள்ளவர்களுக்கு வாழ்க்கை துன்பத்தின் பாதையிலேயே நடைபோடும்.

நம் மகிழ்ச்சி, நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். நமது கவலை உடன் இருப்பவர்களுக்கும் கவலையையும், தளர்வையும் ஏற்படுத்தும். ஒரு மனிதனிடமிருந்து பரவும் தொற்று நோயைப் போன்றது இது. நம்மிடமிருந்து தொற்றுவது நன்மைகளும், மகிழ்ச்சியாகவும் மட்டுமே இருக்க வேண்டும்.

பள்ளி செல்லும் வயதில் வெள்ளிக்கிழமை மாலையில் ஏற்பட ஆரம்பிக்கும் உற்சாகம் திங்கட்கிழமை காலையில் மறைந்து விடுகிறது. கல்லூரிக் காலத்தில் விடுமுறைகளில் உற்சாகம் குறைந்து கல்லூரி நாள்களில் உற்சாகம் அதிகரிக்கிறது. வேலை தேடும் காலங்களில் மிகுந்த ஆவலுடன் நேர்முகத்தேர்வுக்குச் செல்லும் நாள்களும், முதல் நாள் வேலைக்கு செல்லும் நாளும் உற்சாகம் மிகுந்தது.

உற்சாகங்கள் வயதுக்கு தகுந்தவாறும், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும் மாறுகிறது. ஆனாலும் ஒரு சில நாள்களைத் தவிர பெரும்பாலும் மனம் உற்சாகத்துடன் நம்மை இயங்க வைப்பதில்லை. சூழ்நிலைகள்தான் உற்சாகத்தைத் தருகின்றதே தவிர, நம் மனது தானாக உற்சாகத்தை உருவாக்குவதில்லை.

மனிதன் பிறந்தது முதல் ஏதோ ஒன்றை தேடி அலைவதற்கே வாழும் காலங்கள் சரியாகிவிடுகிறது. எப்போதும் இருக்கும் இந்தத் தேடலில் உற்சாகத்தை உறங்க வைத்து விடுகிறோம். தேடல் எந்த அளவுக்கு அவசியமோ, அதே போன்று உற்சாகமும் அவசியம். உற்சாகம் இருந்தால்தான் தேடல் நிறைவு பெறும்.

உற்சாகம் என்பது ஏதோ ஒன்றை சார்ந்தது அல்ல. ஒன்றிலிருந்து மற்றொன்று என விரியும் சங்கிலித் தொடரின் இறுதியே உற்சாகமாகும். மனம்தான் உற்சாகம் என்று பலரும் நினைக்கின்றனர். மனம் ஒரு முக்கிய காரணியாக இருந்தாலும் அதன் தொடர்ச்சியாக உடல் நலம், எண்ணங்கள், செயற்பாடுகள் என தொடரும் அது ஒரு சங்கிலித் தொடர்.

### சத்தான உணவுகள்

உடல் நலத்துடனும், சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டும். உடல் நலத்திற்கு சத்தான உணவுகள் அவசியம். சத்தில்லாத உணவுகள் உடலின் செயற்பாட்டை மந்தமாக்குகிறது. மந்தமான உடல் சிந்தனையிலும் மந்தத்தை உருவாக்குகிறது. சத்தான சரிவிகித உணவு உடல் நலத்தையும், சுறுசுறுப்பையும் தருகிறது.

> நமது கவலை உடன் இருப்பவர்களுக்கு கவலையையும், தளர்வையும் ஏற்படுத்தும். ஒரு மனிதனிடமிருந்து பரவும் தொற்று நோயைப் போன்றது இது.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சி என்றவுடன் மணிக் கணக்காகச் செய்யும் உடற்பயிற்சி என்றோ, எடைகளைத் தூக்கி கடுமையாக செய்யும் உடற்பயிற்சி என்றோ நினைக்க வேண்டாம், கால் மணி நேர பயிற்சியே போதும். உடற்பயிற்சியே செய்யாமல் இருக்கும் நிலையில் 15 நிமிடம் என்பது போதுமானது. 15 நிமிடத்தில் என்ன செய்வது? கைகள், கால்கள், தலை, இடுப்பு, முதுகு, விரல்கள் என உடலின் அனைத்து பாகங்களையும் சோம்பல் முறிக்கும் பயிற்சியை செய்யுங்கள்.

### நடை பழகுங்கள்

எங்களுக்குத் தான் நடக்கத் தெரியுமே என்கிறீர்களா? நடக்கத் தெரியும் என்றாலும் நாம் நடப்பதற்கு ஆவல் கொள்வது இல்லை, அதுவும் குறிப்பாக காலை நேரத்தில். காலையில் அதிக தூரம் நடக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு 15 நிமிடம் நடந்தாலே போதும். காலை நேரத்தில் உற்சாகமாக செயற்படும் ஒவ்வோருவரின் உற்சாகமும் நம்மையும் தொற்றிக் கொள்ளும்.

### இயற்கையை ரசியுங்கள்

இயற்கையை ரசிக்க தொலை தூரத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. நகரத்தில் வாழ்ந்தாலும், கிராமத்தில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு நாளையும் இயற்கையின் துணையோடுதான் கழிக்கிறோம். ஆனால் அதை நாம் உணர்வதில்லை என்பது உண்மையிலும் உண்மை. காலை நேரத்தின் பனியையும், தென்றலையும், வெயிலையும், அமைதியையும், வீதியின் அழகையும் உணர்வதற்கு ஒரு சில நிமிடங்கள் போதும்.

நகர வாழ்க்கையின் இரவில் நிலவை, நட்சத்திரங்களை எத்தனை பேர் பார்த்திருப்போம். ஒரு மூன்று நிமிடம் ஒதுக்கி வானத்தை ஆராயுங்கள் அது கொடுக்கும் அடுத்த நாளுக்கான உற்சாகத்தை.

### இருக்கும் இடத்தில் மனதை செலுத்துங்கள்

தண்ணீரானது அது இருக்கும் பாத்திரத்துக்கு ஏற்ப தன்னை நிலை நிறுத்திக்கொள்கிறது. அது போன்று பள்ளியில், கல்லூரியில் இருக்கும் போது பாடங்களைப் பற்றியும், விளையாட்டு மைதானத்தில் விளையாட்டும், சாப்பிடும் பொழுது சாப்பாட்டிலும், படுக்கையில் தூக்கத்தை மட்டுமே நினையுங்கள். சிந்தனைகள் இருக்கும் இடத்திற்கு சம்பந்தமில்லாமல் விலகிச் செல்லும்பொழுது பதட்டங்களும், கவலைகளும் அதிகமாக வாய்ப்பிருக்கிறது. எனவே மனதை திசை திருப்பிக்கொண்டு செல்லாதீர்கள்.

### நேர்மறையாக எண்ணுங்கள்

இந்த உலகம் நன்மைகளாலும், தீமைகளாலும் நிரம்பி இருக்கிறது. நமக்குத் தேவையானவற்றை நாம் தான் தேடிப் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். வசந்த காலமும், இலையுதிர் காலமும், பனிக் காலமும், மழைக்காலமும், வேனிற் காலமும் நிரந்தரமாக இருப்பதில்லை. வருடம் முழுவதும் மாறி மாறி வருகின்றது. அதே போன்றுதான் பிரச்சினைகளும், மகிழ்ச்சியும். பிரச்சசினைகளை எண்ணி அதிகம் கவலை கொள்வது, அடுத்தடுத்த செயற்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்துமே தவிர உற்சாகத்தை தராது. இவற்றை கடந்து விடலாம் அல்லது இது கடந்து போகும் என்று எந்த நிலையிலும் நினையுங்கள்.

நம்மை நாமே மாற்ற முயன்றாலும், மாற்றம் ஒரே நாளில் நிகழ்ந்துவிட வாய்ப்புகள் குறைவு. பருகப் பருக பாலும் புளிக்கும் என்பது பழமொழி; எனவே தினந்தோறும் நிகழ்வுகளை தனதாக்கிக் கொண்டால் தான் நீடித்த உற்சாகம் தனதாகும்.

# குடும்ப உறவுகளைப் பேணுவோம்

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்களை மேலும் பெரிதாக்காமல் இருக்கவும் என்ன செய்யலாம் எனப் பார்ப்போம்.**

ஒரு நொடிக்குக் குறைவான நேரத்திலேயே மனிதனை உருக்குலைத்து விடக்கூடிய வார்த்தை கோபம். இது உலகில் தனித்த வாழ்க்கையிலும், சமுதாயத்தின் பல பிரச்சினைகளிலும் பங்கு வகிக்கிறது.

எந்த விடயங்களையும், பிரச்சினைகளையும் நாசூக்காகக் கையாளத் கற்றுக் கொள்ளுங்கள். எந்த ஒரு விடயத்தில் பிரச்சினை வரும் என்று நினைக்கிறீர்களோ அதை விட்டுக் கொடுங்கள். சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

முதலில் கோபத்தால் நன்மை விளையும் என்கிற எண்ணத்தை விலக்கிக் கொள்ளவேண்டும.

கோபம் வரும்போது ஒரு ரம்ளர் தண்ணீர் குடிப்பது, 1,2,3 என எண்ணிக் கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்லுதல், பேனாவை எடுத்துக் கொண்டு உங்கள் மன உணர்வுகளை ஒரு காகிதத்தில் எழுதுதல், நகைச் சுவை உணர்வை வளர்த்துக் கொண்டு சிரித்துப் பிரச்சினைகளை இலகுவாக்குதல். தன்னுடைய தவறுகளை ஏற்றுக்கொள்ளுதல், மற்றவர் உணர்வுகளை அவர்கள் நிலையில் இருந்து புரிந்து கொள்ளுதல். இவற்றில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றிப் பாருங்கள் .

### மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள்

எந்த ஒரு பிரச்சினை அல்லது விவா தத்தின் போதும் நீங்கள் சொல்வது தவறு என்று தெரிந்தால் அதற்கு மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள்.

காதில் கேட்கும் சகல விடயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விடயங்களை பெரிது படுத்தாதீர்கள். உறவுகளை நம்புங்கள். உங்களைப் பற்றி அடுத்தவர்கள் தவறு கூறினால் அதைத் திருத்திக்கொள்ளுங்கள். அதற்கு மாறாக கோபப் படாதீர்கள்.

எந்தப் பிரச்சினை வந்தாலும் சிரித்த முகத்துடன் புன்முறுவல் காட்டினால் பிரச்சினை சுமுகமாக முடியும். முடிந்தவரை உறவுகளிடமும் எப்போதும் எல் லோரிடமும் சிரித்த முகத்துடன் பழகுங்கள். மற்றவர்களைவிட உங்களையேஎப்போதும்உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர் கள். மற்றவர்களை விட நீங்கள் தான் அறிவாளி என்ற நினைப்பை முதலில் கைவிடுங்கள். தயவு செய்து மற்றவர்களை மட்டம் தட்டிப் பேசாதீர்கள்.

உங்களுக்குள் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை முதலில் விட்டொழியுங்கள். உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்லியும், அங்கே கேட்டதை இங்கே சொல்லியும் உறவுகளுக்குள் பிரிவை ஏற்படுத்தாதீர்கள். உறவுகளுக்கு மதிப்பளியுங்கள்.

# ஓம் நமசியவாய மந்திரம் எழுதும் ஆன்மிகப் பணி

யாழ்ப்பாணம்,டிசெ.9

இன்று ஆரம்பமாகும் திருவெம் பாவை விரத நாள்களில் ஓம் நமசி வாய எனும் மந்திரத்தை தினமும் இயன்றவரை எழுதி ஆன்ம பலத்தைப் பெருக்குமாறு யாழ்.இந்துக் குருமார் ஒன்றியம் இந்து சமய மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நமசிவாய மந்திரம் எழுதப்பட்ட பிரதிகளைக் குருமார் ஒன்றியத்தின் அங்கத்தவர்களிடம் அந்தத்தப் பகுதி இந்துக்கள் வழங்கலாம் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

இப்புனித கைங் கரியத்தில் ஆலய அறங்காவலர்கள், அரச தனியார் உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அற நெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாண வர்கள், தனியார் கல்வி நிறுவன சமூகத்தினர்கள்-

மற்றும் இந்து அமைப்புக்கள் அனை வரும் முழு மனதுடன் ஈடுபடுவதோடு சைவ மக்கள் அனைவரையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தி ஆன்மீக பலத் தினை பெருக்கிட ஒத்துழைக் குமாறும்

இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா



**மேடம்:** மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப் பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன் கோபம் விலகும்.



**இடபம்**: ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக் குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.



**மிதுனம்**: எதிலும் அவசரப்பட வேண்டாம். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கடகம்** : தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண் டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.



**சிங்கம்**: நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**கன்னி**: மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.



**துலாம்**: புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**விருச்சிகம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப்பெறுவீகள்.



**தனுசு**: முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**மகரம்**: வீண் பதற்றம் ஏற்படும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர் களால் மதிக்கப்படுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்க ளைச் சந்திப்பீர்கள்.



**கும்பம்**: முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்ப டைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. முன் கோபத் தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**மீனம்**: மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப் பான்மையும் வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும்.

# தியானம்




விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

(1900 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் சான் பிரான்சிஸ்கோ, வாஷிங்டன் மண்டபத்தில் ஆற்றிய சொற்பொழிவு)

எல்லாச் சமயங்களும் தியானத்தை வற்புறுத்துகின்றன. மனம் நிலையாக இருக்கும் உயர்ந்த நிலையே தியானம் என்று யோகிகள் உறுதியாகக் கூறியுள்ளார்கள். மனம் புறப்பொருள்களை ஆராயும் போது அந்தப் பொருள்களின் மயமாக ஆகிவிடுகின்றது. பண்டைய இந்தியத் தத்துவஞானி ஒருவர் இதற்கு ஓர் உவமை கூறியுள்ளார்; மனிதனின் ஆன்மா ஒரு பளிங்குத் துண்டு போல் உள்ளது. பளிங்கு, தன் அருகில் உள்ள எந்த நிறத்தையும் தான் ஏற்றுக் கொள்கிறது. அது போலவே, ஆன்மா எதனுடன் சேர்ந்தாலும்... அதன் தன்மையை அடைகிறது. அதுதான் சிரமமான காரியம். அதுவே தளையை உண்டாக்குகிறது. நிறத்தின் வன்மையால் பளிங்கு தன் இயல்பை அறவே மறந்து சார்ந்த பொருளின் நிறத்துடன் ஒன்றுபடுகின்றது. பளிங்கின் அருகில் சிவப்பு மலர் ஒன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். பளிங்கு சிவப்பு நிறம் பெறுகின்றது; தன் இயல்பை மறந்து தனது நிறம் சிவப்பு என்றே எண்ணுகிறது. நாமும் உடலின் இயல்பிலேயே ஒன்றி, நாம் யார் என்பதை மறந்துவிட்டோம். அழியக் கூடிய இந்த உடலிலிருந்ததே எல்லாத் துயரங்களும் உண்டாகின்றன. நம் அச்சம், தொந்தரவு, கவலை, துன்பம், தவறுகள், பலவீனம், தீமை போன்ற அனைத்தும் 'நாம் உடலே' என்று கருதும் ஒரு பெருந்தவறிலிருந்தே உண்டாகின்றன. இதுதான் சாதாரண மனிதனின் இயல்பு. அருகிலுள்ள மலரின் நிறத்தைத் தன் நிறமாகக் கொள்ளும் பளிங்கு போன்றவன் மனிதன். எப்படிப் பளிங்கு, சிவப்பு மலர் அல்லவோ, அப்படியே நாமும் உடல்கள் அல்ல.

தியானப் பயிற்சி தொடர்கிறது. பளிங்கு, தன்தன்மை இதுவென உணர்ந்து தன் சுய நிறத்தைப் பெறுகிறது. வேறு எதையும்விட தியானமே நம்மை இறைவனுக்கு வெகு அருகில் அழைத்துச் செல்கிறது....

# மிகப் பழைய மனித மரபணு



உலகின் மிகப் பழமையான மனித மரபணுவின் துண்டுகளை ஒன்று சேர்த்துள்ளதாக ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதை அவர்கள் 400 ஆயிரம் ஆண்டு காலத்திய ஒரு தொடை எலும்பிலிருந்து சேகரித்ததாகத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு ஸ்பெயினின் ஒரு குகையிலிருந்து இந்த எலும்பை அவர்கள் தோண்டி எடுத்துள்ளனர்.

இந்த எலும்பில் கிடைத்த மரபணுக்கள், 40 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சைபீரியாவில் வாழ்ந்த மனிதர்களின் மரபணுக்களுடன் தொடர்புடையதாக இருப்பதை இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இலட்சக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் மனிதக் குரங்கு போன்ற உயிரினத்திலிருந்து எப்படி மனிதன் உருவாகினான் என்பதைப் புரிந்து கொள்ள இந்த மரபணுவை எடுக்க இந்த விஞ்ஞானிகள் பயன்படுத்திய வழி உதவும்.

அந்த மரபணுவை விஞ்ஞானிகள் எடுக்க பயன்படுத்திய வழி குறித்த விவரங்கள் 'நேச்சர்' என்ற சஞ்சிகையில் வெளியிடப் பட்டுள்ளன.

## நாளை

கார்த்திகை-24 திங்கட்கிழமை
10.12.2013
திதி: அட்டமி பி.ப.01.43 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.இ.07.14 வரை
சுபநேரம்:
10.49- 12.19 வரை
இராகுகாலம்:03.19 -04.49 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 2 | | | 4 | 8 |
| 6 | 1 | | 5 | 9 | | | 2 | |
| | 4 | | | | | | | |
| 8 | 5 | 2 | | 7 | 1 | | 9 | |
| | | 3 | 4 | | 6 | 8 | | |
| | 6 | | 2 | 8 | | 3 | 5 | 7 |
| | | | | | | | 7 | |
| | 2 | | | 4 | 3 | | 8 | 6 |
| 7 | 8 | | | 6 | | | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இ[illegible]

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 1 | 7 | 4 | 5 | 9 | 8 | 6 |
| 8 | 6 | 4 | 1 | 2 | 9 | 7 | 3 | 5 |
| 9 | 7 | 5 | 3 | 8 | 6 | 4 | 1 | 2 |
| 4 | 2 | 3 | 5 | 6 | 1 | 8 | 9 | 7 |
| 6 | 9 | 8 | 4 | 7 | 3 | 5 | 2 | 1 |
| 5 | 1 | 7 | 8 | 9 | 2 | 3 | 6 | 4 |
| 1 | 8 | 6 | 9 | 5 | 7 | 2 | 4 | 3 |
| 7 | 4 | 2 | 6 | 3 | 8 | 1 | 5 | 9 |
| 3 | 5 | 9 | 2 | 1 | 4 | 6 | 7 | 8 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டாங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible]றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] அதன் [illegible]ள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் [illegible]கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரக பரவலா[illegible]யது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதுமை மூளைநோய் எச்சரிக்கையாக இருங்கள்

2050 ஆம் ஆண்டு வாக்கில் தற்போது உலகில் டிமென்ஷியாவுடன் ( முதுமையில் ஏற்படும் ஒரு வகை மறதியுடன் கூடிய மூளை அழற்சி) வாழும் மக்களின் எண்ணிக்கை மும்மடங்கு அதிகரிக்கும் என்றும், அதை சந்திக்க பெரும்பாலான அரசுகள் முற்றிலும் தயாராகாமல் இருப்பதாகவும், சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர்.

டிமென்ஷியா நோயாளிகளின் எண்ணிக்கை 130 மில்லியனுக்கும் அதிகமாகும் என்று 'அல்ஷைமர்ஸ் டிசீஸ் இண்டர்நேஷனல்' என்ற சர்வதேச அறக்கட்டளையின் ஆராய்ச்சி தெரிவிக்கின்றது.

ஏழை மற்றும் நடுத்தர வருமான நாடுகள் அதிலும் குறிப்பாக தென் கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் உள்ள மக்களின் ஆயுட்காலம் அதிகரிப்பதே இதற்கு காரணம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

டிமென்ஷியா குறித்த ஆய்வுகளுக்கான நிதிகளை அதிகப்படுத்த அந்த அமைப்பு கோருகிறது.

# கணக்கெடுக்கப்படாத உழைப்புகள்

துர்க்கா

காலத்தோடொத்து இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே மாறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது சூழலும் மாறுகிறது. இந்த மாற்றங்களுக்கேற்ப யாவுமே தம்மை இசைவாக்கிக் கொள்கின்றன. மரம், செடி, கொடியில் இருந்து நுளம்பு கூட இதற்கு விதிவிலக்கல்ல. அப்படி இருக்கும் போது பெண்கள் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

பெண்களைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக வீடு, குடும்பம் சார்ந்த உழைப்பில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சமுதாய மாற்றங்களுடன் கால ஓட்டத்தில் அதற்கப்பாலும் பெண்ணின் உழைப்பு தேவைப்பட்டது. புராதன கம்யூனிஸ் சமுதாயத்திலிருந்து நிலப்பிரபுத்துவ அமைப்பு மாறிய போதும் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களது வாழ்க்கை முறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்தியது.

பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவ்ளே செய்ய வேண்டிய நிலை இருந்தது. வேலைகள் சமனாக பங்கிடப்படாமல் இரட்டைச்சுமையுள் அவள் அழுந்தினாள். அவளது சமூக உற்பத்திக்கான உழைப்பு இரண்டாம் தரமானதாகவே கருதப்பட்டது. மீண்டும் குடும்பத்துக்கான அவளது உழைப்பே வலியுறுத்தப்பட்டது. விரும்பவும்பட்டது. இவ்விரட்டிப்பு வேலைப் பளுவிலிருந்து பெண் விடுபட முனையும் போது அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் போது குடும்பத்துக்கு வெளியே உலகைக் காணவிளையும் போது மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்குள் பெண்ணைத் தள்ளுவதற்கான எதிர்ப்புக் குரல்கள் உயர்வாக ஒலிப்பது இயல்பானதுதான். ஏனெனில், மாற்றங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத வசதிகளை அனுபவிக்க விரும்பும் அனைவருமே பெண் விடுதலை பெறுவதை விரும்பமாட்டார்கள்.

பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண் வேலைக்குப் போவதால்தான் குடும்ப உறவு சீரழிகிறது. பிள்ளைகள் சீரழிந்து போகின்றனர். போதைவஸ்து பாவிக்கின்றனர். தீய பழக்கவழக்கங்களால் அழிந்து போகின்றனர். அவர்களுக்கு அன்பு கிடைப்பதில்லை. குடும்ப உறவு அழிகிறது. சமுதாயம் நலிந்து போகிறது என்ற கருத்துக்கள் பரவலாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் உண்மையைத் தரிசிக்க மறுக்கின்றனர். அவர்களது கூற்றுக்களில் உண்மை இல்லாமல் இல்லை. பிரச்சினைகள் எம்முன் உள்ளன. ஆனால், இவர்கள் பெண்களுக்கு முன் வைக்கும் தீர்வுகள் தான் இன்றைய காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. பரிசீலிக்கப்பட வேண்டியவை.

பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த வேலைகளையே தனது கடமைகளாக செய்து வந்த பெண், சம அந்தஸ்துடன் குடும்பத்துக்கு அப்பால் உள்ள உலகத்திலுள்ளும் தனது பங்களிப்பை செய்ய விழையும் போது குடும்பம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கும். கால காலமாக பெண்களது கைகளில் இருந்த சமையலறை, குடும்பம் என்பன மற்றவர்களுக்கும் பங்கிடப்படும் போது அவ்வேலைகளில் குறைபாடும், நேர்த்தியின்மையும் ஏற்படுவது தவிர்க்க முடியாது. அதுவே நிரந்தரமானதல்ல. அதற்கான தீர்வுகள் வைக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்போது பிரச்சினைகளும் மறைந்து போகும்.

இப்பிரச்சினை ஒரு சமுதாயப் பிரச்சினை. தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையாகக் கருதமுடியாது. குடும்ப அமைப்புகளைப் பேணுவதற்கு பெண்களை மீண்டும் வீட்டில் மட்டும் உழைப்பை வழங்குவதற்காக அதாவது தனது குடும்பத்தைக் காக்கும் பணி பெண்ணினது அதற்காக அவள் வீட்டுக்குள் போயிருந்து வேலையைக் கவனிப்பதுதான் வழி என்ற கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது.

இன்றைய காலம் குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குகிறது. கணவன், மனைவி, குழந்தைகள் என்ற குடும்ப அலகே பெண்களின் அடிமைத்தனத்துக்கும் அடக்குமுறைக்கும் காரணம் என்று தீவிரப் பெண்ணியவாதிகள் கருதுகின்றனர்.

சமுதாய உற்பத்தி முறைமை அதன் உறவுகள், கலாசார விழுமியங்கள். என்பவற்றிற்கேற்ப குடும்ப அமைப்பு காலத்துக்கு காலம் மாறி வந்துள்ளது. எமது இன்றைய சமூக முறைமை ஐம்பது அறுபதுகளில் இருந்ததைவிடவும் எவ்வளவோ மாறிவிட்டது. பெண்கள் சமுதாய வேலைகளில் பங்களிப்பதால் குடும்பம் சிதைவுறுவதாகக் கூறுவதானது மிகவும் தவறான கருத்தியல்பு ஆகும். குடும்பம் பற்றிய கோட்பாடுகள் முன்னைய சமூக வாழ்வு முறைக்கேற்ப இயல்பாக்கம் அடைந்ததாக இருப்பதால் இன்றைய வாழ்வு முறைக்கேற்ப அவை தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தகவமைத்துக் கொள்ளும் வரையான காலத்தில் குடும்பம் சீரழிந்ததாகப் படுகிறது. இவை சிதைவுகளல்ல. மாறாக அமைப்பு புதிய நிலைக்கு ஏற்ப மாற்றுருப் பெறும் போக்கில் ஏற்படும் உடைவுகள் அல்ல. வளர்ச்சிகள் என்றே கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் வளர்ச்சியைக் கூட ஒரு பயன் விளைவுள்ள வளர்ச்சியாக மாற்றுவதில் எமது பங்களிப்பை வழங்க முடியும்.

# தடைக் கற்களும் படிக்கற்களும்

ஆண் பெண் சமத்துவ சமுதாயம் என்பது பெண்ணியத்தின் குறிக்கோள் மட்டுமல்லாது அறிவு நாகரிகம் மற்றும் பண்பாட்டின் எல்லையுமாகும். பொருளியல், சமுதாயவியல் சமத்துவததை அடைவதற்கும் இதுவே அடிப்படையுமாகும். மக்களில் சரிபாதி எண்ணிக்கை கொண்ட பெண்கள் சமநிலை பெறாதபோது பிற கூறுகளில் சமத்துவம் தோன்றுவது அரிதாகும். மேலும் அறிவியலின் வளர்ச்சி விழுக்காட்டுக்கு ஏற்ற வகையில் சமுதாய வளர்ச்சி இல்லை. காரணம் அறிவியல் முன்னேற்றம் அனைத்தும் பெண்ணுலகைப் பின்நோக்கியும், தவறான பாதையிலும் இழுத்துச் சென்றுவிட்டது.

சமத்துவ சமுதாயத்துக்கு அடிப்படையான பெண் விடுதலை பெண்கள் தொடர்பானது மட்டுமே என்ற தவறான கருத்தும் நிலவுகின்றது. பெண் விடுதலை சமுதாய நோக்கில் அணுகப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் இன்று வரை அரசோ, அரசியல் கட்சிகளோ, சாதி சமுதாய அமைப்புகளோ பெண் விடுதலையை இந்நோக்கில் அணுகவில்லை. எனினும் காலத்தின் கட்டாயத்தால் அவ்வப்போது பெண்விடுதலை மேடைகளில் முழங்கப் படுவதோடு ஆணிவேரைக் களையாது மேலோட்டமான முயற்சிகளே எடுக்கப்படுகின்றன. சாதி சமயத்திலே பின்னிப் பிணைந்துள்ள பெண் விடுதலையை இவ்வமைப்புகளின் உள்ளார்ந்த முயற்சி இன்றிப் பெற இயலாது. இவ்வாறான அரசியல் சமுதாயப் பின்னணியில் கண்ணொளி இழந்த அன்பர்கள் யானையைத் தொட்டுணர்ந்து இதுதான் யானை என்று கண்ட கதையாய்ப் பெண் விடுதலையும் ஒவ்வொருவர் நோக்கிலும் கோணத்திலும் விளக்கம் கொள்ளப்பட்டுள்ளது.

பெண்ணியம் வலியுறுத்தும் பெண் சமுதாய மாற்றத்தை இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். இது பெண் விடுதலையை வரையறை செய்வதற்கு ஏதுவாக இருக்கும். ஒன்று பெண் மேம்பாடு : மற்றொன்று பெண் சமத்துவம் எனக் கொள்ளலாம். பெண் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளியல் விடுதலை முதலானவை பெண் மேம்பாட்டு நிலைக்குள் அடங்கும். எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் பெண், ஆணைப்போன்று உரிமை பெற்றுக் குடும்ப அளவிலும் தனி அலகாகக் கருதப் பெற்றுச் சமுதாய அச்சம், சமுதாய அவதூறுகளிலிருந்து விடுபட்டும் பாலியல் வேறுபாட்டுச் சின்னம், நுகர் பொருள், விளம்பரப்பொருள் என்பவற்றுக்கு அப்பாற்பட்டு அறிவு, திறமையின் அடிப்படையில் மட்டும் மதிக்கப்படுதலே பெண் விடுதலை என்னும் சமத்துவ நிலையாகும்.


இவ்வாறான சமத்துவ நிலை விடுதலைக்கு வலுவான தடைகளாகக் கற்பு, திருமணம், குடும்பம் எனும் ஒரு சாரான மரபுகள் பெண்களின்மீது திட்டமிட்டுத் திணிக்கப்பட்டுள்ளன. உரிக்க உரிக்கத் தோலாய் உள்ளே ஒன்றுமில்லாத வெங்காயம் போன்று உள்ளீடற்ற மரபுகள் இவை! பொய்மையும், கயமையும், வஞ்சனையும் கொண்டு கட்டுக் கதைகளாலும், சமய நம்பிக்கையாலும் வலுவாக்கப்பட்டுக் கற்புக்கரசி, வாழ்வரசி, இல்லத்தரசி, குடும்பவிளக்கு என்றெல்லாம் நாவும், நெஞ்சும் கூசாத பொருளற்ற புகழுரைகளால் புனையப்பட்டுள்ளன. இந்த உண்மையை ஒவ்வொரு பெண்ணும் உணரும் நிலையே பெண் விடுதலை பெறும் எல்லையாகும்!

நாட்டின் விடுதலையை நோக்கமாகக் கொண்டு போராடிய தலைவர்கள் விடுதலைக்குப் பின்பு நாட்டை எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்று திட்டமிடவில்லை. இதனால்தான் விடுதலை பெற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் விடுதலைக்கு முன்னர் நிலவிய சமுதாய அவலங்கள் தீர்க்கப்படாமல் தொடர்ந்து கொண்டுள்ளன. இதே நிலை பெண்விடுதலைக்கும் பொருந்தும். ஆகையால், பழைய மரபுகளை மாற்றுவதோடு அவற்றுக்கு மேலான புதிய மரபுகளையும் கண்டறிய வேண்டிய இரட்டைச் சுமை பெண் விடுதலைப் போராட்டத்துக்கு உள்ளது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இளந் தலைமுறையினர் தமக்குரிய பாடத்திட்டப் பகுதிகளை மட்டும் மனப்பாடம் செய்து மதிப்பெண் பெறும் இயந்திரங்களாகியுள்ளனர்.

இதை விடுத்துத் தொழில்நுட்பவியல், கணினியியல் போன்றவற்றில் கரை கண்டிருந்தாலும் திருமணவலையால் பின்னப்பட்ட குடும்பக் கூட்டுக்குள் அடைக்கப்பட்டுள்ளதை அறியாதவராய்த் தம் கல்விக்கும் திறமைக்கும் தொடர்பற்ற சிறுமைகள் சூழ்ந்த வாழ்க்கையைச் சிந்தனைத் திறமையின்றி வாழ்ந்து கொண்டுள்ளனர்.

(தொடரும்)





நிவேதா

# மக்கள் வங்கியின் வியாபார நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.9

மக்கள் வங்கியால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பிரத்தியேக தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும், உயர்ந்த பட்ச சேவைகளை வழங்கக்கூடியதுமான வியாபார நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் மாடி, கன்னாதிட்டி பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வியாபார நிலையத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கிச் சேவை, துரித கடன், ஆவணங்களைத் தயாரிப்பதற்கான வசதிகள், நிதியாலோசனை போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன. (ந-14)

## இணக்க சபை இடமாற்றம்

சுழிபுரம்,டிசெ.9

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடை பெற்று வந்த இணக்க சபைச் செயற்பாடுகள் தற்போது இடமாற்றப்பட்டு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது என இணக்க சபையினர் தெரிவித்துள்ளனர். (ந-28)

# பரீட்சை வினாத்தாளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்க

***வவுனியா மாவட்ட பெற்றோர், ஆசிரியர்கள் கோரிக்கை***

வவுனியா, டிசெ.9

பரீட்சை வினாத்தாள்களில் உள்ள குறைபாடுகளை அடுத்தாண்டிலாவது நிவர்த்திக்குமாறு வவுனியாவில் மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கை மேம்படுத்தும் முகமாக வருடாந்தம் மூன்று தவணைப் பரீட்சைகள் பாடசாலைகளில் இடம் பெறுவது வழமையான ஒன்றாகும். இந்தத் தவணைப் பரீட்சைகளை நடத்தும் பொறுப்பை வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாண கல்வி திணைக்களங்கள் ஏற்றுக் கொண்டு நடத்துகின்றன.

முன்னோடிப் பரீட்சை, உயர்தரப் பரீட்சைகள், புலமைப் பரிசில் பரீட்சைகள் பெரும்பாலும் மாகாண கல்வி திணைக்களங்களும் பொதுவாக தவணைப் பரீட்சைகளை வலயக் கல்வி அலுவலகங்களே நடத்துகின்றன. தரம் 1 முதல் தரம் 13 வரையான வகுப்பு மாணவர்களின் சகல விதமான பாடங்களும் நன்கு திட்டமிட்ட குழுக்களினால் இந்தப் பரீட்சை நடத்தப்பட்டால் இத்தகைய தவறுகளைத் தவிர்க்க முடியும் என்பதை பல தடவை பாடசாலைகளும் மாணவர்களும் முன்வைக்கின்ற போதும் இவ்வருடமும் பரீட்சைக்கான வினாத்தாள்களில் குறைபாடுகள் இருந்துள்ளன. "தவணைப் பரீட்சை" என்ற சொல்லை "தவனை பரீட்சை" என்று வினாத்தாள்களில் குறிக்கப்பட்டது முதல் வினாக்கள் பலவற்றிலும் குறைபாடுகள் இருந்துள்ளமையை பெற்றோர்கள், ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எழுத்துப்பிழைகள், வினாத்தாள் அச்சுப் பதிப்பில் உள்ள குறைபாடு, வினாக்களில் தெளிவின்மை, பாடப் பரப்புக்கு அப்பாலான விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்களை நிவர்த்தி செய்து மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக் கூடிய வகையில் வினாப் பத்திரங்களை அடுத்தாண்டிலாவது நன்கு திட்டமிட்டு முற்கூட்டியே தயார்படுத்தி பரீட்சை நடத்துமாறு பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பணிவான வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். (ந-402)

## பாதீடு தொடர்பான பயிற்சி நெறி

யாழ்.மாவட்ட உள்ளூ ராட்சி மன்ற தலைவர் மற்றும் உத்தியோகத் தர்களுக்கான பாதீடு தொடர்பான பயிற்சி நெறி நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத் தில் இடம்பெறும்.

பயிற்சி நெறியில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர், நிதிக்குழு உறுப்பினர், விடய எழுதுநர் ஆகி யோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் அறிவித்துள்ளார். (ந-9)

## மாணவர் கௌரவிப்பு

மாசார் முருகானந்த நகர் தவக்குமார் முன்பள்ளியில் கல்வி கற்று அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் 1 இல் இணையவுள்ள சிறார்கள் மற்றும் ஆசிரியர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை முன்பள்ளி முன்றலில் இடம் பெற்றது. முன்பள்ளி சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறார்களாலும் , முன்பள்ளி சமூகத்தினராலும் ஆசிரியை ஜெ.சற்குணவதி கௌரவிக்கப்பட்டார். (ந-9)

## வாசிப்பு மாத நிகழ்வு

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் வியாழக்கிழமை பிற்பகல் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் சுன்னாகம் உப அலுவலக பொறுப்பதிகாரி ந.கணேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ண பிள்ளையும், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தின் பணிப்பாளர் திருமதி ஆனந்த கௌரி ஜெயக்குமாரும் கலந்து கொண்டார்கள்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ந-86)


**நியூபிறைற் கல்வி நிலையம்**
**95 பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

தரம்: 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11(O/L) வகுப்புக்கள்
ஆரம்பம்: 09.12.2013 பி.ப. 3.00
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். (40983)(4.6.3)

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 6-11 வரை கணிதமும் 10 ஆம், 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வணிகமும், கணக்கீட்டுக் கல்வியும் ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும் (40976)(4.6.3)
தொடர்பு:077 350 1726

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதி, பாற்பண்ணைக்கு மிக அருகில் இரண்டு பரப்புக் காணி, 3 அறை வீடு மற்றும் கிணறு வசதிகளுடன் விற்பனைக் குண்டு
தொடர்பு: 077 147 5500

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

சுன்னாகம், கே.கே.எஸ் வீதி, ஜெற் மோட்டோர்ஸ் அருகில் சுற்று மதிலுடன் கூடிய பெரிய நாற்சார் வீட்டுடன் பதின்நான்கு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : (40919)(7.6.3)
021 321 2863, 0041 795 993 592

**AGASH Textiles & Tailoring**

பாடசாலைச் சீருடைகளும், கிறிஸ்மஸ்,புதுவருட ஆடைகள் தைப்பதற்கு 15ஆம் திகதிக்கு முன் ஓடர்களைக் கொடுப்பவருக்கு 10% விசேட கழிவு கொடுக்கப்படும்.
சேட்கள், சேட் துணிகள், ஜீன்ஸ்கள், ஜீன்ஸ்துணிகள் பெற்றுக்கொள்ளலாம்.
12, காளி கோயில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (40920)(7.6.3)
No.19, கண்டி வீதி, சாவகச்சேரி. 077 670 1495

**மத்திய கிழக்கில் உடனடி வேலை வாய்ப்பு**

10 நாள்களுக்குள் பயணம்
QATAR (நெஸ்லே வோட்டர்)

★ விற்பனை விநியோகஸ்தர்கள் 45,000/= இந்த மேற்பட்ட சம்பளம் 95 பேர்
★ உற்பத்தி தொழிலாளர் 45,000/= இந்த மேற்பட்ட சம்பளம் 60 பேர்
★ A/C டெக்னீசியன் 52,000/= இந்த மேற்பட்ட சம்பளம் 04 பேர்
★ சாரதிகள் 72,000/= இந்த மேற்பட்ட சம்பளம் 55 பேர்
★ வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் 100,000/= இந்த மேற்பட்ட சம்பளம் 05 பேர் (ஆண்/பெண்)

கடந்த 16.11.2013 யாழ் மாவட்ட செயலகத்தினால் யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட தொழிற்சந்தையில் கலந்துகொண்டு பயன்பெற்றோர் அதிகம் அதிகம்.....

2ஆம் கட்ட நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10, 11ஆம் திகதிகளில்

பதிவுகளுக்கு முந்துங்கள் ....
தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV72052 LL2502
(40956)(10.6.3)

தொடர்புகளுக்கு:
T.P.No: 077 843 6475
021 221 7085
Email: rifraajaffna@gmail.com
www.rifraa.com
Branch Office
Rifraa International (Pvt) Ltd,
No: 95, Muslim College Road,
Jaffna. Sri Lanka.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



வலி மேற்கு பிரதேசசபை வட்டுக் கோட்டை உப அலுவலகத்தில் 24 வருடங்கள் சேவையாற்றி இன்று (09.12.2013) திங்கட்கிழமை ஓய்வு பெறும்
**மார்க்கண்டன் குருபாலசிவநாதன்**
[வெளிக்கள ஊழியர்-II]
அவர்களுடைய சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் தமது ஓய்வு காலத்தில் குடும்பத்துடன் அவரின் குலதெய்வம் பேச்சியம்மன் அருளாசியுடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(40907)(3.6.4) வலி மேற்கு பிரதேசசபை, வட்டுக்கோட்டை உப அலுவலக நண்பர்கள்.

**LOLC**

மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்

LANKA ORIX FINANCE
LOLC மைக்ரோ கிரெடிட்

உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.

2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து 2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.

A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்

(C/14128)

தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80

**மாபெரும் மலிவு விற்பனை & Year End Sales**
25th Nov - 31st Dec 2013

75% OFF

Computer Accessories & Electronic Goods



யாழ்ப்பாணம்
கிளிநொச்சி
திருகோணமலை
நெல்லியடி
வவுனியா
வெள்ளவத்தை

MICRO PC SYSTEMS
Conditions Apply

வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,011-2367405,யாழ்ப்பாணம்:-218,Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St,024-2221969, நெல்லியடி:-Kodikamam Rd, 021-2262929,கிளிநொச்சி:-A9 வீதி, கச்சேரி முன்னால் , 021-2285593, திருகோணமலை:- 235, Main St (வசீஹரன் ஹாட்வெயார் முன்னால்) , 026-2226977

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன்**
**மெண்டலின் சிவகுமாரின் லலித ஷேஸ்திரா**
வழங்கும்
**Saxovil Fusion Concert**



சக்ஸபோன் - காஞ்சி காமகோடி ஆஸ்த்தான வித்துவானும், பத்ம ஸ்ரீ கதிரிகோபாலநாத் அவர்களின் பிரிய சிஷ்யனும் திரு. E.R. ஜனார்தன்
மெண்டலின் - திரு. E.R. ஜனார்தன் அவர்களின் முதல் சிஷ்யன் திரு.வி.சிவகுமார சர்மா
வீணை - ஸ்ரீமதி. T. வீணா காயத்திரி.
மிருதங்கம் - திரு.N. ராமகிருஷ்ணன்.
தவில் - தவில் மேதை தட்சனாமூர்த்தியின் புதல்வன் பிரபல தவில் வித்துவான் திரு.த. உதயசங்கர்
ட்ரம்ஸ், தபேலா - திரு.M.மெஹர் ஸ்ரீ

அனுமதி இலவசம்
(40979)(6.3)



இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
காலம் : 10-12-2013 நேரம் : மாலை 4.00 - 7.00 மணி வரை

## உணர்வுகளில் நினைவுகளாய்.....



தோற்றம்
05.02.1931

மறைவு
16.12.1996

அமரர்
**வி.எஸ். குணசிங்கம்**
(ஓய்வுபெற்ற எழுதுநர்)
திதி: 09.12.2013

இறுகிய அக்கணங்கள்
வருடங்களாய்க் கடந்தாலும்
எம் நினைவுகள் யாசிக்கும் உங்கள் ஸ்பரிசம்
செதுக்கியது எம்மைச் சிற்பங்களாய்....
உங்கள் விழுதுகளாய் நாம் எத்திசை தொட்டாலும்
வேண்டி நிற்கின்றோம் உங்கள் ஆசியை....

"யாழகம்",
03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40977) (10.6.3)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **முதலித்தம்பி செல்லத்துரை**
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)

தோற்றம் 24.03.1928
மறைவு 29.12.2003

ஆண்டுகள் பத்து ஆனதையா நீரகன்று
மீண்டெழ முடியா மீளாத் துயருற்றோம்
ஈண்டெம் துயரகல இம் மண்ணில் நீரும்
மீண்டொரு கால்வந்து மிகுதுயர் தீர்ரோ!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரமக்கள்.

மில் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.

(40807) (45.6.3)

## ஈரவிழிகளுடன் ஈராண்டுகள்



அமரர் **முத்தையா மகேஸ்வரன்**

மண்ணில் 30.06.1945
விண்ணில் 02.12.2011

சோகமென்பது எம் சொந்தம் - என்று
சொல்ல வைத்தது உம் பிரிவு தந்தையே!
தோல்வி எமைத் தழுவும் போது - உந்தன்
தோள்கள் தந்தாய் வெற்றியடைய
ஈராண்டு கடக்கும் உம் பிரிவு - எம்முள்
மாறாத வடுவாய் எம் நெஞ்சில்
பூச்சூடும் இறைவனின் பாதத்தில் - நீர்
பூவாக சென்று சாந்தியடைய
மலர்தூவி நிற்கின்றோம் இந்நாளிலே.

ஏழாலை தெற்கு,
களவாவோடை.

குடும்பத்தினர்.

(சி/14312) (7.6.3)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் **மகேஸ்வரி தில்லையம்பலம்**
(புங்குடுதீவு, 7ஆம் வட்டாரம், ஊரதீவு)

தோற்றம் 13.03.1935
மறைவு 20.11.2012

ஆண்டொன்று கடந்த போதிலும் அன்னையை!
அன்பு நிறைந்த உம் முகத்தை
மறக்க முடியாது எம்மால்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எமை விட்டகலா
வேண்டுகின்றோம் இறையடியை.

சத்தியசீலன் — குடும்பத்தினர்.
68/18, அராலி வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

## தற்செயல் நிவாரண கொடுப்பனவைப் பெறவும்

கிளிநொச்சி, டிசெ.9

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஐந்து பேருக்கும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நான்கு பேருக்கும் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவை அனுப்பி வைத்துள்ளனர்.

எதிர்பாராத தீவிபத்து, கடும் காற்று, கடும் மழை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்செயல் நிவாரணமாக சமூக சேவைகள் திணைக்களத்தினால் இரண்டு கட்டங்களாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பின்வருவோருக்கு இந்தக் கொடுப்பனவு கிடைத்துள்ளதாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

முதலாம் கட்டம்

இராசு மரியாயி-அரை ஏக்கர் திட்டம்- ஊற்றுப்புலம், நாராயணபிள்ளை சுப்பிரமணியம்-நாவலர் பண்ணை- ஊற்றுப்புலம்,

இரண்டாம் கட்டம்

கந்தசாமி சந்திரவதனி-கணேசபுரம், அருணாசலம் கதிராயி- ஊற்றுப்புலம், சதாலிங்கப்பிள்ளை இந்திராணி-பன்னங்கண்டி. (ந-9)

## தொழில்சார் அறிமுகப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.9

வதிரி வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தினால் 2013 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தொழில்சார் அறிமுகப் பயிற்சி இலவசமாக நடத்தப்படவுள்ளது. கணினி ஆரம்பக் கற்கை, தமிழ்- ஆங்கில தட்டச்சு ஆகிய பயிற்சி நெறிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வ முடைய மாணவர்கள் கழகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (ந-14)

## 7ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



அமரர்
**பவானந்தம் இராசம்**
திதி: ஸ்ப்தமி

அகம் மகிழ 10.08.1946
மனம் நெகிழ 27.11.2006

ஏழு ஆண்டுகள் ஆனது அம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஏழு ஏழு ஜென்மம் எடுத்தாலும்
மீண்டும் இங்கு வந்திடுங்கள் அம்மா!

குமரகோட்டம்
கோண்டாவில்.

என்றும் ஆறாத்துயருடன்
கணவர், சசிகலா (மகள்)
முகுந்தன் (மருமகன்)

(40963)(3.6.4)

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 ★ 01 ★ 1920
மறைவு 10 ★ 12 ★ 1994

அமரர் **கந்தையா தம்பிமுத்து**
(சுதுமலை பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கரந்தனை வதிவிடமாகவும் கொண்டவர்.)
திதி: பூர்வஅட்டமி


பாசமுடன் எங்களைப் பெற்று அரவணைத்து
பார்புகழ வாழவைத்த எங்கள் அன்பு ஐயாவின்
ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

இந்திராதேவி துரைவீரசிங்கம்,
உரும்பிராய் கிழக்கு,
கரந்தன்.

மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(40969)(3.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.07.1923

மறைவு
09.12.2012

அமரர்
**கயித்தார்-மிக்கேல்**

ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளன – தெய்வமாய் நின்று எம்மை வழிநடத்திய எமது குடும்பத் தலைவனே!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(40969) (7.8.3)

# 10% இலங்கையர்கள் மாற்றுவலுவுடையோரே

## மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.9

இலங்கை சனத்தொகையில் 10 வீதமானவர்கள் மாற்றுத்திறனா ளிகள் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.



மாற்றுவலுவுடையோருக்கான ஒன்று கூடல் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:-

2014 ஆம் ஆண்டளவில் வீதிகள், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பொதுக்கட்டடங்களில் மாற்றுத்திற னாளிகள் அணுகும் வசதிகள் ஏற்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 6451 விசேட தேவையுடையவர்கள் உள்ளனர். இவர்கள் தங்களுக்கு உரிமை மற்றும் சிறப்புரிமைகள் உண்டு என்பதை உணர்ந்த திறமை படைத்தவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களின் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக அண்மையில் இடம்பெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் கலை நிகழ்வுகளில் மாற்றுத்திறனாளிகள் திறமைகளை வெளிக்காட் டினர். விசேட தேவையுடையவர்களை சாதாரண மானவர்களைப் போல் மதிப்பதற்கு எமது மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.- என்றார். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி நளாயினி ஞானசேகரன்
அவர்களின் பாசமிகு கணவர்

### மார்க்கண்டு ஞானசேகரன்

07.12.2013 சனிக்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இரங்கலையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கல்வி சாரா ஊழியர்கள் (40986)(7.6.3)
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி மகேசன்

(இளைப்பாறிய ஆசிரியை)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித் தெருவில் வசித்தவரும் தற்போது தலவத்துகொடையில் வசித்துவந்தவருமாகிய திருமதி பரமேஸ்வரி மகேசன் நேற்றுமுன்தினம் (07.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, பண்டாரவளை சென். மேரிஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மகேசனின் அன்பு மனைவியும், நிரஞ்சன், நிர்மலன், நிருத்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவகி, நிரோஷினி, உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், அருண், மது, வினி, அஜித், அஷ்வின், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 700/ 5, பெரேரா மாவத்தை, தலவத்து கொடையிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (09.12.2013) திங்கட்கிழமை இரவு 8.00மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.12.2013) செவ்வாய்க்கிழமை ஜயரட்ண மலர்ச் சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணிக்கு பொரளை கனத்தையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவு.

தகவல்
தொ.பே. 011 279 6415 (சி/14176)(4.6.3) குடும்பத்தினர்.

# தேயிலையுடன் 17 பேர் கைது

கொழும்பு,டிசெ.9

கழிவுத் தேயிலைகளை பதுக்கி வைத்திருந்தமை தொடர்பில் 17பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொம்பே, இந்தோலமுல்ல பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றிலேயே இந்த கழிவுத் தேயிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்தில் குணுபிட்டிய, மஹஓய, கோனவல, பேலியகொட, வத்தளை, மாத்தளை, களனிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

களஞ்சியசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 1,00,000 கிலோ கழிவுத் தேயிலையும், அவற்றை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எட்டு பேருக்கு இடமாற்றம்

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 8 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்ட 6 அதிகாரிகளுக்கும் , 2 பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டது. இதற்கமைய, மெக்ஸி புரொக்டர் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கும், ரொஹான் டயஸ் யாழ். மாவட்டத்துக்கும், ஜயந்த விக்கிரமசிங்க வவுனியா மாவட்டத்துக்கும்,காமினி மதுரட்ட காலி மாவட்டத்துக்கும், யூ.கே திஸாநாயக்க கிளிநொச்சி மாவட்டத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை முருகேசு



புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை முருகேசு 07.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், றதீஸ்வரன் (ஜேர்மனி), மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, புஸ்ப ராணி, புஸ்பமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும், சுசி (ஜேர்மனி), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபிகா, கார்த்திகா, அனுசிகா, திலக்ஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு. (40984) (7.6.3)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

### செல்வராசா கிருபாகரன்(கிரு)



391, நாவலர் றோட், நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா கிருபாகரன் (கிரு) 06.12.2013 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சந்திரகலா தம்பதியரின் அன்பு மகனும், விமலன், விமலாதேவி, பாமினி, சபிதா, உதயராசா, சசிகரன், சாமளா, தர்ஸ்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்னலட்சுமி, சந்திரபாலன், அரிய புத்திரன், நிரஞ்சனா, ஜெகதீபன் ஆகியோரின் மைத்துனரும், தமிழினி, ஜெயராஜ், றதீஷன், தாரங்கியா, துஷாயினி ஆகியோரின் மாமனும், வினோத், அபிநயா, சுகித், தர்சனா, புவிசன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

391, நாவலர் றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம். (40986) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தினைப்புனவள்ளி சத்தியவான்



வட்டு-மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டு மேற்கு, பெருவளவு கண்ணகை அம்மன் கோயிலடியையும், கொழும்பு முகத்துவாரத் தையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தினைப்புனவள்ளி சத்தியவான் 06.12.2013 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணியளவில் இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ராமசாமி-மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், சத்தியவானின் அன்பு மனைவியும், சத்தியதேவன், தில்லை நடேசன்,கேசவன், கேதீஸ்வரன் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் சாரதா, சிவஞானச்செல்வி, லோகேஸ்வரிதேவி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மங்கயர்க்கரசி, செல்லத்துரை, நாகராஜா, மகாவிஷ்ணு மற்றும் தனலட்சுமி ஆகியோரின் சகோதரியும், சிவகுமார், Dr. சிவநாதன், கஜன் (லண்டன்), அன்னமலர், பத்மசிறி (பிரான்ஸ்), கெகதீஸ்வரி, மலர்மதி ஆகியோரின் மாமியும், சிவபாக்கியம், இலட்சுமி, நாகமுத்து, அன்னம்மா, தேம்பாமலர் ஆகியோரின் மைத்துனியும், கீர்த்தனா, சிவசங்கர், துர்க்கா, கௌதமன், சாளினி, கபிலன், செந்தூரன், சிவதர்சன், துசந்தினி, டிலக்சன், தர்சினி, தனுசா, தர்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை
பெருவளவு கண்ணகை அம்மன் கோயிலடி. (40982) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாதவர் மார்க்கண்டு



( ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரியும்,
புராணபடன வித்தகரும்)

யாழ்ப்பாணம் - சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா, கதிரேசு வீதி, வைரவபுளியங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட மாதவர் மார்க்கண்டு நேற்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாதவர்- மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ர புதல்வரும், காலஞ்சென்ற நமசிவாயம்-தங்கப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சபித்தாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், தம்பிராஜா, சின்னாசிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகவதி, செல்வராணி, ராமதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சாரதாதேவி, கண்ணதாஸ், குகதாஸ், கணேசதாஸ், யசோதா தேவி (வ/சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை - ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நதியா, வினோதினி, சிந்துஜா, நகுலேஸ்வரன் (சம்பத் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனும், அமீன், சைலா, தேயோ, விசான், குகனிகா, கல்வின், எஸ்வின், அபிஷேக், அக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33, கதிரேசு வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா.
076 695 5431 (சி.14316)(3.6.45)

தகவல்:
குடும்பத்தினர்.

# நோக்கத்தை மறப்பதாலேயே பின்னடைவு

## வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கருத்து

பளை, டிசெ.9
பத்து வயதில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவருக்கு வெட்டுப் புள்ளியாக 154 புள்ளிகளையும் கல்விப் புலத்தில் பட்டம்பெற்ற ஆசிரியர் அல்லது அதிபர்கள் தோற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கு வெட்டுப்புள்ளி 40 பெறவேண்டுமென வெளியிட்டிருப்பது எமது வாசித்து கிரகிக்கும் தன்மையை தெளிவாக உணர்த்துகிறது. மாணவர்கள் தாம் வந்த நோக்கத்தை மறந்து விடாமல் அக்கறையுடன் தொடர்வதால் உயர்ந்த புள்ளிகளைப் பெற முடிகிறது.

எந்த விடயத்திலும் வந்த நோக்கத்தை மறந்து விடுவதாலேயே பின்னடைவை சந்திக்கிறோம். இவ்வாறு பளை பிரதேச சபை பொதுநூலகத்தில் இடம்பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினரும், முன்னாள் மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளருமான ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கருவறையிலிருந்து கல்லறை வரை பயன்தரக்கூடியவை நூல்களே. அதனை ஆழமாக வாசித்து அதன் கருத்துக்களை சிந்திப்பதால் நிச்சயம் நல்ல பயனைப் பெறமுடியும். இன்றைய காலத்தில் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியினால் பெருமளவானோர் நல்ல நூல்களை வாசிப்பது குறைவாக உள்ளது.

ஆறறிவு படைத்த நாங்கள் உதாரணங் காட்ட ஐந்தறிவு படைத்த விலங்குகள், பறவைகளை ஒற்றுமை, பலம், தந்திரம், விவேகம் போன்றவற்றை குறிப்பிடுகிறோம். ஏனெனில் எம்மால் முடியாதவற்றை இலகுவில் புரிந்து கொள்ள அவற்றினை உதாரணமாகக் கொள்கின்றோம்.

நூலகங்களில் பெரும் எண்ணிக்கையிலான நூல்கள் இருக்கின்ற போதிலும் மர்ம நாவல், திடுக்கிடும் நாவல், அதிரடி திருப்பம் என்னும் நூல்களை தேர்ந்தெடுத் துப் படிக்கின்றோம். இதனாலே எம் மத்தியில் உள்ள ஒற்றுமையான குடும்பங்கள், பலசாலிகள், அறிவாளிகள், விவேகமானவர்கள், தத்துவ மேதைகள் போன்றவர்களை உதாரணம் கூற முடியாமல் விட்டு விடுகின்றோம். திருவள்ளுவர் எழுதிய ஆயிரத்து 330 குறள்களைக் கொண்ட திருக்குறள் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களையும் தெளிவாகச் சொல்கிறது.

நூல் நிலையங்களில் இவ்வாறான கருத்தாழமிக்க பல்வேறு நூல்கள் அடிக்கடி தூசிதட்டி பாதுகாக்கப்படுகின்றன.

கல்வி மூலம் கிடைக்கும் அறிவானது எம்மை அச்சத்திலிருந்தும் அச்சுறுத்தல்களிலிருந்தும் காக்கும் வல்லமை கொண்டது. அதிபர்களும், ஆசிரியர்களும் எமது வழிகாட்டல்கள். அவர்களின் வழி காட்டல்களால் மாணவர்கள் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் ஆளுமைத் தன்மை, புரிந்துணர்வு போன்ற நல்ல விடயங்களைப் பெற முடியும். வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு விடயத்தையும் நாம் பதிவு செய்து வைத்திருப்பது பிற்காலத்தில் எமக்குஅவை வரலாறாகக் காணப்படும்.

சிறுவயதில் வாசிப்பதனால் கிடைக்கும் அறிவானது எதிர்காலத்தில் சிறந்த கல்வியாளராகவும், கவிஞராகவும், எழுத்தாளராகவும், நற்பிரசையாகவும் வாழ வழி வகுக்கும் - என்றார். (ந-9)

# கொஞ்சக் கதையும் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

## பட்ஜெட்டில் நிதி ஒதுக்குங்கள்

சிறுவர் முதல் பெரியவர் வரை பட்டப் பெயர் சொல்வதில் நாங்கள் வல்லுநர்கள். தோற்றத்துக்கு ஏற்ப அவை அமையும். உருவத்தில் மெலிந்து சிறிதாக ஒல்லியாக இருப்பவர் களை கொசு அல்லது நுளம்பு என்போம். இன்று பாவனையிலுள்ள 49 சி.சி.மோட்டார் சைக்கிளுக்கும் நுளம்பு என்றுதான் பட்டப் பெயர். இப்படியான குறுணி உருவத்தைக் கொண்ட குலிசிடைக் குடும்பப் பூச்சியினமான நுளம்புகள் மனித வாடையை முகர்ந்து இரத்த விடாய் கொண்டு மினியிலும் மினியான சிறிஞ்ச் பொருத்திய வாயுடன் அலைகின்றன. மலேரியாவை, டெங்கை, சிக்குன்குனி யாவை, மூளைக் காய்ச்சலைக் காவி வரும் இவை மீண்டும் யானைக்கால் நோயையும் தூக்கி வரலாம்.

புல்லைத் தின்னும் பசு நமக்குப் பாலைத் தருகிறது. பாலைக் குடித்து எமது உடலில் ஊறும் இரத்தத்தைக் குடிக்கும் நுளம்பு நமக்கு நோயைக் காவித்தருகிறது. பால் தரும் பசுவை நாம் அடித்து உண்ண, நுளம்போ நமது இரத்தத்தை உண்பதுடன் அடித்தாலும் தப்பி விடுகிறது. நால் வகை இரத்தத்தில் பொசிற்றிவோ நெகற்றிவோ உறிஞ்சப்பட்டு நுளம்பின் கண்டப்பையில் சுரக்கும் நொதியங்களுடன் அதன் உணவாகிறது. கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் ஏதோ வகையில் உணவு கிடைக்கையில் நுளம்புக்கு இரத்தம்தான் உணவாக வேண்டுமா என்பது இயற்கைச் சமநிலை பேணும் படைப்பின் ரகசியமே என்பது தெளிகிறது.

நுளம்பு பெருகும் சூழலைப் பேணாதீர்கள். அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான பணிகளும் இடையூறாக இராதீர்கள். வழங்கப்படும் ஆலோசனைகளைக் கருத்தில் எடுங்கள். ஆளுக்காள் வசதியிருந்தால் நுளம்பு வலைக்குள் சிறைப்பட்டுக் கொள்ளுங்கள். வீட்டில் ஊதுபத்தி இல்லாவிடினும் கொசு வர்த்தி நிச்சயம் இருக்கட்டும். ஒவ்வொரு குடும்பமும் மாத பட்ஜெட்டில் நிதி ஒதுக்கும் நிலையில் நுளம்புக் கொல்லிகள் இன்று பிரகடனப்படுத்தாத அத்தியாவசியப் பொருளாகிவிட்டுள்ளன. அலுவலகத்தில் பணிபுரிபவர்களையும் சுவை பார்ப்பதற்கு அங்குள்ள மேசைகள், கபினற்களுக்குக் கீழேயும் இவை காத்திருக்கின்றன. அலுவலர்கள் தமது பையில் ஒரு நுளம்புச் சுருளையும் கொண்டு செல்லும் கட்டாயம் நெருங்கி வருகிறது.

## மாதாந்த கொடுப்பனவுகளை திருமுறிகண்டியில் பெறலாம்

கிளிநொச்சி, டிசெ.9
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவு தொகை நோய் களுக்கான கொடுப்பனவு 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக் கான ஆயிரம் ரூபா கொடுப்பன வுகள் ஆகியவற்றின் டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் திருமுறி கண்டி உப அஞ்சலகத்தில் வழங் கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித் துள்ளார்.

இதுவரை காலமும் இந்தப் பகுதி மக்கள் எட்டு மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி அஞ் சல் அலுவலகத்தில் இந்தக் கொடுப் பனவுகளைப் பெற்று வந்துள்ள னர்.

கொடுப்பனவுகள் பெறுவோர் விடுத்த வேண்டுகோளை யடுத்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி அஞ்சல் அதிபரினால் திருமுறிகண்டி உப அஞ்சல் அலுவலகத்தில் கொடுப் பனவுகள் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## அறநெறிப் பாடசாலை

வவுனியா கல்நாட்டிய குளத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் கல்நாட்டிய குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

கிராமப் புற மாணவர்கள் அறநெறி தொடர்பான அறிவைப் பெறவேண்டும் என்ற சிந்தனைக்கு அமைவாக இங்கு அறநெறிப் பாடசாலையை ஆரம்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

இதனால் கோமரசன் குளம், வேப்பங் குளம், கல்நாட்டியகுளம், கல்வீரன்குளம் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மாணவர்கள் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. (க-421).

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, டிசெ.9
தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் திருமதி பாமா நவரத்தினம் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந-8)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, டிசெ.9
சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவின் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பொதுக் கூட்டம் அண்மையில் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- உ.பரமநாதன், உப தலைவர்-வை. இராசரத்தினம், செயலாளர்-ப.நடராஜா, உதவிச் செயலாளர்- மு.பரமேஸ்வரன், பொருளாளர்- ஆ.சிவபாலச்சந்திரன், நிர்வாக உறுப்பினர்கள் ம.விவேகானந்தன், ச.ஜீவராஜ், வே.பாலசுப்பிரமணியம், க.நடராஜா, திருமதி ம.கீர்த்திநாதன், திருமதி ப.வைத்திலிங்கம். (ந-9)

## றெக்சியன் கொலை குறித்து வலி .தென்மேற்கு பிரதேச சபை அனுதாபத் தீர்மானம்

நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் டானியல் றெக்ஷயன் கொலை செய்யப்பட்டமை குறித்துக் கவலை தெரிவித்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தியதுடன் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் உப தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபை உறுப்பினரான கே.கௌரிகாந்தன் அனுதாபத் தீர்மானத்தை முன்மொழிய உறுப்பினர் குமணன் வழி மொழிந்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது. (ந)

## நாய் குறுக்கே பாய்ந்தது; விபத்தில் சிக்கி 3 பேர் காயம்

ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதியதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காய மடைந்தனர்.

மீசாலைப் பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ்.செல்வ குமார் (வயது-38), அவரது மனைவியான செல்வகுமார் கவிதா (வயது-34), மகனான செல்வகுமார் கவிஞன் (வயது-8) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தாயும் மகனும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-9)


### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை மெத்தக்கடைச்சந்திக்கும், 4 ஆம் குறுக்குத் தெருவிற்கும் இடையில் தும்பளை வீதியில் சுற்று மதில் கிணற்றுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 740 3369
(40041)(4.8.3)

### சேவைநலன் பாராட்டு



வே.கனகசபாபதி
B.A. Hons, Dip in Edu, Dip in Eng
ஆசிரியர்,
யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம்

ஆசிரியர் சேவையில்

| | |
|---|---|
| நு/ஹோல்புறுக் த.ம.வி | 12.03.1984-17.08.1989 |
| யா/சரவணை நாகேஸ்வரி ம.வி | 18.08.1989-17.08.1994 |
| யா/கொழும்புத்துறை புனித ஜோசப் ம.வி | 18.08.1994-20.04.1996 |
| யா/வவுனியா தமிழ் மத்திய ம.வி | 21.04.1996-30.06.1997 |
| யா/புனிதர் சாள்ஸ் ம.வி | 01.07.1997-09.12.2013 |

எமது வித்தியாலயத்தில் பதினாறு வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி அகவை அறுபதில் இன்று ஓய்வுபெறும் எமதருமை ஆசான் இனிவரும் காலங்களிலும் தனது துணைவி, பிள்ளைகளுடன் உடல், உள ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
(40987)(10.6.3)

### NEW SCIENCE HALL JAFFNA
விடுமுறை கால வகுப்பு
2014 A/L
சடப்பொருளின் இயல்புகள்
MR.N. கபிலன்
MON, TUE, WED, THU, FRI
1.00 - 3.00 pm
ஆரம்பம் : 09.12.2013
MONDAY 1.00pm (சி/14313) (7.8.3)

### வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு எங்கும் கிடைக்காத கட்டணச்சலுகை
✓ சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில்
✓ அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
✓ 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

இணைநிறுவனம் : அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

# மக்களுடைய பிரச்சினைகளுக்கு கிராமத்தில் தீர்வு காணுங்கள்

*புதிய முறைமை அவசியம் என்கிறார் ஜனாதிபதி*

கொழும்பு.டிசெ.10

கிராமப் புறங்களில் வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண கிராமத்துக் குள்ளேயே தீர்வுகளை காணும் முறை யொன்று அவசியம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் தார்.

பிபில பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் வறுமை நிலையை மேலும் குறைக்க வேண்டும். அரசு விவ சாயம் மற்றும் சம்பிரதாய உரிமை கள் தொடர் பில் நம்பிக்கைகளைக் கொண்டுள்ளது.

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அபிவி ருத்தியின் பலாபலன் களை கிராமிய மக்களும் அனுபவித்து வருகின்ற னர்.

நாட்டின் எதிர்கால சந்ததி யினரை ஆரோக்கியமான வர்களாகவும் வலு வானவர்க ளாகவும் உருவாக்கி நாட்டை அபிவிருத்தியைநோக்கி இட்டுச் செல்ல சகல ரும் நடவடிக்கை களை எடுக்க வேண் டும். - என்றார். (ச)




**கணித வகுப்புகள் ஆரம்பம்**

ஆண்டு 9, 10, 11 (O/L)

ஆரம்பம் : 09.12.2013 - நேரம்: பி.ப. 3.00மணி

**பி.அருள்நேசன்**

41, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

TP : 077 0381304


## உதவிக் கொடுப்பனவை திங்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுங்கள்

ஏறாவூர்.டிசெ.9

இந்த மாதம் மாதாந்த பொது சன உதவிக் கொடுப்பனவு பெறுவதற்குரிய கால எல்லை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தபாலதிபர்கள் தெரிவித்தனர்.

வழமையாக மாதம்தோறும் ஐந்தாம் திகதியி லிருந்து 15 ஆம் திகதி வரை ஆயிரம் ரூபா வுக்கான கொடுப்பன வும், 15 ஆம் திகதியிலி ருந்து 25 ஆம் திகதி வரை 250 ரூபாவுக்கான கொடுப் பனவும் வழங்கப்படுவது வழக்க மாகும்.

இந்த இரண்டு வகையான மாதாந்த பொது சன உதவிக் கொடுப்பனவுகளையும் இன்று திங்கட்கிழமைக்கு இடையில் பெற்றுக்கொள் ளுமாறு கோரப்பட்டுள்ளது. அதனால் இந்தப் பணத்தைப்பெற பயனாளிகள் தபாலகங் களில் முண்டியடித்து வருகின்றனர்.

இந்தக் கொடுப்பனவு இன்று திங்கட்கிழமை பெற்றுக்கொள் ளாதவர்கள் அதனை மீண் டும் பெற முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருட இறுதி கணக் குகள் நேர காலத்து டன் முடிக்க வேண்டி யிருப்பதால் பிரதேச செயல கங்கள் மூலம் தமக்கு இவ்வாறு குறு கிய காலத்துக்குள் கொடுப்பனவுகளை வழங்குமாறு தபால திபர்கள் தெரிவித்த னர். மாதாந்த பொது சன உதவிக் கொடுப் பனவு பெறுவோ ருக்கு ஒரே நேரத்தில் பணம் வழங்கப்பட வேண்டி யுள்ளதால் சில தபாலகங்களில் இடநெருக்கடி ஏற்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

---

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் பொன்னுத்துரை

கரணவாய் மத்தி பயிற்றஞ்சாட்டியை பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னுத்துரை நேற்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தேம்பாமலரின் (மலர்) அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான மயில்வாகனம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் – அன்னம்மா தம்பதியரின் மருமகனும் ராஜ்குமார் (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), நந்த குமார் (இ.போ.ச. பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (கனடா), செல்வி (லண்டன்), சர்மிளா (லக்கி - நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனும் ந.அமிஸ்கா, ரா. கரிகாலன், ரா. ஆதித்தியன், த.அன் றீற்றா, ஜெ. ஹரிஸ்ணா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட் கிழமை மு.ப. 11.00 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்துக்கு எடுத்து ச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளள்வும்.

பயிற்றஞ்சாட்டி
கரணவாய் மத்தி
கரவெட்டி

தகவல்
பொ. நந்தகுமார் (மகன்)
T. P : 021 2262390

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)



பூநகரியைப் பிறப்பிடமாகவும், இல. 99 திருநகர்வடக்கு கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கண பதிப்பிள்ளை விஸ்வலிங்கம் நேற்று முன்தினம் (07.12.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவநேசத்தின் பாசமிகு கணவரும் நாகேந்திரன் (மீனாட்சி நகைமாடம் கிளிநொச்சி), நவரத்தினம் (நித்தியா நகை மாடம் கொழும்பு) காலஞ் சென்ற சண்முகம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆனந்தலட்சுமி (கொட்டகலை), சிவகுமாரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அம்பிகைபாலன் (பிரான்ஸ்), சிவகந்தராசா (லண்டன்), எழில் நேசன் (லண்டன்), கலாநிதி, நேமிநாதன், பேரானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாராணி, கீதாஞ்சலி, மலர், சாளினி காலஞ்சென்ற நிர்மலராசா ஆகியோரின் மாமனும் குகனேஸ்வ்ரன், பாமினி ஆகியோரின் பெரியதந்தையும் சாயிதா, சாயிமதுசன், ஜெனார்த்தனன், ஜெசிந்தா, செந்தூரன், செந்தூரி, ஜெயதீபன், குலசேகரி, குலதர்சன், சிவமைந்தன், தர்சிகா, துளசி, கவிராஜ், பிரியங்கா, சரண்ராஜ், கார்த்திகா ஆகியோரின் பேரனும் அபிசாஜி, சஞ்சாய் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

---

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்-2013

*யா/கலாநிதி.ஆ.தியாகராசா மத்திய ம.ம. வித்தியாலயம்*
*[காரைநகர் இந்துக் கல்லூரி]*

தலைவர்: திருமதி வா.தவபாலன் (அதிபர்)
காலம்: 21.12.2013 பி.ப. 2.00 மணி
இடம் : கல்லூரி மண்டபம்

யா/ கலாநிதி.ஆ.தியாகராசா மத்திய மகா வித்தி யாலயத்தின் (காரைநகர் இந்துக் கல்லூரி) பழைய மாணவர்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் மேலே குறிப்பிட்டவாறு நடைபெறவுள்ளது. கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன் புடன் அழைக்கின்றோம்.

திருமதி வா. தவபாலன் — தலைவர்
இ.திருப்புகலூர் சிங்கம் — செயலாளர்

(சி/14317)(4.6.3)

---

## மரண அறிவித்தல்

### ஏகாம்பரம் கதிர்காமத்தம்பி

டச்சு றோட் மூளாயை வசிப்பிடமாக கொண்ட ஏகாம்பரம் கதிர்காமத்தம்பி நேற்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கண வரும் பாலசந்திரா (டுபாய்), பாலசூரியா (ஆஸ்திரேலியா), நிர்மலா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பா. மாலினி (ஆசிரியை), பா. நீலவேணி, த. சிவரூபன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பத்தானைக் கேணியடி
டச்சு வீதி, மூளாய்.

தகவல்:
க. பாலச்சந்திரா
021 2250490

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இராஜரட்ணம் (மொஸ்கோ)



அளவெட்டி மத்தி, கும்பிளாவளையைப் பிறப்பிடமாகவும் மேலையப்புலம் மாரியம்மன் வீதி, அளவெட்டி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜரட்ணம் (மொஸ்கோ) நேற்று (08.12.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமக னும் ஜெயலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ் சென்றவர்களான ஜெயராஜ், கிருஸ்ணராஜ் மற்றும் ஜெயரூபி, ஜெயலதா, ஜெயச்சந்திரிகா, புவிராஜ் (லண்டன்), வரதராஜ் (Halo நிறுவன பணியாளர்), ஈழவேந்தன், கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஸ்ணமூர்த்தி, ரவிக்குமார், ராஜேந்திரகுமார், தர்சினி (லண்டன்), விஜிந்தினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் கோயில் வீதி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

(40988)
(7.6.3)

தகவல்: வரதன்
[மகன்]

# இலங்கையை கடுமையாக அழுத்தவேண்டும் பிரிட்டன்

## அந்நாட்டிடம் தமிழ் அமைப்புகள் கோரிக்கை

இலங்கை மீது பிரிட்டன் அதிக அழுத்தம் கொடுக்கவேண்டும் எனப் பிரிட்டனில் உள்ள தமிழ்ச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விதித்த காலக்கெடு முடிவடையும் 2014 மார்ச் மாதத்தில் அனைத்துலக விசாரணைக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மேலும் அழுத்தங்களைப் கொடுக்க வேண்டும் எனத் தாம் கோருகின்றனர் என பிரிட்டன் வாழ் தமிழர்கள். அந் நாட்டு நிழல் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் அலெக் சாண்டரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுடன் நிழல் வெளியுறவு அமைச்சர் அலெக் சாண்டர் சந்திப்பொன்றை மேற் கொண்டிருந்த வேளையிலேயே தமிழ் மக்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர். இலங்கை அரசு தான் இழைத்த மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் மீளிணக்கப் பாட்டை மேற்கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபடாவிட்டால் இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு உடனடியாகக் தனது தொழிற் கட்சியுடன் இணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுக்குமாறு கமரூனிடம் வலியுறுத்துவேன் என அலெக்சாண்டர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டனில் செயற்படும் தமிழர் தகவல் மையம், உலகத் தமிழர் பேரவை, தொழிலாளருக்கான தமிழர் அமைப்பு, இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு, பிரிட்டன் தமிழர் பேரவை, இந்துக் கோயில்கள் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் இளையோர் நிறுவனம் போன்றன பிரிட்டன் நிழல் வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பில் கலந்துகொண்டன.

# மன்மோகனின் பயணம்: எமக்கு எதுவும் தெரியாது

## கைவிரித்தது இந்தியத் தூதரகம்

கொழும்பு, டிசெ. 9

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்து அங்கு வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனை சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

"யாழ்ப்பாணத்துக்கு வருமாறு இந் தியப் பிரதமருக்கு வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் விடுத்த அழைப்பு குறித்து எமக்கு அறிவிக்கப்படவில்லை. உண்மையில் இந்த அழைப்புக் குறித்து நாம் நாளிதழ்களிலேயே படித்து அறிந்து கொண்டோம்" என்று இந்தியத் தூதரக மத்திய பொது தகவல் அதிகாரியான கௌரவ் அலுவாலியா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலமாகவோ அல்லது வெளிவிவகார அமைச்சின் ஊடாகவோ இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம். இந்த அழைப்பு இந்தியத் தூதரகத்தின் ஊடாக அனுப்பப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குடாநாட்டில் மேலும் சில அலுவலகங்கள் மூடப்படும்

## ஈ.பி.டி.பி. கட்சி விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகங்கள் சிலவற்றையும் அகற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். நெடுந்தீவு, தீவுப் பகுதிகளில் இருந்து கட்சி அலுவகங்கள் அகற்றப்பட்டமை திடீர் நடவடிக்கை அல்ல என ஈ.பி.டி.பி. கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நெடுந்தீவிலிருந்து எமது கட்சி அலுவலகம் நீக்கப்பட்டதையும், யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் உள்ள எமது அலுவலகங்களில் சிலவற்றை எதிர்காலத்தில் அகற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதையும் திடீர் நடவடிக்கையாகவோ, அவசரப்பட்ட நடவடிக்கையாகவோ கருத முடியாது.

நீண்டகாலமாகவே எமது அலு வலகங்களை ஒழுங்கமைப் பது மற்றும் கட்சியின் கட்டமைப்பை மீள் ஒழுங்கு செய்வது தொடர்பில் ஆலோசித்து வந்தோம்.

எனினும் இடையில் தேர்தல்கள் வந்ததாலும் குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்த அரசியல் செயற்பாடுகளை பூர்த்தி செய்யவேண்டிய தேவை இருந்ததாலுமே இந்தப் பணிகள் காலதாமத மாகின. உள்ளக நிர்வாகக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்து கட்சியை சீரமைப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் - என்றுள்ளது. (ஐ)



சிறந்த பாடலாசிரியராகவும், சொற்பொழிவாளராகவும் மற்றும் தேசிய நீர்பாசன கலாசாரத்தை பற்றிய ஆராய்ச்சியாளருமான நிமல் வீரதுங்க எழுதிய 'சமல் ராஜபக்ஷ வாரி க்ருஷி சிந்தன' எனும் புத்தகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் அலரிமாளிகையில் நடைபெற்றது. சமல் ராஜபக்ஷ கமத்தொழில் அமைச்சராக இருக்கும் போது அத் துறையின் நலனுக்காக செய்த புது மாற்றங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நீர்ப்பாசனத் துறைக்காக செய்த புது வேலைத் திட்டங்களையும் மையமாகக் கொண்டு இப் புத்தகத்தை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்கா செல்கிறார் மஹிந்த

கொழும்பு, டிசெ. 9

நிறவெறிக்கு எதிராகப் போராடி கறுப்பின மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்த தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் இறுதிச்சடங்கில் பங்கேற்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்கா செல்லவுள்ளார்.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க வெளியிட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி இரவு காலமான நெல்சன் மண்டேலாவின் இறுதி ஊர்வலம் எதிர்வரும் 15 ஆம் திகதி, அவர் பிறந்து வளர்ந்த மலைப்பகுதி கிராம மான கியூனு என்ற இடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்க வரலாறு காணாத வகையில் உலகத் தலைவர்கள் தென்னாபிரிக்காவுக்கு படையெடுக்கவுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, முன்னாள் ஜனாதிபதிகள், புஷ், கிளின்டன், மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், சோனியாகாந்தி உள்ளிட்ட ஏராளமான தலைவர்கள் தென்னாபிரிக்கா செல்லத் தயாராகி வருகின்றனர்.

இந்தநிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச் சர் பீரிஸும் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதிவரை, கென்யாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ள முன்னரே முடிவு செய்திருந்தனர்.

கென்யா பயணத்துக்கு முன்னர் தென்னாபிரிக்கா சென்று நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி மஹிந்த திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காணாமற்

போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

திருகோணமலை நகர மத்திய பஸ் நிலையத்துக்கு அருகில் முற்பகல் 11 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமாகுமென்றும், இதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களும், காணாமற்போனோரின் உறவுகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ங-5)

### யாழ்.மாவட்ட

ஆண்டு 39 நலன்புரி நிலையங்களும், 2013 ஆம் ஆண்டு 34 நலன்புரி நிலையங்களும் யாழ்.மாவட்டத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு 39 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 256 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில், 2013 ஆம் ஆண்டு 34 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 232 குடும்பங்கள் வசிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் 5 நலன்புரி நிலையங்களில் 24 குடும்பங்கள் வசிப்பதாகவும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. (த-5)

### இலங்கை மீது

ஆண்டு இடம்பெற்ற சமாதானச் செயற்பாடுகள், அதில் ஏற்பட்ட தோல்வி, இலங்கையில் மூண்ட இறுதிப்போர், போரின் போது பொது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், முள்ளிவாய்க்காலில் இறுதிப்போரில் நடைபெற்ற மனிதப் படுகொலைகள் என்பன தொடர்பாக இந்தச் சபை விசேட கவனம் எடுத்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதுதவிர 1980 ஆம் ஆண்டிலிருந்து இறுதிப்போர் வரை இலங்கையில் நடைபெற்ற போர் மற்றும் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் பங்களிப்பு என்ன என்பது குறித்தும் இந்தச் சபை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. குறிப்பாக 1987 ஆம் ஆண்டு இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை கொன்றது தொடர்பாகவும், இறுதிப்போரின் போது அந்த நாடு கொண்டிருந்த வகிபாகம் தொடர்பாகவும் இந்தச் சபை கவனம் செலுத்த உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சபையின் அமர்வில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும், சனல் - 4 தொலைக் காட்சியில் இறுதிப்போர் பற்றிய ஆவணப் படங்களைத் தயாரித்த ஊடகவியலாளர் கெலும் மெக்ரேயும் உரையாற்றவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ங-5)

### அனைத்துலக

லான கருத்துகளை முன்வைப்பது தவறானதல்ல. ஏனென்றால் அரசு, போர் முடிவடைந்தவுடன் சர்வதேசத்தினருக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றையேனும் இன்னமும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை.

கொழும்பில் சென்ற மாதம் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டின் போதும் சர்வதேச தலைவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் இது விடயத்தில் அரசு ஒருபோதும் பின்வாங்காது என்றும் உறுதியளித்தார்.

ஆனால், அரசு இதுவரையிலும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து கூறிய ஒன்றையேனும் செயற்படுத்துவதாக தெரியவில்லை. இதனாலேயே சர்வதேச சமூகம், அரசுக்கு அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரின் அரசுமே காரணமாகும். இவர்களின் செயற்பாட்டால்தான் இலங்கைக்கு சர்வதேசத்தின் மத்தியில் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை மாற்றமடைந்து, நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக இருக்க வேண்டுமெனில் அரசு சர்வதேசம் கூறுவதைப் போன்று உள்ளக விசாரணையை, எவ்வித பாரபட்சமுமின்றி எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் மேற்கொண்டே ஆகவேண்டும். இதனால், எவருக்கும் பாதிப்பேற்படா வண்ணம் இருப்பதும் முக்கியமானதாகும். இல்லையெனில் சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கையால் ஒருபோதும் தப்பிக்கவே முடியாது" என்றார். (ங-சி)

### பல்கலைக்கு

பான நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மாவெல்லகே தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் அடுத்த வருடம் மார்ச் மாதம் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் தெரிவாகும் மாணவர்களை அடுத்த வருடம் நவம்பர் மாதம் பல்கலைக் கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

மேலும் 2014 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் சர்வதேச பல்கலை கழகங்களின் நாட்காட்டிக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப் பட வுள்ளனர்.

### குடும்பக்

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின்படி இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை யாருக்கும் வற்புறுத்தியோ பயமுறுத்தியோ பிரயோகிக்கப்படவில்லை. அதிகமானவர்களுக்கு ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்பட்டதே சமூக மட்டத்தில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி உள்ளது. அத்துடன் அவர்களுக்கான கால அவகாசம் வழங்கப்படாமையும் குற்ற உணர்வு ஏற்பட காரணமாகவுள்ளது என குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரைகளின் அடிப்படையில் சுகாதார அமைச்சு பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகின்றது.

♦ ஒரு சிறிய கிராமத்தில் பெருந்தொகையான சுகாதார உத்தியோகத்தர்கள் ஒரே நாளில் சென்று குடும்பக் கட்டுப்பாடு முறையை மக்களுக்கு வழங்கியமை முற்றாக தவிர்த்து இருக்கப்பட வேண்டிய விடயம்.

♦ இனி வரும் காலங்க ளில் இவ்வாறான பிரச்சினை கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் உறுதிப்படுத்தும் விதமாக திணைக்கள நடைமுறை அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

♦ போரினால் உயிரிழப்புக்களை சந்தித்த எமது பிரதேசங்களில் குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிப்பதற்கான அவசியமோ, அவசரமோ தற்போது இல்லை.

♦ ஆனாலும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் தேவையுடையோர் அவற்றை சுகாதார நிலையங்களில் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட வேண்டும்.

♦ கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு மற்றும் கிராமங்களில் பயன்படுத்தப்பட்டது ஒரு தற்காலிக கருத்தடை சாதனமே. இதனை ஆகக் கூடியது ஒருவர் ஐந்து வருடங்களுக்கு பயன்படுத்தலாம்.

♦ இதனை மீள அகற்றி விட விரும்புபவர்கள் தத்தமது கிராமங்களுக்குரிய மருத்துவ மாதுக்களுடன் தொடர்பு கொண்டு கட்டணம் ஏதும் செலுத்தாமல் அவற்றை அகற்ற முடியும். - என்றுள்ளது. (ஐ)

# மைலோ வெற்றிக் கிண்ணம் மாவட்ட உதைபந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.9
நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் , மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம், நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம், தீவக விளையாட்டுக் கழக அணி, யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் , றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை மோதவுள்ளன.

(ஙு-23)

# வென்றது பாடும்மீன்

யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணியிரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி, தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ஙு-23)

## அமைச்சுக்களுக்கிடையே விளையாட்டுப்போட்டிகள்



யாழ்ப்பாணம் டிசெ.9
வடமாகாண சபை அமைச்சுக்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி இன்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியிலும், எல்லே போட்டி செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் இடம் பெறவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஙு-23)

# ஈஸ்ரன் ஈகிளுக்கு அணிக்கு இரையானது ஒலிம்பிக்ஸ்

யாழ்ப்பாணம் டிசெ.9
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் ஏவ்.ஏ. வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கடந்த வாரம் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ஙு-23)

## இளம்பறவை வாகை

யாழ்ப்பாணம், டிசெ.9
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப் பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணிக்கும், புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கு மிடையிலான ஆட்டத்தில் சிலாவத்தை இளம் பறவை விளையாட் டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம் டிசெ.9
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப் பிரிவு நடத் தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஙு-23)

* * *

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள உதயன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

சுழிபுரம் ஸ்ரீ கண்ணன் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகம். (ஙு-86)

* * *

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

அராலி வடக்கு திருமகள் திருமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து துணைவி நியுசென்னிஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

இன்னொரு ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. (ஙு-86)

## பாஷையூர் அன்ரனீஸ் உதைபந்து இறுதியில்

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (23)

# தலைவர் வெற்றிக் கிண்ண உதைபந்து அரையிறுதி



யாழ்ப்பாணம், டிசெ.9
யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ஙு-23)

## சாதித்தது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், டிசெ.9
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ ' அணியை எதிர்த்து சுப்பஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் விளை யாட்டுக்கழக 'ஏ' அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# வவுனியா யங்ஸ்ரார் கிரிக்கெட் ஆட்டங்களின் முடிவுகள் சில

யாழ்ப்பாணம் டிசெ.9
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

வவுனியா பொலிஸ் அணிக்கும் பிரம்படி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா பொலிஸ் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கினை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் இந்திக்க 28 ஓட்டங்களையும், திலந்த 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரம்படி விளையாட்டுக்கழக அணி சார்பில் தனு. குகன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரம்படி விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 37 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பிரஜீத் 15 ஓட்டங்களையும் குகன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் வவுனியா பொலிஸ் அணியின் இந்திக்க சேனநாயக்க ஆகியோர் தலா 2 இலக்குகளையும் நிலந்த ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் வவுனியா பொலிஸ் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

புரட்சி விளையாட்டுக் கழக அணிக்கும் அல் -அமான் விளையாட்டுக்கழக அணிக்



கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய புரட்சி விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனுஷன் 25 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார். பந்து வீச்சில் அல்-அமான் விளையாட்டுக்கழக அணி சார்பில் யாமா, ஷாப்தீன் 2 இலக்குகளையும் ஹக்கீம் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

35 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அல்- அமான் விளையாட்டுகழக அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கினை இழந்து 28 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் இம்ஜீத் 14 ஓட்டங்களையும் ஷாப்தீன் 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் புரட்சி விளையாட்டுக்கழக அணி சார்பில் ராஜ் 2 இலக்குகளையும் துஷியந்தன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

இதில் புரட்சி விளையாட்டுக் கழக அணியினர் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும் வெள்ளவத்தை சி.சி.விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வெள்ளவத்தை சி.சி.விளையாட்டுக் கழக அணியினர் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் நிலான் 14 ஓட்டங்களையும் துஷாந்த் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணி சார்பில் மனோஸ், ஜனா ஆகியோர் 2 இலக்குகளையும் சசி ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

மனோஜ் 15, தசரிதன் 14 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் வெள்ளவத்தை சி.சி.விளையாட்டுக்கழக அணி சார்பில் சந்தோஸ், றிகான் ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர்.

(ஙு-23)



# வெற்றியை நெருங்கும் ஆஸி

இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலியா அணிக் குமிடையிலான ஆஷஷ் தொடரின் இரண்டா வது போட்டியின் நான்காம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி முழுமையான ஆதிக் கத்தை வெளிப்படுத்தி வெற்றியை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

ஓர் இலக்கை இழந்து 35 ஓட்டங்களுடன் மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, மிற்சல் ஜோன்சனின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்காது 172 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.3 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களுடன் காணப்பட்ட இங்கிலாந்து, தனது அடுத்த 7 இலக்குகளையும் 24 ஓட்டங்களுக்குள் இழந்தது.

துடுப்பாட்டத்தில் இயன் பெல் ஆட்டமிழக் காது 72 ஓட்டங்களையும், மைக்கல் காபெரி 60 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களுக்கு அதிகமாகப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா அணி சார்பாக மிற்சல் ஜோன்சன் 40 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும், நேதன் லயன், பீற்றர் சிடில், ஷேன் வொட்சன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



398 ஓட்டங்களால் முன்னிலை வகித்த போதிலும், ஃபொலோ ஒன் முறையில் இங்கிலாந்தை ஆடப் பணிக்காது, ஆஸ்திரே லிய அணியே தொடர்ந்தும் துடுப்பெடுத் தாடியது. இதன்படி மூன்றாம் நாள் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலியா அணி சார்பாக டேவிட் வோணர் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களை யும், ஸ்டீவன் ஸ்மித் ஆட்ட மிழக் காது 23 ஓட்டங்களையும், மைக் கல் கிளார்க் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 2 இலக்கு களையும், மொன்ரி பனசர் ஓர் இலக்கை யும் கைப்பற்றினர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியதும் மேலதிகமாக துடுப்பெடுத்தாட களமிறங்காமல் இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது ஆஸ்திரே லிய அணி.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டுமானால் 530 ஓட்டங்களைப் பெற்றாக வேண்டிய கட்டா யத்தில் இறங்கிய இங்கிலாந்து அணி, தாக்குதல் ஆட்டத்தைத் தவிர்த்து தற்காப்பு ஆட்டத்தில் இறங்கியது. இதனால் ஓட்ட வேகம் மிக மெதுவாகவே இருந்தது. இங்கிலாந்து வீரர்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி இலக்கைக் காப்பதிலேயே குறியாக இருந்தார்களே தவிர ஓட்டங்களைக் குவிப்பதில் கவனம் எடுக்க வில்லை. இங்கிலாந்து அணியின் ரூட், பீற்றர் ஸன் ஆகியோரைத் தவிர மற்றவர்கள் பொறுப் பான ஆட்டத்தை வெளிப்படுத்தாததால் நேற் றைய நான்காம் நாள் ஆட்டமுடிவில் இங்கி லாந்து அணி ஆறு இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ரூட் 87 ஓட்டங்களையும், பீற்றர்சன் 53 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். களத்தில் மத்யூபிரையர் 31 ஓட்டங்களுடனும், ஸ்ருவர்ட் ப்ரோட் 22 ஓட்டங்களும் ஆட்டமிழக் காது இருந்தனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி யின் பீற்றர் சிடில் 2 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன், லயன், ஸ்மித், ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தியிருந்தனர்.

போட்டியில் இறுதிநாள் இன்றாகும். எனவே இங்கிலாந்து அணியின் எஞ்சிய நான்கு இலக்குகளையும் வீழ்த்தி இந்தத் தொடரில் இரண்டாவது வெற்றியையும் ஆஸ்திரேலியக் கங்காருகள் சுவை பார்ப்பது உறுதியாகியுள்ளது.

(ஙு)

# வெளியானது உலகக் கிண்ண அட்டவணை

உலக கிண்ண உதைபந்து தொடர் அட்ட வணை வெளியாகியுள்ளது. ஆயினும் இந்த அட்டவணையைப் பார்த்து, நடப்பு சம்பியன்' ஸ்பெயின் மிரண்டு போயுள்ளதாக தெரிகிறது. பிபா' உதைபந்து கூட்டமைப்பு சார்பில், 20 ஆவது உலகக் கிண்ணத் தொடர், 2014, ஜூன் 12 முதல் ஜூலை 13 வரை, பிரேஸிலில் நடக்கவுள்ளது. இதற்கான அட்டவணை பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் வெளியானது.

மொத்தம் 32 அணிகள் பங்கேற்கும் வகையில் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, 32 நாள்களில் 64 போட்டிகள் நடைபெறுவுள் ளன. லீக் முறையில் நடக்கும் போட்டிகள் முடிந்த பின், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பெறும் அணிகள், விலகல் முறையிலான போட்டிகளில் பங்கேற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும்.

## பிரேசில் சாதகம்:

ஜூன் 12 இல் நடக்கவுள்ள முதற்போட்டியில் (ஏ' பிரிவு), தொடரை நடத்தும் பிரேஸில், குரோ சிய அணிகள் மோதவுள்ளன. சொந்தமண் என்பதால் பிரேஸில் அணி இந்த முறை கிண்ணத்தை வெல்லும் என, நம்பப்படுகிறது.

## ஸ்பெயினுக்குச் சிக்கல்:

நடப்பு சம்பியன்' ஸ்பெயின் அணி, இந்த முறை பி' பிரிவில் உள்ளது. இத்துடன் நெதர்லாந்து, ஆஸ்திரேலியா அணிகளும் உள்ளன. கடந்த 2010ல், லீக் சுற்றில் சிலி அணியை சிரமப்பட்டு தான் ஸ்பெயின் வென்றது.

தவிர, ஸ்பெயின் அணி தனது முதல் போட்டியில் (ஜூன் 13) , 2010 தொடரின் பைனலில் வீழ்த்திய நெதர்லாந்து அணி யைத் தான் சந்திக்கிறது.

இதுகுறித்து முன்னணி பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியில், பி' பிரிவை 'குரூப் ஆப் டெத்' என தெரிவித்துள்ளன. ஸ்பெயின் அணியின் முன்னணி வீரர்கள் இனியஸ்டா, அலோன்சோ, ஜாவி ஹெர்னாண்டஸ் காயத் தால் அவதிப்படுவதும் பலவீனம் தான்.

கோல் காப்பாளரும் அணித் தலைவ ருமான இகர் கேசிலாஸ், ரியல் மாட்ரிட் அணியில் மாற்று வீரராகத் தான் உள்ளார். சமீபத்திய போட்டிகளில் திணறல் ஆட் டத்தை வெளிப்படுத்தி வருகிறது ஸ்பெயின். இந்த ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடந்த கான்பெடரேஷன் தொடர் இறுதியில், ஸ்பெயின் அணி, பிரேஸிலிடம் 0:3 என்ற கோல் கணக்கில் வீழ்ந்தது.

இதுபோன்ற காரணங்களால் ஸ்பெயின் அணி, அடுத்த சுற்றுக்கு முன்னேற வேண்டு மாயின் கடுமையாக போராட வேண்டிய நிலை தான் உள்ளது. இதனால், மீண்டும் உலககிண்ணத்தை தக்கவைப்பது கடினம் தான்.

உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட தொடரின் பங்கேற்கும் நாடுகளும் பிரிவுகளும் -

| பிரிவு ஏ' | பிரிவு பி' | பிரிவு சி' | பிரிவு டி' |
|---|---|---|---|
| பிரேசில் | ஸ்பெயின் | கொலம்பியா | உருகுவே |
| குரோசியா | நெதர்லாந்து | கிரீஸ் | கோஸ்டாரிகா |
| மெக்சிக்கோ | சிலி | ஐவரி கோஸ்ட் | இங்கிலாந்து |
| காமரூன் | ஆஸ்திரேலியா | ஜப்பான் | இத்தாலி |

| பிரிவு இ' | பிரிவு எப்' | பிரிவு ஜி' | பிரிவு எச்' |
|---|---|---|---|
| சுவிட்சர்லாந்து | ஆர்ஜென்டினா | ஜெர்மனி | பெல்ஜியம் |
| ஈகுவடோர் | போஸ்னியா | போர்ச்சுகல் | அல்ஜீரியா |
| பிரான்ஸ் | ஈரான் | கானா | ரஷ்யா |
| ஹோண்டுராஸ் | நைஜீரியா | அமெரிக்கா | தென் கொரியா |

# தொடரை இழந்தது இந்தியா

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் குயின்டன் டி காக், அம்லா சதம் அடித்து, கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 49 பந்துப்பரிமாற்றங்களில் 280 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற தென்னாபிரிக்கா அணி 1:0 என முன்னிலையில் இருந்தது. இரண்டாவது போட்டி நேற்று டர்பனில் நடந்தது. மைதானத்தின் ஈரப்பதம் காரணமாக 49 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் டோனி களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இந்திய அணியில் யுவராஜ் சிங்கிற்கு பதில் ரகானே இடம் பெற்றார். மோகித், புவனேஷ்வர் குமாருக்குப்பதில் உமேஷ், இஷாந்த் சர்மா ஆகியோர் வாய்ப்பு பெற்றனர். தென்னாபிரிக்க அணியில் பர்னலுக்குப்பதில் பிலாண்டர் இடம் பெற்றார்.

தென்னாபிரிக்க அணிக்கு குயின்டன், அம்லா ஜோடி நல்ல ஆரம்பம் அளித்தது. குயின்டன் ஒருநாள் அரங்கில் மூன்றாவது சதத்தை எட்டினார். இவர் 106 ஓட்டங்கள் எடுத்த போது அஷ்வின் சுழலில்' சிக்கினார். பின் வந்த தலைவர் டிவில்லியர்ஸ் (3), மில்லர் (0) ஏமாற்றினர். அம்லா (100) சதம் அடித்து வெளியேறினார். டுமினி (26), கலிஸ் (10) ஓரளவு கைகொடுத்தனர். கடைசி நேரத்தில்





மெக்லாரன், பிலாண்டர் அதிரடியில் மிரட்ட, 49 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில், தென்னாபிரிக்க அணி 6 இலக்குகள் 280 ஓட்டங்கள் எடுத்தது. மெக்லாரன் (12), பிலாண்டர் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியா சார்பில் முகமது ஷமி 3 இலக்குகளைக் கைப்பற்றினார். தொடர்ந்து 281 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு ஷிகர் தவான் ஓட்டங்கள் எதனையும் பெறாமல 'டக்' அவுட்டாகி ஏமாற்றினார். அடுத்து வந்த விராத் கோஹ்லி (0) வந்த வேகத்தில் பவிலியன்' திரும்பினார். ரகானே (8), ரோகித் சர்மா (19) தாக்குபிடிக்கவில்லை. பின் வந்த அணித்தலைவர் டோனி (19) ஏமாற்றினார். ரெய்னா (36) ஓரளவு கை கொடுத்தார். இந்திய அணி 35.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து146 ஓட்டங்களைப் பெற்று 134 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. ரவிந்திர ஜடேஜா 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ற்சொற்சோபி 4 இலக்குகளையும் ஸ்ரெய்ன் 3 இலக்கு களையும் மோர்கல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இப் போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் டி கொக் தெரிவானார் .

இத்தோல்வியின் மூலம் 2:0 என்ற அடிப்படையில் தொடரை இழந்தது இந்தியா.

(நு-400)

**Diploma in Mobile Phone Repairing**
**சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி**

முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில் இணைய விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்) இன்று வரை என்னிடம் 2000 மேற்பட்ட மாணவர்கள் கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில் வாய்ப்பையும் பெற்றுள்ளனர். மேலதிக விவரங்களுக்கு :
077 7110862

**A/L 2015**
தொழில்நுட்பவியல்துறை
விடுமுறை கால வகுப்புக்கள்
இப்பாடத்துறைக்கான அனைத்து பாடங்களும் ஆரம்பத்திலிருந்து மீட்டல் நடைபெறும்
புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்
ஆரம்பம்: புதன் (11/12/2013) காலை 9.00 மணி
D.M.I. ஆரியகுளம் சந்தி

**மணல் விற்பனைக்கு**
கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4½ ரக்ரர் 17,500/=
தொடர்பு: கண்ணா
(40472)(4.6.3)
077 676 6499, 077 759 0792

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
**Learn French The French Way**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள் France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது Certificate உதவுகின்றது ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.
புதிய வகுப்புக்கான அனுமதிகளை முன்பே பெறுவது சிறந்தது
61, Kachchery - Nallur Road Jaffna. T.P: 021 2228093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com

**கணிதம்**
A.K.யசிந்தன்
தரம் 6 முதல் O/L வரையான பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பம்: 09.12.2013
இடம்: KEC யாழ் நகர்
T.P: 077 188 2518
(40949)(4.6.3)

# K-AIMS உடன் இணைந்து ACCA- U.K கற்கைநெறியில்

[சான்றிதல் அளிக்கப்பட்ட பட்டையக்கணக்காளர் சம்மேளனம்- U.K]

## Rs 35,000/=

## பெறுமதியான புலமைப்பரீசிலை பெறுவதற்கு அரிய வாய்ப்பு

**ஏன் ACCA**
- உலகளாவிய ரீதியில் வேலை வாய்ப்பு
- எந்த நாட்டிலும் ACCA கல்வியை தொடரலாம்
- உலகளாவிய ரீதியில் அங்கீகாரம்

**எங்கே ACCA கற்கைநெறியை ஆரம்பிப்பது**
- கொழும்பிலும் யாழ் நகரிலும் இயங்கும் GOLD Approval அங்கீகாரம் பெற்ற நிறுவனமான K-AIMS

**ACCA மூன்று நிலைகளை கொண்டது**

Diploma 6 Months + Degree 1 year + ACCA 1 year

**ஏன் K-AIMS ஐ தெரிவு செய்யவேண்டும்**
- GOLD Approval
- 30 மாணவர்களை மட்டுமே உள்ளடக்கக்கூடிய வகுப்பறைகள்
- ஒவ்வொரு மாணவரும் விரிவுரையாளாரின் நேரடி கண்காணிப்பில் கற்கும் வாய்ப்பு
- வித்தியாசமான கற்பிக்கும் முறைமையை கொண்ட உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற கல்விதகமையை கொண்ட விரிவுரையாளர்கள்
- யாழ் குடாநாட்டில் எங்கு இருந்தும் இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள நிறுவனம்

புதிய பிரிவுகள் December 15ம் திகதி ஆரம்பமாகின்றன
பதிவுகளை December 12ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

K-AIMS
We Make You Progress Everyday..

ALP - STUDENT TUITION GOLD 1/4/2013 - 31/3/2014 ACCA

Colombo
35-1/1, Upatissa Road
Bambalapitiya
0772 555 814 /0770 780 678

JAFFNA
147-2/2, K.K.S Road
[DFCC வங்கிக்கு மேலாக ]
0773 722 104

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.